கோகுலம்

GOKULAM

அக்டோபர் '85 ரு. 2.







மாயூரம் வேதநாயகம் பிள்ளை

பிறந்த நாள்: 11-10-1826 மறைந்த நாள்: 21-7-1889

கோகுலம்

மலர் — 3 இதழ் — 9



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
—பாரதியார்.

1985 அக்டோபர் மாத இதழ்
கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா.

தனிப் பிரதி ரூ. 2/—
ஆண்டுச் சந்தா ரூ. 24/—

அருமைச் சிறுவர் சிறுமியரே,

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி. 'கொட்டகை இல்லாத ஊரில் (அதாவது சினிமாக் கொட்டகை இல்லாத ஊரில்) குடியிருக்க வேண்டாம்' என்று சிலர் அதைப் புதுமொழியாக்கி வருகிறார்கள். ஆனால், பாரதியார் என்ன சொன்னார்? 'பள்ளி இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று சொல்லியிருப்பார் என்றுதானே நினைக்கிறீர்கள்? இல்லை; இல்லை; 'பள்ளிக்கூடம் இல்லாத ஊரைத் தீயை வைத்துக் கொளுத்து' என்றுதான் பாடியிருக்கிறார்.

ஆம், வீதிதோறும் இரண்டொரு பள்ளி. நகர்களெங்கும் பலபல பள்ளி இருக்க வேண்டும் என்று 'கலைமகள் துதி' என்ற பாடலிப் பாடி வந்த அவர்,

'தேடு கல்வி இலாத ஓர் ஊரைத்
தீயினுக் கிரை யாக மடுத்தல்'

என்று சீறுகிறார்.

ஆனால், அவர் காலத்தில் இருந்த நிலையை இப்போது இல்லை. பள்ளிக்கூடம் இல்லாத ஊரே இல்லை என்ற நிலைமை ஏற்பட்டு வருகிறது.

பள்ளிகள் பெருகிவிட்டால் மட்டும் போதுமா? எல்லாரும் படிக்க வேண்டும்; நன்றாகப் படிக்க வேண்டும். படித்துச் சிறப்படைய வேண்டும்.

இதுதான் உண்மையான சரஸ்வதி பூஜை.



நவராத்திரி விடுமுறையிலே உங்கள் வீட்டிலோ அல்லது தெரிந்தவர்கள் வீட்டிலோ கொலு வைப்பார்கள். அங்கு கண்ணுக்கு இனிய காட்சிகளைக் காணலாம்; ஆடலாம்; பாடலாம். அப்போது நீங்கள் அடையும் மகிழ்ச்சியை அதிகப்படுத்த இந்த இதழில் நவராத்திரி நாயகி பற்றிய பதினாறு பக்க வண்ணப் படக்கதை வருகிறது!

-அழ. வள்ளியப்பா.



புகைப்படம்: எஸ்.ஜி.சேஷகிரி


இந்த இதழ் எழுத்தாளர்கள்

புதுவை.கேசவசேகர். கா.மு. சிதம்பரம். அழகாபுரி இளங்கோவன்.



பிருந்தாவனக் கவிஞர்கள்



டி.தட்சிணாமூர்த்தி. அ.உஷாராணி. என்.செந்தில்குமார். ந.சதீஷ்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்






ஏ.அருண். ஆர்.கே. கோபிநாத். எஸ். அரவிந்தன்

மேலட்டை
வண்ணப்படம்:
திலீப்பானர்ஜி

4வது அட்டை
புகைப்படம்:
ஆர்.பி.எஸ். மணி

காந்தி வழி நடப்போம்



பால. நடராசன்

சத்தியம் அன்பு கைக்கொண்டார்
சாந்தம் நிலவ வழி கண்டார்.
எத்திசை போயினும் புகழ்கொண்டார்
ஏந்தல் அவர்பெயர் நிலைகொண்டார்.

நாடு விடுதலை பெற்றிடவே
நாளும் பலதுயர் மேற்கொண்டார்
நீடு புகழைத் தாம்கொண்டார்
நின்றனர் அறவழி கடைசிவரை.

பாவி ஒருவன் குண்டினுக்கே
பாரில் தம்உயிர் தனைஈந்தார்.
சாவிலும் கடவுள் பெயர் சொன்னார்
சற்றும் தீமொழி சாற்றினரோ!

அண்ணல் காந்தி அவர்வழியில்
அனைவரும் நடந்து சென்றிடுவோம்
இன்னல் இல்லாப் பெருவாழ்வை
இனிதே பெற்று உய்ந்திடலாம்.

சித்திரப்புதிர்! 8

ஆழி

1 இந்தப் பழங்காலச் சுவரோவியம் எந்த நாட்டைச் சேர்ந்தது?






2 ஒரு விலங்கு வாயைப் பிளந்து கொண்டிருக்கிறது. என்ன விலங்கு இது?



3 எந்தெந்த விலங்குகளின் கால்கள் இங்கே இருக்கின்றன?



4 இந்தத் தாவரத்திலிருந்து சர்க்கரை தயாரிக்கிறார்கள். என்ன தாவரம் இது?

5 இந்த மத்திய ஆப்பிரிக்க நீக்ரோ பெண்மணி என்ன செய்கிறாள்?



விடை : வேறு பக்கம்

மின்மினிக் கதைகள்


பெருமாள் மாடு

ஆண்டுதோறும் புரட்டாசி மாதத்தில் நடைபெறும் கலைமகள் விழாவிற்கு வரும் புலவர்களுக்கெல்லாம் இராமநாதபுரம் மன்னர் பரிசளித்து அனுப்புவது வழக்கம். சிறப்பான முறையில் விருந்தும், இருபத்தைந்து ரூபாய் பணமுடிப்பும் உண்டு.

ஒன்பதாம் நாள் இரவு, பெருமாள் மாடு வேடம் பூண்ட இருவர் அரசனைச் சந்தித்து ஆடிப் பாடி மகிழ்வித்தனர். அப்போது, அரசன் தன் கைப்பிரம்பால் மாடு வேடம் பூண்டவனை ஒரு தட்டுத் தட்டினார். உடனே, முகமலர்ந்து, மகிழ்ச்சியோடு அவனுக்கு ஐம்பது ரூபாய்ப் பணமுடிப்பைப் பரிசாகக் கொடுத்தார்.

இதுகண்ட அரசவைப் புலவர் மன்னரிடம், ''அரசே! மற்ற புலவர்களுக்கெல்லாம் 25 ரூபாய்தானே பரிசு கொடுத்தீர்கள். இவனுக்கு மட்டும் தாங்கள் 50 ரூபாய் கொடுத்ததன் காரணத்தை நாங்கள் அறியலாமா?'' என்று பணிவோடு வேண்டினார்.

அரசர் சொன்னார்: ''பெருமாள் மாடு பூண்டவனுக்கு உண்மையிலேயே கலையுணர்வு இருக்கிறதா? அல்லது, பரிசு பெறுவதற்காக மட்டும் வேடம் பூண்டவனா?'' என்று ஐயம் கொண்டேன். ஆகவே அவனைச் சோதித்துப் பார்த்தேன். மனிதனுக்கு இல்லாத உணர்ச்சி மாட்டுக்கு உண்டு. மாட்டை எந்த இடத்தில் தொட்டாலும், அந்த இடத்தில் சுளித்துக் காட்டும். அதனால் அவனை ஒரு தட்டு தட்டினேன். அவனும் மாடாக மாறி, அந்த இடத்தை மட்டும் சுளித்துக் காட்டினான். என் உள்ளம் மகிழ்ந்தது. அதனால் இரட்டிப்பாகப் பரிசு கொடுத்து அனுப்பினேன்'' என்றார்.





வாழைப்பழம்

நான் ஒரு தடவை கோவைக்குச் சென்ற போது — கடைத் தெருவில் — வாழைப் பழத்தை விற்கும் ஒருவன், 'வாயப் பயம்' 'வாயப் பயம்' என்றே கூறி விற்றுக் கொண்டிருந்தான்.

நான் அவனைப் பார்த்ததும், அவன் என்னிடம் வந்து தட்டை இறக்கி வைத்து, ''வாயப் பயம் வேணுங்களா?'' என்றான்.

எனக்கு வியப்பு ஒருபுறம்; கோபம் ஒரு புறம். ''நீ எந்த ஊர் அப்பா?'' என்றேன்.

''அவன், ''இயக்கே'' என்றான்.

நான், ''இயக்கேயிருந்து இங்கே எதுக்கு வந்தீங்க?'' என்றேன்.

''அவன், ''புயக்க வந்தேங்க,'' என்றான்.

''இழக்கேயிருந்து பிழைக்க வந்தேன்!'' என்பதையே ''இயக்கே யிருந்து புயக்க வந்தேன்'' என்று அவன் சொன்னதும் எனக்குக் கோபம் அதிகமாகியது.

''ஏம்பா, தமிழை இப்படிக் கொலை பண்ணுகிறீர்கள்?'' என்று அதட்டிக் கேட்டேன்.

அவன் இரண்டு கைகளையும் சேர்த்துக் கும்பிட்டுக் கொண்டே, ''அது எங்க வயக்கங்க'' என்றான்.

நான் உடனே அவனை விட்டு எழுந்தே போய்விட்டேன்.


தமிழுக்கே உள்ளது சிறப்பு 'ழ' கரம். இது தமிழ் மக்களிடத்துப் படுகிற பாட்டை இது நன்றாக விளக்கிக் காட்டுகிறது.

வேலை வாங்கும் முதலாளி

தன்னிடம் வேலைக்கு வரும் வேலைக்காரர்கள் அனைவரையும் முட்டாள்கள் என்றே கருதி, எதையும் விவரமாக எடுத்துச் சொல்லி அனுப்புவார் முதலாளி.

ஒரு சமயம், அவர் தன் வேலையாள் ஒருவனை அழைத்து, ''நான் சொல்வதை மட்டும் நீ செய்தால் போதும். மற்றதைச் செய்யாதே'' என்று கண்டிப்பாய்ச் சொல்லி வைத்தார்.

அன்று மாலை குழாயிலிருந்து குடிநீர் கொண்டு வரக் குடத்தைக் கொடுத்து அனுப்பினார். ''குடத்தை நன்றாக விளக்கி, உள்ளேயும் கைபோட்டு



நன்றாகக் கழுவணும். பிறகு, குழாய்க்கு நேராகக் குடத்தை வைக்கணும். நீர் நிரம்பியதும் குடத்தை எடுத்து வரணும்'' என்றெல்லாம் சொல்லி அனுப்பினார்.

அப்படியே அவன் குடத்துடன் சென்றான்; குடத்தை விளக்கினான்; கழுவினான்; குழாய் அடியிலே குடத்தையும் வைத்துவிட்டு, நின்று கொண்டிருந்தான்.

வெகு நேரமாகியும் குடிநீர் கொண்டு வரச் சென்றவனைக் காணவில்லையே என்று எண்ணி முதலாளி, வெளியே வந்து எட்டிப் பார்த்தார்.

''டேய், அங்கே இன்னும் என்ன செய்கிறாய்? தண்ணீர் வரவில்லையா?'' என்று கேட்டார்.

''இல்லை.எசமான். தண்ணீர் நன்றாக வருகிறது. குழாய்க்கு நேராகத்தான் குடத்தை வைத்திருக்கிறேன். இன்னும் நிரம்பவில்லை'' என்றான்.

''ஏண்டா அப்படி?'' என்று குழாய்க்குச் சென்று பார்த்த போது, அவன் குடத்தைத் தலைகீழாகக் கவிழ்த்து வைத்து இருந்தான். அதை முதலாளி நிமிர்த்தி வைத்ததும் குடம் நிறைந்தது.

''தாங்கள் இதைச் சொல்லவில்லையே எசமான்!'' என்றான் வேலையாள்.

—'முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் 'அறிவுக் கதைகள் நொண்ணூறு' என்ற பாரி நிலைய வெளியீட்டிலிருந்து.

அடுத்த இதழில்-

என் குழந்தைப் பருவம்

-அவ்வை டி.கே. ஷண்முகம்



பழைய கதை;
புதிய பாடல்



கொசுக்கடி

குழந்தைக் கவிஞர்

வழுக்கைத் தலையுடன் ஒரு மனிதர்
வாசலில் அமர்ந்தார். அப்பொழுது
கொழுத்துப் பருத்திடும் ஆசைமிகக்
கொண்டதோர் கொசுவும் வந்ததுவே.

வந்ததும் அந்த மனிதரது
வழுக்கைத் தலையில் அமர்ந்ததுவே;
சந்தோஷத்துடன் கடித்ததுவே;
தலையில் ரத்தம் குடித்ததுவே.

கடித்ததும் வலியைத் தாங்காமல்
கையை ஓங்கி அக்கொசுவை
அடித்திட முயன்றார்; ஆனாலோ
அக்கொசு தப்பிப் பிழைத்ததுவே!

ஓங்கிய கையோ அவர் தலையின்
உச்சியில் 'பட்'டென விழுந்ததுவே.
ஆங்கே தப்பிப் பிழைத்தகொசு
அவரைப் பார்த்துக் கேட்டதுவே:

'சின்னஞ் சிறிய என்கடியைச்
சிறிதும் பொறுக்க முடியாமல்,
என்னை அடித்துக் கொன்றிடவே
எத்தனம் செய்தீர். இப்பொழுது,

'பட்'டென உமது தலைமீதே
பலமாய் அடித்த உம்கையை
வெட்டி எறிந்து விடுவீரோ?
வேறு தண்டனை கொடுப்பீரோ?''

கொசுவின் வார்த்தையைக் கேட்டதுமே
கூறினர் அந்த மனிதருமே:
"கொசுவே, இன்று தப்பியதால்
குறும்பாய்க் கேள்வி கேட்கின்றாய்.

வேண்டும் என்றே என்தலையை
விரும்பிக் கடித்த கொசுவே, கேள்.
வேண்டும் என்று என்கையும்
வேதனை தந்தது? யோசனை செய்.

கடித்துக் கடித்தே இரத்தமெலாம்
குடிக்கும் கொசுவே, உனைநானும்
அடித்துக் கொல்வேன். மேன்மேலும்
அடிகள்கிடைப்பினும்பொறுத்திடுவேன்.

பிறர்க்குத் துன்பம் கொடுப்பதனால்
பெரிதும் இன்பம் அடைவோரைத்
துரத்தித் துரத்தி அடித்திடுவேன்;
துயரம் வரினும் சகித்திடுவேன்."

இதே இடம்தான்!

அரசியல் தலைவர்: ஏண்டா அம்பி, இந்த இடத்திலே மரத்தை நடச் சொல்றே?

பையன்: மூணு வருஷமா வன மகோத்சவத்தில் எங்கள் பள்ளிக்கூடத்திலே இந்த இடத்திலேதான் மரம் நடுகிறோம். அதனாலேதான்.

—லலிதா செல்லப்பா.





என் குழந்தைப் பருவம்

-டாக்டர்
மு. வரதராசனார்

'மு. வ.' என்ற இரண்டு எழுத்துப் பெயரைச் சொன்னாலே போதும். மாணவர்கள், ஆசிரியர்கள் எல்லாருமே மிகுந்த மரியாதை செலுத்துவார்கள். தமிழ்நாட்டின் தலைசிறந்த சிந்தையாளர்களில் ஒருவராகத் திகழ்ந்த டாக்டர் மு. வரதராசன் அவர்களின் தமிழ் நடையே ஒரு தனி நடை. அதில் புதுமை இருக்கும்; இனிமை இருக்கும்; ஆழ்ந்த கருத்து இருக்கும்; சிந்திக்க வைக்கும் செய்தி இருக்கும்.

நாவல், நாடகம், வரலாறு, இலக்கியம் — இப்படி இவர் ஏறத்தாழ 100 புத்தகங்களை எழுதியிருக்கிறார். இவரது 'அகல் விளக்கு' என்ற புத்தகம் சாகித்ய அகாதமி பரிசு பெற்றுள்ளது. 'கள்ளோ, காவியமோ?' 'ஓவச் செய்தி,' 'அரசியல் அலைகள்,' 'மொழியியற் கட்டுரைகள்' — நான்கும் தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளன.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து, பிறகு மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணை வேந்தராகவும் திகழ்ந்தவர்.

'பூஞ்சோலை' என்ற சிறுவர் இதழில் இவர் 1952 ஜனவரியில் எழுதிய கட்டுரையை இப்போது படிக்கப் போகிறீர்கள்.

எனக்கு அப்போது வயது ஆறு இருக்கும். எங்கள் வீடு தெருவின் ஒரு மூலையில் இருந்தது. பள்ளிக்கூடம் போய் வந்தவுடனே மாலை வேளையில் விளையாடிய பிறகு, வீட்டின் எதிர்ப் பக்கத்தில் சுவர் ஓரமாக உட்காருவேன். என்னை விட்டுப் பிரியாமலே பழகிய பையன் வேணு என்று ஒருவன்.

அவன் என் எதிரே வந்து உட்காருவான். அவன் என்னைப் பார்த்து, "ஏதாவது கதை சொல்லு" என்று கேட்பான். அவனும் என் வயது உள்ளவனே. அவன் என்னைப் பார்த்துக்



கதை கேட்டவுடனே, எனக்கே என்னைப் பற்றிப் பெருமையாக இருக்கும். உடனே, எதையாவது சொல்லத் தொடங்குவேன். பெரும்பாலும், நாய், பூனை, கோழி, காக்கை, குள்ளநரி, புலி, கரடி, இவைகளைப் பற்றியே கதை சொல்வேன். வேணு என் எதிரே வாயைத் திறந்தபடி கேட்டுக் கொண்டிருப்பான். நான் சலிக்காமல் எதையாவது சொல்வது வழக்கம்.

என் கதையில் முன் பின் தொடர்போ, நிகழ்ச்சிப் பொருத்தமோ ஒன்றும் இருக்காது. அம்மாவும், அக்காவும், பாட்டியும், ஆசிரியரும் சொன்ன கதைகளையெல்லாம் கூட்டிக் குழப்பிப் பொருத்தம் இல்லாமல், எதையாவது சொல்லிக் கொண்டிருப்பேன். ஆனால், அந்தப் பையன் எப்படித்தான் பொறுமையாகக் கேட்டானோ, தெரியவில்லை! நாள்தோறும் கொஞ்ச நேரமாவது கதை சொல்லும்படி கேட்பான்.

என் கதைகளோ முதலும் முடிவும் இல்லாத கதைகள்! வாயில் வந்தபடி இது அதைக் கடித்தது. அது இதைத் துரத்தியது. அது ஏமாற்றியது. இது ஏமாந்தது என்று நினைத்ததையெல்லாம் சொல்வேன். அதனால், பெரியவர்களைப் போல் நானும் கதை சொல்கிறவன் என்ற செருக்கு எனக்கு இருந்தது.

என் செருக்கு எல்லாம் திடீரென்று இல்லாமல் போயிற்று! ஏழு, எட்டு வயதாக இருந்த போது, பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளில் வளர்ந்தவர்கள், பேய் பிசாசுக் கதைகளைச் சொல்லி, என் கற்பனையைக் கெடுத்து விட்டார்கள்; என்னை பயங்கொள்ளி ஆக்கிவிட்டார்கள். அவற்றைக் கேட்ட பிறகு, நான் விளக்கு வைத்த பிறகு, தெருவில் தலைகாட்டாமல் வீட்டுக்குள் ஒடுங்கிவிட்டேன்.

வீட்டில் தெற்குப் புறத்துத் தாழ்வாரத்திலிருந்து பார்த்தால், வேப்ப மரம் நுணா மரம், நாவல் மரம் ஆகியவற்றின் தலைகள் நன்றாகத் தெரியும். இருட்டில் தோன்றிய அவற்றின் கிளைகளில் பேய்களும், பிசாசுகளும், மரக்கால் பல்லனும், மிடா விழுங்கியும் அதோ அவன் தலை. இதோ அவனுடைய கைகள், அதோ கால்கள், இதோ வயிறு என்று இப்படிப்பட்ட கற்பனைகள் வளரும். உடனே, கண்ணை மூடிக் கொண்டு குப்புறப் படுத்துக் கொள்வேன். என் பயத்தைக் கண்ட பாட்டி, அந்தத் தெற்குத் தாழ்வாரத்தில் என்னை இருக்கவிடாமல், வடக்குத் தாழ்வாரத்திற்கே அழைத்துக் கொண்டு போய் விடுவாள்.

இல்லாததைக் கற்பனை செய்து கோழையாக அஞ்சி ஒடுங்கியிருந்த அந்த நாட்களை இப்போதும் நினைத்து வருந்துகிறேன். சிறு பிள்ளைகளுக்குப் பேய், பிசாசு முதலியவை பற்றிச் சொல்வது எவ்வளவு கெடுதி என்பதை நான் இப்போது நன்றாக உணர்கிறேன்.

ஒருநாள், எதிர் வாடையில் மூன்றாவது வீட்டில் ஒரு பையனுடைய பாட்டி இறந்து போய் விட்டாள்.





அந்தப் பையனோடு நான் விளையாடுவது வழக்கம். அவனுடைய பாட்டி இறந்து போன போது, அவன் கதறிக் கதறி அழுதான். பாட்டியின் உடம்பைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்ற போது அந்தப் பையன், 'ஓ' என்று அலறி அலறித் தேம்பியதைக் கண்டு நானும் அழுதுவிட்டேன். மாலையில் இது நிகழ்ந்தது.

வீட்டுக்குத் திரும்பிய பிறகு, அன்று இரவு என்னால் சாப்பிட முடியவில்லை. என் பாட்டியும் இறந்துவிடுவாளோ, அவளையும் இப்படித்தான் எடுத்துக் கொண்டு போய்ச் சுட்டு விடுவார்களோ என்று கற்பனை செய்து கண்ணீர் விடத் தொடங்கினேன். அழுதேன்; தேம்பினேன். படுக்கையில் படுத்தபடியே அழுத கண்ணீரால் தலையணையையும் சிறிது நனைத்து விட்டேன். பக்கத்திலிருந்த என் பாட்டி இதைத் தெரிந்து கொண்டு, "இனி மேல் நீ சாவு வீட்டுப் பக்கம் போகாதே" என்று சொல்லித் தன் மடி மீது படுக்க வைத்துக் கொண்டாள். அப்படியே தூங்கிவிட்டேன்.

என் பாட்டி சில ஆண்டுகளுக்கு முன்பு, உண்மையாகவே இறந்துவிட்டாள். அன்று நான் சில துளிக் கண்ணீர் விட்டேனே தவிர, அதுபோல் அழவில்லை. வாழ்க்கையின் அனுபவம் எனக்குக் கல் மனத்தைக் கொடுத்து விட்டது.

சின்ன வயதில், சாதி பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. வீட்டிலுள்ள பெரியவர்கள் என்னைப் பார்த்து, "வேறு யார் வீட்டிலும் சாப்பிடக் கூடாது; தண்ணீரும் குடிக்கக் கூடாது; கடையிலும் கண்டதை வாங்கித் தின்னக் கூடாது" என்று அடிக்கடி சொல்லியிருந்தார்கள். அதனால், எவ்வளவு தாகம் எடுத்தாலும் பள்ளிக் கூடம் முடிந்து வீட்டுக்குத் திரும்பி வந்த பிறகுதான் தண்ணீர் குடிப்பேன்.

ஒரு நாள், ஒரு பையனுடைய வீட்டிற்குப் போயிருந்த போது, அவனுடைய அம்மா என் கையில் ஒரு முறுக்குக் கொடுத்தார்கள். 'வேண்டாம்' என்று மறுத்து, வாங்கிக் கொள்ளாமல் இருந்தேன். வற்புறுத்தினார்கள். பிடிவாதமாக மறுத்தேன். காரணம் கேட்டார்கள். வீட்டார் சொன்னதைக் கூறினேன். சிரித்தார்கள். என்னுடைய அம்மாவைப் பற்றிக் கேலியாகப் பேசினார்கள். அதற்குப் பிறகு, அந்த வீட்டிற்குப் பல நாள் போகாமலே நின்று விட்டேன். "ஒன்றுமே தெரியாத பையன்" என்று அவனுடைய அம்மாவும் அப்பாவும் என்னைப் பற்றி அடிக்கடி சொல்லி வந்தார்கள். உயர்நிலைப் பள்ளியில் போய்ச் சேர்ந்தவுடன் என்னுடைய அறியாமை எனக்குத் தெரிந்து விட்டது. இப்போது சாதி என்பது பேய், பிசாசு போல் இல்லாத ஒன்று என்னும் உண்மை எனக்கு விளக்கமாகத் தெரிகிறது.

உயர்நிலைப் பள்ளிக்குப் போய், ஐந்தாம் வகுப்பில் படிக்கும் போது,



வேறு பிடிவாதம் வந்து சேர்ந்தது. ஆசிரியர் ஒருநாள் சுகாதாரப்பாடம் கற்றுக் கொடுத்த போது, 'காப்பி குடிப்பதனால் தீமை உண்டு' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். அன்று முதல் காப்பி குடிக்கும் வழக்கத்தை விட்டு விட்டேன். மறுநாள், வீட்டில் அம்மா காப்பி கொடுத்த போது, "வேண்டாம்" என்று பிடிவாதமாக மறுத்தேன். ஆசிரியர் சொன்ன காரணத்தைச் சொன்னேன். அம்மாவும் பாட்டியும் சிரித்தார்கள். ஆனாலும் காப்பியைக் குடிக்கவில்லை. அதன் பிறகு, இதுவரையிலும் நான் காப்பி குடித்ததே இல்லை. எனக்காக நடத்தப்பட்ட தேநீர் விருந்துகளிலும் நான் காப்பி குடித்ததில்லை; தேநீரும் குடித்ததில்லை. இவ்வளவு வயது வரையில், காப்பி இல்லாமலே காலம் கழித்த பிறகு, இனியும் தேவையில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

என்னுடைய ஒன்பதாம் வயதில், ஒரு திருமணக் கூட்டத்தில் 'குப்பன்' என்ற பையனுடன் சேர்ந்து வெற்றிலை பாக்குப் போட்டேன். நாக்குச் சிவப்பதை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு பெரியவர் என்னிடம் அன்போடு வந்து, "தம்பி, வெற்றிலை போட்டால் படிப்பு வராது. இனிமேல் போடாதே" என்றார். நான் உடனே வாயில் இருந்த வெற்றிலை பாக்கைக் கீழே துப்பிவிட்டேன். அதன் பிறகு இன்று வரையிலும் எந்தக் காரணம் பற்றியும் நான் வெற்றிலை பாக்குப் போட்டதே இல்லை. அதனால் கெடுதி இல்லை என்பதை இப்போது தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆனாலும், அது தேவையில்லை என்று எண்ணிவிட்டேன்.

காற்றாடி விடுவதில் எனக்கு விருப்பம் மிகுதி. யார் எங்கே காற்றாடி விட்டாலும், அங்கே நின்று பார்த்துப் பொழுது போக்குவது என் சிறு வயதில் பழக்கம். கொஞ்சம் வளர்ந்த பிறகு, நானே காற்றாடி விடவும், காற்றாடி செய்யவும், சூத்திரம் சரியாகப் பார்த்து, முடி போடவும் கற்றுக் கொண்டு தேர்ந்தவன் ஆகிவிட்டேன். காற்று குறைவாக இருந்த நேரங்களில் காற்றாடி அமைதியாகத் தூங்குவதைக் காண்பதில் எனக்கு அளவில்லாத மகிழ்ச்சி. ஆனால், அந்தக் காற்றாடிக்கும் மேலே, மிக்க உயரத்தில் வானத்தோடு ஒட்டினாற்போல் கழுகுகள் அமைதியாகப் பறக்கும் காட்சியை அடிக்கடி பார்த்து வியப்படைந்திருக்கிறேன். அந்தக் கழுகுகள் போல், அவ்வளவு உயரத்தில் நம்மால் பறக்க முடியாதா என்ற ஏக்கம் எனக்கு அந்த வயதில் உண்டு. இந்த வயதிலும் எனக்கு அந்த ஏக்கம் முற்றிலும் தீரவில்லை என்றே சொல்ல வேண்டும்.

கோகுலத்திலும் மற்றும் பல பத்திரிகைகளிலும் நகைச்சுவைப் படங்களை வரைந்து வரும் திரு. டி. சக்ரபாணி (சுதர்ஸன்) அவர்களுக்கு 'நல்லாசிரியர்' விருது வழங்குகிறார் மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்கள். "ஓவியருக்குக் கூட ஆசிரியர் விருது வழங்குகிறார்களா?" என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? இவரது பொழுது போக்குத்தான் ஓவியம் வரைவது. பணிபுரிவது சென்னை இந்து தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளியில் கைத்தொழில் ஆசிரியராக!





காந்தி மாமா!

'ரகமி'

மகாத்மா காந்தி இங்கிலாந்து தேசத்திற்குச் சென்றிருந்த போது கிங்ஸ்லி ஹாலில் தங்கி இருந்தார். அந்த ஹாலுக்கு எதிரேயுள்ள ஓர் குடிசையில் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருத்தியும் அவளது மூன்று வயதான 'காலிக்' என்ற சிறுவனும் வசித்து வந்தனர். ஒரு நாள் கிங்ஸ்லி ஹாலில் காந்தித் தாத்தாவைச் சுற்றிக் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. காந்திஜியும் குழந்தைகளை தமாஷ் செய்து கொண்டேயிருந்தார்.

குழந்தைகளின் அறிவைச்சோதிக்க எண்ணிய அவர் ஒரு காலிக் கண்ணாடிப்புட்டி நிறையப்பட்டாணியைக் கொட்டி, குழந்தைகள் அனைவரையும் தன்னருகில் வரவழைத்துக்கொண்டு, "குழந்தைகளே! இந்தப் புட்டியில் மொத்தம் எத்தனை பட்டாணிகள் இருக்கின்றன? யார் சரியாகச் சொல்லுகிறீர்களோ அல்லது ஓரளவிற்கு உத்தேசமாகச் சொல்லுகிறீர்களோ அவர்களுக்கு நான் ஒரு பரிசு தரப் போகிறேன்! எங்கே சொல்லுங்கள் பார்க்கலாம்?" என்று கேட்டார்.

அங்கு வந்திருந்த குழந்தைகள் வித விதமான எண்ணிக்கையைச் சொன்னார்கள். ஆனால், காலிக் என்ற அந்தச் சிறுவன் சொன்ன விடை மட்டும் கிட்டத்தட்டச் சரியாக இருந்தது. மகிழ்ச்சியடைந்த காந்தித்தாத்தா அச்சிறுவனின் சாமர்த்தியத்தை மெச்சி அவனுக்கு ஒரு முயல் குட்டியைப் பரிசாகத் தர அழைத்தார். பரிசை வாங்கிக் கொள்ள காலிக் மகாத்மாவை நெருங்கினான். அவரைப் பார்த்ததும், "இவர் என்ன இப்படி இருக்கிறாரே! இவர் ஏன் நன்றாக உடையை உடுத்திக் கொள்ளவேயில்லையே? நான் அவரிடம் போக மாட்டேன்!" என்று அடம் பிடித்தான்.

இச்செய்தியைக் கேட்டறிந்ததுமே, அருகில் குடிசையிலிருந்த காலிக்கின் தாயார் ஓடோடி வந்து தன் மகனிடம் காந்தித் தாத்தாவின் பெருமைகளை எடுத்துக் கூறி, மகனைத் திருத்தினாள். காலிக்கும் தான் காந்தித்தாத்தாவைப் பற்றி எண்ணிய தவறான எண்ணத்திற்கு வருந்துவதை அவனுடைய முகம் வெளிப்படுத்தியது. மகன் காலிக்கை, காந்திஜியிடம் அழைத்துச் சென்று அவரை வணங்கச் சொன்னதும், காந்திஜி அவனைத் தட்டிக் கொடுத்து ஒரு முயல் குட்டியைப் பரிசாகத் தந்தார். சிறுவன் காலிக் மிக்க மகிழ்ச்சியோடு அதனைப் பெற்றுக் கொண்டான். இந்த சம்பவத்தை நினைவுகூறும் வகையில் அவனுடைய தாயார் அம்முயல் குட்டிக்கு 'காந்தி' என்று பெயர் வைத்தாள்.

தினந்தோறும் காலிக் அம்முயல் குட்டியுடன் விளையாடுவான். அப்போதெல்லாம் அதனை "காந்தி" என்று ஆசையோடு கூப்பிட்டுக் கொஞ்சுவான். தன் மகன் முயல் குட்டியை 'காந்தி' என்று கூப்பிடுவது மகாத்மா காந்தியின் பெயரை மரியாதையின்றிக் கூப்பிடுவதாகக் கருதினாள் தாய்.

"காலிக்! இனிமேல் நீ அந்த முயல் குட்டியை 'காந்தி' என்று கூப்பிடாதே. 'காந்திஜி' என்று கூப்பிடு!" என்றதும், சிறுவன் காலிக், "அம்மா! இனிமேல் நான் அந்த முயல்குட்டியை 'காந்தி' என்று மரியாதையில்லாமல் அழைக்க மாட்டேன். 'காந்திஜி' என்றே அழைக்கிறேன். அதோடு காந்திஜியையும் நான் "காந்தி மாமா!" "காந்தி அங்கிள்!" என்று கூப்பிடுவேன்!" எனச் சொல்லி நகைத்தானாம்.

பிருந்தாவனக் கவியரங்கம்



கடவுளைக் கண்டேன்

கதிரவன் ஒளியைக் கண்டேன்
கருணையை அதனில் கண்டேன்.
பசுவுடன் கன்றைக் கண்டேன்
பாசத்தை அங்கே கண்டேன்.

மலரிடை மணத்தைக் கண்டேன்
மனமெலாம் மகிழக் கண்டேன்.
கடலிடை அலையைக் கண்டேன்.
கடவுளை வியந்து நின்றேன்.

—என். செந்தில்குமார் (10462), சீர்காழி.

துடித்த காரணம்?

குண்டு குண்டு மாம்பழம்
அப்பா வாங்கி வந்தாராம்.
மண்டு ராமு மாம்பழத்தை
ஆசையுடன் பார்த்தானாம்.

உண்டு மனம் மகிழவே
மாம்பழத்தை எடுத்தானாம்.
வண்டு விழியால் சுற்றும்முற்றும்
பார்த்து விட்டுக் கடித்தானாம்.

கடித்தவுடன் 'ஐயோ பல்'
என்றலறித் துடித்தானாம்.
துடித்ததற்குக் காரணமே
மெழுகிலான மாம்பழம்!

—அ. உஷாராணி (2307), சென்னை—50.





உல்லாசப் பயணம்

கோடை விடுமுறை நாட்களிலே
கூடிப் பயணம் போய்வரலாம்.
கொடைக் கானல் மலைகளிலே
குளிரில் மகிழ்ந்து ஆடிடலாம்.

ஏற்றம் மிகுந்த ஏற்காட்டில்
ஏரியில் படகு ஓட்டிடலாம்.

குரங்குகள் நிறைந்த குற்றாலம்
அருவியில் குளித்து மகிழ்ந்திடலாம்.

கட்டிய கல்லணை மேன்மைதனைக்
கண்டு களித்து மகிழ்ந்திடலாம்.

காட்டு யானைகள் கூட்டத்தைக்
காணத் தேக்கடி சென்றிடலாம்.

கன்னியாகுமரி சென்று அங்கே
கதிரவன் உதயம் கண்டிடலாம்.

அண்ணல் காந்தி மண்டபமும்
அங்கே கண்டு ரசித்திடலாம்.

—ந. சதீஷ்குமார் பாபு (1569).

மூட்டைப்பூச்சி



குண்டு குண்டு மூட்டை
குட்டை யான மூட்டை
நண்டு போல மூட்டை
நகர்ந்து செல்லும் மூட்டை.


சந்து பொந்து கட்டில்
கதவு மேஜை தொட்டில்
வந்து புகுந்த மூட்டை
வண்டு போன்ற மூட்டை.

பகலில் மறைந்து கொள்ளுக்
பாய்ந்து இரவில் செல்லும்
சகல ஜாலம் செய்யும்
சங்க டத்தில் ஆழ்த்தும்.

சொட்டுச் சொட்டாய் ரத்தம்
சுவைத்துச் சுகத்தை தேடும்
தொட்டு நசுக்கப் பார்த்தால்
துரித மாக ஓடும்.

சோறு தண்ணீர் இன்றி
சொகுசாய் வாழும் மூட்டை
ஊர்கள் தோறும் நமது
உயிரை வாங்கும் மூட்டை.

—கே. கணேஷ் (9426), மயிலாடுதுறை.



காந்தித் தாத்தா

காந்தித் தாத்தா நம்தாத்தா!
கடமை தவறு நல்தாத்தா!
சாந்தி நெறியைக் கடைப்பிடித்தார்!
சரித்திர ஏட்டில் இடம்பிடித்தார்!

உண்மையை என்றும் உரைத்திட்டார்!
உழைக்கும் வழியைக் காண்பித்தார்!
மண்மேல் கைத்தொழில் செய்திட்டார்!
மாண்பைக் கதரில் உணர்த்திட்டார்!

சாதிப் பேயை விரட்டிடவும்
சமத்துவ வேரை நாட்டிடவும்
நீதி, நேர்மை நிலைத்திடவும்
நிரந்தர சுதந்திர வழிவகுத்தார்.

அன்பால் உலகை ஆட்கொண்டார்!
அகிம்சை நெறியைப் பரப்பிட்டார்!
நன்மை பற்பல புரிந்திட்டார்!
நானிலம் பயனுற வாழ்ந்திட்டார்!

—டி. தட்சிணாமூர்த்தி (8896), திருச்செங்கோடு.

உயரமான மிருகம்

உலகில் வாழும் விலங்குகளில்
உயர மான மிருகம்நான்.
பலரும் என்னை விரும்பிடுவர்
பார்க்க விந்தை யானவன்நான்!

ஒட்ட கம்போலே நீண்டுள்ள
உடலைப் பெற்ற மிருகம்நான்!
சிவிங்கிக் கிருக்கும் புள்ளிகள்போல்
சிறப்பாய் உடலில் கொண்டவன்நான்!

அழகுக் கண்கள் அமைந்தவன்நான்.
அற்புத உடம்பைப் பெற்றவன் நான்.
தழைகள் நிறையத் தின்பவன்நான்.
தண்ணீர் அதிகம் குடிப்பவன்நான்.

ஒட்டகச் சிவிங்கி என்பெயர்தான்.
ஓடுவேன், வெல்வேன் குதிரையையும்
விலங்குக் காட்சிச் சாலையிலே
வியப்புடன் என்னைக் கண்டிடலாம்!

—சு. கோகிலவாணி (3789), சிக்கல்.



சார், தபால்!

திருக்குறள் புதிருக்குப் பாராட்டு!

* தமிழறிஞர் கி. வா. ஜகந்நாதன் அவர்களின் இளமைப்பருவ வாழ்க்கையும் சம்பவங்களும் எங்கள் மனத்தில் பசுமரத்து ஆணி போல் ஆழமாகப் பதிந்து விட்டன.

—பா. கிருஷ்ணதாஸ், கும்பகோணம்—1.

* இன்று ஏடு தூக்குபவர்கள் நாளை நாடு காப்பவர்கள். அவர்களுக்கு 'என் குழந்தைப் பருவம்' பகுதி நல்லதொரு பயன் தரும் பகுதியாகும்.

—கள்ளிப்பட்டி சேவகன்.

* சின்னச் சின்ன மின்மினிக் கதைகள் மூலம் எங்களைச் சிரிப்பு மழையில் ஆழ்த்திய திரு. கண்ணுசாமி இன்று உயிருடன் இல்லை என்பதைப் படித்தவுடன் என் கண்கள் என்னையும் அறியாமல் கலங்கி விட்டன.

—ஆர். எஸ். இராஜ், சீர்காழி

* 'ஜிம்மியின் உள்ளம்' என் உள்ளத்தைத் தொட்டது.

—ஏ. பரிமளநாதன், திருப்பூர்.

* காட்டிலே... அக்கு... அக்கு... பாட்டுப் அக்கு... போட்டி... அக்கு... சிரித்து... அக்கு... சிரித்து... அக்கு... கண்ணீர்... அக்கு... வந்து... அக்கு... விட்டது... அக்கு.

—பா. ராஜேஸ்வரி, நேமத்தான்பட்டி.

* 'அறிவும் நேர்மையும்' புதிர்க்கதை மிகவும் அருமை.

—நீடூர் எம். எச். சாதிக் பாஷா (544).

* புலியை நான் நேரில் பார்த்ததில்லை. ஆனால், அதுவே என் காதில் வந்து கூறி விட்டுப் போனது போல் உள்ளது. இது போல் அடிக்கடி வெளியிடவும்.

—எஸ். பி. ஹோசிமின் (7637), போடிநாயக்கனூர்.

* இதழுக்கு இதழ் பரவசமூட்டும் விளையாட்டு அரங்கை வெளியிடும் 'கோகுல'த்திற்கும் அதை எழுதும் 'குண்டுமணி' அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

—ஆர். வெங்கடேசன் (6068), உசிலம்பட்டி.

* தமிழக அரசின் திருக்குறள் நெறி பரப்பு மையம், திருக்குறளை மக்கள், மாணவ, மாணவியரிடையே பரப்புவதற்குத் தனது எதிர்காலத் திட்டங்களாகப் பலவற்றை எடுத்துக்கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்றை கோகுலம் செயல்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். தமிழக அரசின் செயல்திட்டங்களுக்கு முன்னோடியாக விளங்கும் தங்களுக்குப் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும்.

—செல்வி ரமணி, கவுந்தம்பாடி.

* 'சுட்டிக்காத்தான் — 6—D' 'குட்டிச் சாத்தான் — 3 — D'யைவிட அருமையாக இருந்தது.

—எஸ். ஜெ. குமார் (5405), காரைக்குடி.

* 'சுதந்திர நாட்டைக் கெடுக்கும் துரோகிகளை விடக் கூடாது. மந்திரியை அவர்கள் கொலை செய்ய விடக் கூடாது. துரோகிகளைப் பிடிக்க வேண்டும்' என்ற சேரனின் ஆசைதான் எங்கள் ஆசையும்.

—பி. கோவிந்தசாமி (5703), டி. புதூர்.

* 12 வயதில் 13,800 அடி உயரத்திற்கு மலை ஏறியிருக்கும் ஷைலஜாவின் செயல் எங்களை மலைக்க வைக்கிறது.

—எஸ். சிவராஜ் (22), மன்னார்குடி.

* அமெரிக்காவில் வெளிவரும் குழந்தைகள் பத்திரிகைகளைப் பற்றிய விவரங்கள் பயனுள்ளவை.

—மு. ஜானகிராமன், தேரழுந்தூர்.

* செல்வன் எஸ். மாதவனைப் பற்றி 'கோகுலம்' ஆகஸ்ட் இதழில் வெளியிட்டிருந்தீர்கள். தாங்கள் வெளியிட்ட ராசி அவனுக்கு டெல்லி ரிசர்ச் சென்டர், அவனது கண்டுபிடிப்புக்காக ரூ. 1000/— பரிசளித்துள்ளது. இவ்விஷயம் 15.8.85 ஹிந்து பத்திரிகையில் 7—ஆம் பக்கத்தில் வந்துள்ளது. இதுதவிர இவ்விஷயத்தை அறிந்த B. H. E. L. நிறுவனத்தினரும் இங்கு நடந்த சுதந்திரதின விழாவின் போது, மாதவனை அழைத்துப் பதக்கம் அணிவித்து ரூ. 500/— பரிசளிப்பதாகவும் அறிவித்தனர்.

—எஸ். விஜய சீனிவாசன், திருச்சி—14.

* திண்டுக்கல் மக்கள் தண்ணீருக்காக அழுது கொண்டிருக்கும் நேரத்தில், அவர்களை இரண்டு மணி நேரம் 'சிரிப்பு மழை'யில் நனைய வைத்த திருச்சி வானொலியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

—க. இராஜன், திருவிடைமருதூர்.

* மனத்தில் கவலை ஏற்படும் போதெல்லாம் 'கோகுலம்' இதழைப் பிரித்தாலே கவலை பறந்தோடுகிறது. குழந்தைகளின் அறிவுப் பசிக்கு 'கோகுலம்' நல்ல சத்துணவு.

—மு. சண்முகசுந்தரம் செட்டியார், திருவெண்ணெய்நல்லூர்.

* மாதா மாதம் உருவகக் கதைகள் போட்டால் நன்றாயிருக்கும்.

—நா. சதின் குமார் (1666), மானாமதுரை.

செஸ்ஸுக்கு ஒரு போஷகர்

'குண்டுமணி'

உலக செஸ் சாம்பியன் மிக்கேல் டால் எட்டாவது வயதில் செஸ் ஆட்டத்தைக் கற்றுக் கொண்டார். ரிகா சர்வ கலாசாலையில் பட்டம் பெற்றதோடு ரஷ்யாவில் தேசிய போட்டியிலும் கலந்து கொண்டு வெற்றி பெற்றார். இவருக்கு சோவியத் கிராண்ட் மாஸ்டர் விருது கிடைத்தது. தொடர்ந்து உலக செஸ் பெடரேஷன் சர்வதேச கிராண்ட் மாஸ்டர் விருது வழங்கிக் கௌரவித்தது. 1960–ம் வருஷம் மிக்கேல்டால் உலக செஸ் போட்டியில்பாட்வின்னிக்கோடு ஆடி உலக சாம்பியன் பட்டத்தைப் பெற்றார்.

சர்வதேச செஸ் அரங்கில் இன்று மிக்கேல் டால் போல் வி. ஆனந்த் என்ற சிறுவன் முன்னேறிக் கொண்டிருப்பது அதிசய சாதனை. ஆனந்த் ஆறாம் வயதில் செஸ் கற்றுக்கொண்டு எட்டாம் வயதிலிருந்து போட்டியில் கலந்து கொள்கிறான்.'

"எனது தாயும் தந்தையும் செஸ்ஸில் விற்பன்னர்கள். அவர்கள்தான் சிறு வயதில் எனக்கு செஸ் ஆட்டம் கற்றுத் தந்தார்கள்!" என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறான் ஆனந்த்.

"ஆனந்த்! நீ கலந்துகொண்ட முதல் செஸ் போட்டி எது?"

"1977–78–ம் ஆண்டில் முதன் முதலில் மின்சார இலாகா நடத்திய



செஸ் போட்டியில் கலந்து கொண்டேன். அப்பொழுது சென்னை நகரக் காவல் துறை ஆணையாளர் ஸ்ரீபால் மின்சார இலாகா. பாதுகாப்பு அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் செஸ் போட்டி நடத்துவதில் அக்கறை செலுத்தினார். நான் எட்டாவது வயதில் கலந்து கொண்ட போட்டி அது!"

"ராஜ்ய அளவில் பல வெற்றிகளைச் சம்பாதித்ததைவிட சர்வதேச அரங்கில் உனது சாதனைகளைக் கூற முடியுமா?"

"பாரீஸில் நடந்த சர்வதேச உலகப் போட்டியில் மூன்றாவது இடத்தைப் பெற்றேன். எனக்கு ஜான்டீஸ்' வந்துவிட்டதால் இந்தப் போட்டியில் முழு ஊக்கத்துடன் ஈடுபட முடியவில்லை! 1984–ம் ஆண்டு ஹெல்சிங்கியில் நடைபெற்ற உலக ஜூனியர் செஸ் போட்டியில் பத்தாவது இடத்தைப் பெற்றேன். உலக அரங்கில் இந்தியாவில் யாரும் பெற்றிராத அந்தக் கௌரவத்தைப் பெற்றது தனிச் சிறப்பு. 1985–ஆம் ஆண்டு தேசிய ஸப்ஜூனியர் செஸ் சாம்பியன் பட்டம் எனக்குக் கிடைத்தது. எனக்குப் பத்தாவது வகுப்புக்கான பரீட்சை வந்துவிட்டதால் இஸ்ரேலில் நடைபெற்ற உலக ஸப் ஜூனியர் செஸ் போட்டியில் பங்கேற்க முடியவில்லை! கிரீஸில் செஸ் ஒலிம்பிக்ஸில் இந்தியக் குழு அங்கத்தினராகப் பங்கேற்றேன். லண்டனில் நடைபெற்ற செஸ் போட்டியில் சர்வதேச மாஸ்டர் ராங்கிங்கைப் பெற்றதுதான் உலக செஸ்ஸில் எனக்குக் கிடைத்த பெரிய கௌரவம். ஹாங்காங்கில் செஸ்ஸில் 'சர்வதேச மாஸ்டர்' விருதினைப் பெற்றேன்! துபாயில்



* செஸ்ஸில் 'சர்வதேச மாஸ்டர்' கௌரவம் பெற்ற செல்வன் வி. ஆனந்துக்கு ரூபாய் ஐயாயிரம் பரிசளிக்கிறார் வள்ளல் திரு. மகாலிங்கம் அவர்கள்.

நடைபெறப் போகும் போட்டிக்கு இரண்டொரு நாளில் புறப்படுகிறேன்!''

''இப்படி சர்வதேச செஸ் போட்டியில் கலந்து கொள்ளச் செல்லும் உனக்குப் படிப்பு பாதிக்கப்படாதா?''

''நான்டான் பாஸ்கோ பள்ளியில் மூன்றும் வகுப்பிலிருந்து படிக்கிறேன். பாதர் ஆபிரகாமும், பாதர் சைமனும் எனது செஸ் கௌரவங்களுக்கு, பல சர்வதேசப் பயணங்களுக்கு உதவி வருகிறார்கள். சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்ளப் பள்ளியில் லீவு வசதி செய்து தருவதோடு பரீட்சைகளையும் மாட்சுகளுக்குப் பிறகு நடத்தி எனது படிப்புக்குக் குந்தகம் வராமல் வழி செய்கிறார்கள்!''

ஹாங்காங்கில் செஸ்ஸில் சர்வதேச மாஸ்டர்' கௌரவம் பெற்ற ஆனந்துக்குப் பாராட்டு விழா வுட்லண்ட்ஸ் ஹோட்டலில் செப்டம்பர் 7—ந்தேதிநடைபெற்றது. இந்தியசெஸ் பெடரேஷனின் புதிய தலைவராகப் பதவி ஏற்றுள்ள தொழிலதிபர் என். மகாலிங்கம் புதிய பதவி ஏற்றுள்ள தருணத்தில் ஆனந்துக்குக் கிடைத்த கௌரவம் இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

டாக்டர் என். மகாலிங்கம் தமிழக செஸ் கழகத்தில் தலைமை தாங்கி செஸ் ஆட்டக்காரர்களுக்குப் பேருதவி செய்ததோடு, தமிழக செஸ்ஸின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தினார். 1984—ம் ஆண்டு மரியம்மாள் — மகாலிங்கம் செஸ் சுழற் கோப்பையை ஏற்படுத்தியது அவர் செஸ்ஸுக்குச் செய்துள்ள சேவைகளில் ஒன்று. செஸ்ஸில் சர்வதேச மாஸ்டர் பட்டம் பெறும் விற்பன்னர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கி வருகிறார். அவர்து பொன்னான கையால் சிறுவன் ஆனந்த் ஐயாயிரம் ரூபாய் பெற்றான்.

'பிளேபாக்' பாட்டுக்காரர் எஸ். பி. பாலசுப்பிரமணியம் சினிமா உலகில் பிரசித்தமானவர் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அவரது ஆயிரம் ரூபாய் நன்கொடையில் நடத்தப்பட்ட ஸப் ஜூனியர் செஸ் போட்டியில் புகழோடு தோன்றியவன் தான் வி. ஆனந்த். தன்னால் செஸ்ஸில் பிரபலமாகி வரும் ஆனந்துக்கு 'சர்வதேச மாஸ்டர்' கௌரவம் கிடைத்த செய்தி கேட்டு, ரூபாய் 2500 அன்று வுட்லண்ட்ஸ் ஹோட்டலில் காசோலையாக பாலசுப்பிரமணியம் வழங்கினார். இதைக் கேள்விப்பட்டு செஸ் ஆட்டக்காரர்கள் அயர்ந்துவிட்டனர்!

செஸ்ஸில் சர்வதேச மாஸ்டர் ஆனந்தின் தந்தை தென்னிந்திய ரயில்வே ஜெனரல் மானேஜர் விசுவநாதன். தமது ரயில்வே பணிகளில் மூழ்கியிருப்பவர். ஸ்ரீமதி விசுவநாதன் தான் ஆர்வத்தோடு சர்வதேசப் பயணத்தில் உடன் செல்கிறார். ஆனந்துக்கு அன்னையின் அரவணைப்பு ஒரு டானிக்காக இருக்கிறதாம்.

சர்வதேச அரங்கில் செஸ்ஸில் பல கௌரவங்களைப் பெற்று வரும் வி. ஆனந்த் தமிழகத்துக்கும் இந்தியாவுக்கும் பல பெருமைகளைச் சேர்ப்பான் என்பதில் ஐயமில்லை. இந்திய செஸ் பெடரேஷனில் புதிய தலைவராக என். மகாலிங்கம் பதவி பெற்றிருப்பது இந்திய செஸ் ஆட்டக்காரர்களுக்கு ஒரு வரப் பிரசாதமாக அமையும்.



அண்ணலை நினைவு கொள்வோம்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

நம் நாடு அடிமைப் பிடியில் சிக்கித் தவித்தது. வெள்ளையர் நம்மை அடக்கி ஆண்டனர். நாம் அவர்களது ஆட்சியில் வாயிருந்தும் ஊமையராய், கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் வாழ்ந்து வந்தோம். சுய சிந்தனையை நாம் அறவே இழந்திருந்தோம். இந்நிலையில்தான் அண்ணல் காந்தி அடிகள் — அச்சமில்லாமல் வாழுமாறு மக்களைத்தூண்டினார். சத்தியாக்கிரகம் எனும் ஆயுதத்தையும், சத்தியத்தையும் கடைப்பிடித்தார்.

நமக்கு வேண்டிய துணிகளை நாமே உற்பத்தி செய்யும் வழி கண்டார். நூற்கும்வழியைக்காண்பித்தார். வெள்ளையனும் நம் போன்று மனிதனே என்று கூறினார்.

சிறிது சிறிதாக மக்களைத் தட்டி எழுப்பி அச்சத்தைப் போக்கினார் அவர். அஹிம்சை வழியில் மெல்ல மக்களைத் தயார் ஆக்கினார்; சீரிய கொள்கைப் பிடிப்பு உள்ளவர்களாக ஆக்கினார்; மக்களை ஒன்றுபடுத்தினார். ஒற்றுமையின் சக்தியை அவர் நன்கு உணர்ந்து இருந்தார்.'

ஊர் ஊராகச் சென்று விளக்கினார். உப்புச் சத்தியாக்கிரகம், வரி கொடா இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், 'வெள்ளையனே வெளியேறு' போன்ற பல போராட்டங்களை சாத்வீக முறையில் நடத்தி வெற்றி கண்டார்.

பல முறை சிறை சென்றார். நாட்டின் விடுதலைக்காக, தாம் பல இன்னல்களை அனுபவித்தார். வலுமிக்க, வளைந்து கொடுக்காத ஆங்கில ஏகாதிபத்தியம் வளைந்து கொடுத்தது. கத்தி இன்றி, இரத்தம் சிந்தாமல் நம் நாடு விடுதலை பெற வலுவான அடித்தளம் அமைத்தவர் அண்ணல் காந்தியடிகளே. மக்கள் மனத்திலிருந்த அச்சத்தைப் போக்கியவரும் அவரே.

இன்று நாம் சுதந்திர பாரதத்தின் மதிப்பு மிக்க பிரஜைகளாக விளங்குகிறோம். நாம் உலகினில் தலை நிமிர்ந்து நிற்க வழி வகுத்த அண்ணலை நினைவு கொள்வோம்.

பாரதியார்:

வாழ்கநீ எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசம் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீ வாழ்க வாழ்க!



தச்சன் உருவில் வந்த கிருஷ்ணர்

ஒரிஸ்ஸா மாநிலத்தில் வைணவப் புண்ணியத் தலம் பூரி. இந்தக் கோயில் தலம் கடலோரத்தில் அமைந்துள்ளது. பூரியிலுள்ள ஜகந்நாதர் ஆலயத்தைப் பன்னிரண்டாம் நூற்றுண்டில் இந்திரத் துய்மனன் என்னும் மன்னன் நிர்மாணித்தான். பூரி ஜகந்நாதர் ஆலயத்தில் பதினுறு பக்கங்கள் அமைந்த அழகிய கல் தூண் மண்டபம் பிரசித்தமானது. பூரியில் நடைபெறும் தேர்த் திருவிழாவுச்குப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கூடுவது தனிச் சிறப்பு. கிருஷ்ண சைதன்யர் சம்பந்தப் பட்ட பேராலயம் இது. பூரி ஜகந்நாதர் ஆலயத்திலுள்ள ஜகந்நாதர், பாலபத்ரா, சுபத்ரா உருவங்கள் மரக்கட்டைகளாலானவை என்பது வியப்புக்குரிய விஷயம்.

ஒரு நாள் இந்திரத்துய்மனன் கனவில் கிருஷ்ணர் வந்து "கடலில் அபூர்வமாகக் கட்டைகள் மிதந்து வரும். அவற்றைச் சேகரித்து வை!" என்று கூறினர். மன்னனும் கனவில் கண்டபடியே கடலில் மிதந்து வந்த கட்டைகளைச் சேகரித்து வைத்தான். ஓர் அறையில் அந்தக் கட்டைகள் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தன. கிருஷ்ணர், தச்சன் உருவில் அந்த அறைக்கு வந்து அக்கட்டைகளில் தெய்வ உருவங்களைப் படைக்கத் தொடங்கினர். "கட்டைகளில் முழு உருவங்கள் செதுக்கும் வரையில் அறையைத் திறக்கக் கூடாது" என்று கிருஷ்ணர் கட்டளையிட்டிருந்தார். படைப்புத் தெய்வங்களை சிருஷ்டிக்கும் விதங்களைப் பாதியில் காண ஆசைப்பட்ட மன்னன் இந்திரத் துய்மனன் குறிப்பிட்ட கால கெடுவுக்கு முன்னரே அறைக்கதவைத் திறந்து விட்டான். அரைகுறையாகச் செதுக்கப்பட்ட தெய்வ உருவங்களை அப்படியே விட்டு விட்டுக் கிருஷ்ணர் மறைந்து விட்டார். அந்தத் தெய்வ உருவங்களைக் கொண்டு போய் ஜகந்நாதர் ஆலயத்தில் வைத்துப் பூஜிக்கத் தொடங்கினன் மன்னன் இந்திரத் துய்மனன்.

பூரி ஜகந்நாதர் ஆலயம் தோன்றிய ரஸமான வரலாறு இதுதான். இந்திரத் துய்மனன் உருவாக்கிய கோயிலுக்குப் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பல்கிப் பெருகி வருகிறது.

அட்டைப் படத்தில் தெய்வத்தை வணங்கும் சிறுமியையும், பூரி ஜகந்நாதரையும் வண்ணப்படங்களாக வழங்கியிருப்பவர் திலீப் பானர்ஜி.

காணுமல் போனது ....?


சர்க்கஸ்காரர் (போலீஸிடம்): எங்கள் சர்க்கஸிலே திருட்டுப் போயிட்டது.

போலீஸ்: எது திருட்டுப் போயிட்டது?

சர்க்கஸ்காரர்: 'திருடர்கள் ஜாக்கிரதை' ங்கிற போர்டு.

—பூவை கே. சந்திரன்.





புதிர்க் கதை 4

வங்கக் கடலில் ஓர் அழகிய தீவு. முத்துக்கள் அதிகமாகக் கிடைப்பதனால் அந்தத் தீவிற்கே 'முத்துத் தீவு' என்று பெயர். அத்தீவில் ஆங்காங்கே அருவி கொட்டும் மலைகள் இருந்தன. உலகின் பல பகுதிகளிலிருந்தும் பலவித வண்ணப் பறவைகள் அங்கே வந்து தங்கும். நீர் வளமும், நிலவளமும் நிறைந்து காண்போர் கண்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது அத்தீவு.

இதனால் அந்தத் தீவிற்கு உல்லாசமாகப் பொழுது போக்க, பல நாடுகளில் இருந்தும் மக்கள் வந்த வண்ணம் இருந்தார்கள்: ஆண்டு முழுமையும் வண்ண வண்ண விளக்குகள் ஒளிவீச விழாக் கோலம் பூண்டது போலக் காட்சியளிக்கும் அத்தீவு.

அத்தீவில்ஒருபெரியமருத்துவமனை இருந்தது. அது அனைத்து வசதிகளும் கொண்டு விளங்கியது. அதில் புகழ் பெற்ற டாக்டர்கள் பலர் பணிபுரிந்து கொண்டிருந்தனர். மக்களின் நோயைப் போக்குவதில் அம்மருத்துவமனை பெருந்தொண்டு புரிந்து வந்தது.

திடீரென்று அத்தீவில் இனந்தெரியாத தொற்றுநோய் ஒன்று பரவத் தொடங்கியது. இந்நோய் கண்ட பலர் இறந்து விட்டார்கள்.

இந்நோயைப் பற்றி மருத்துவர் குழு ஒன்று ஆராய்ச்சி செய்தது. அக்குழு தாம் கண்ட முடிவுகளைத் தொலைக்காட்சி, வானொலி வாயிலாக அத்தீவு மக்களுக்கு அறிவித்தது. அந்த அறிவிப்

பாவது:

"நம் தீவை உலுக்கிக் கொண்டு வரும் இத்தொற்று நோய் எதனால் ஏற்படுகிறது என்பதையும், எப்படி ஒழிப்பது என்பதையும் இன்னும் ஓரிரு நாட்களுக்குள் கண்டுபிடித்து விடுவோம். இந்நோய், தோல் வழியாகப் பரவுகிறது. அதாவது நோய் கண்டவர் இன்னொருவர் கையைக் குலுக்கினாலோ அல்லது அவர் உடம்பின் மீது இன்னொருவர் உடல் பட்டாலோ இந்நோய் அடுத்தவர்க்குத் தொற்றிக் கொள்கிறது. இந்நோய் கண்டவர் முதல் பத்து நாட்கள் வரை எல்லா மனிதரையும் போலவே எந்த மாற்றமும் இன்றி இருப்பார். அதன்பிறகு அவர் திடீரென்று மயங்கி விழுந்து விடுவார். அப்பொழுதுதான் அவர் தொற்று நோய் உடையவர் என்பதைப் பிறர் அறிய முடியும். முறையான மருந்து கண்டுபிடித்துக் கொடுக்கப்படாவிட்டால், அவர் இரண்டு நாட்கள் தான் உயிரோடு வாழ முடியும்!

இந்தத் தீவில் யாரை நோய் பிடித்துள்ளது, யாரைப் பிடிக்கவில்லை என்று கண்டறிய முடியாது. அதனால், ஒருவர் தோல் மீது இன்னொருவர் தோல் படாமல் கவனமாக இருங்கள். எப்படியும் இந்த நோயை விரைவில் ஒழித்து விடுவோம்."

இதைக் கேட்டுத்திடுக்கிட்ட மக்கள் ஒருவரோடு ஒருவர் படாமல் கவனமாக இருந்தனர்.

மறுநாள் காலை, அங்கிருந்த மருத்துவமனைக்கு நோயாளி ஒருவர் கொண்டு வரப்பட்டார். அவரைச் சோதித்த டாக்டர்கள், 'இந்த நோயாளிக்குமூளையிலும், இதயத்திலும், வயிற்றிலும் அடுத்தடுத்து உடனே ஆபரேஷன் செய்தாகவேண்டும். அப்பொழுதுதான் இவர் பிழைக்க முடியும்' என்று கருத்துத் தெரிவித்தனர்.

ஆபரேஷன் செய்வதற்குத் தேவையான நன்கு சுத்தம் செய்யப்பட்ட கத்தரிக்கோல், கத்தி போன்றவற்றை நர்சுகள் அங்கே கொண்டு வந்து வைத்தனர்.

அந்த நோயாளியை ஆபரேஷன் செய்யும் இடத்திற்குக் கொண்டு சென்றனர். அவருக்கு அடுத்தடுத்து ஆபரேஷன் செய்ய, மூன்று டாக்டர்களும் அங்கே வந்தார்கள்.

அப்பொழுதுதான் டாக்டர்கள் கையில் அணியும் கையுறைகள் இரண்டு ஜோடிதான் இருப்பது தெரிந்தது. வேறு ஒரு ஜோடி கையுறை கிடைப்பதற்கு அங்கே வழி ஏதும் இல்லை.

டாக்டர்களிலும் சரி, நோயாளிகளிலும் சரி, யார் வேண்டுமானாலும் தொற்று நோய் உடையவர்களாக இருக்கலாம். ஒருவர் பயன்படுத்திய கையுறையை இன்னொருவர் பயன்படுத்தினாலும் நோய் பிடித்துக் கொள்ளும். இருப்பதோ இரண்டு ஜோடிக் கையுறைகள் தான்! ஆனால், மூன்று ஆபரேஷன் செய்தாக வேண்டும். நோயாளிக்கு உடனே ஆபரேஷன் செய்யவில்லையென்றால் அவர் இறப்பது உறுதி. யாருக்கும் என்ன செய்வது என்றே தெரியவில்லை.

இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நர்சு ஒருத்திக்கு இந்தச் சிக்கலிலிருந்து விடுபட, சிறந்த யோசனை ஒன்று தோன்றியது.

உடனே அவள், டாக்டர்களைப் பார்த்து, "நான் சொல்கிறபடி நீங்கள் செய்யுங்கள். இரண்டே ஜோடிக் கையுறைகளைக் கொண்டு மூன்று ஆபரேஷன்களையும் தொற்று நோய்ப் பயமின்றிச் செய்துவிடலாம்" என்றாள்.

அவள் சொன்னபடியே மூன்று ஆபரேஷன்களும் இரண்டு ஜோடிக் கையுறைகளைக் கொண்டே வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டன!

நோயாளியும் பிழைத்துக் கொண்டான்.

நர்சு கூறிய வழிமுறை என்ன?

விடை 28-ஆம் பக்கம்

அடுத்த இதழில்... புதுமைப் போட்டி ④



மாயூரம் வேதநாயகம் பிள்ளை

தமிழிலே முதல் முதலாக நாவல் எழுதியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள். திருச்சியிலிருந்து மதுரைக்குப் புகைவண்டியில் செல்லும்போது, வழியிலே குளத்தூர் என்ற ஊரைக் காணலாம். அதுதான் வேதநாயகர் பிறந்த ஊர். அப்படியானால், 'மாயூரம் வேதநாயகம் பிள்ளை' என்று அழைக்கிறார்களே?

மாயூரத்தில் முன்சீப்பாக இருந்த போதுதான், இவருடைய நேர்மை, ஈவு இரக்கம், தமிழ்ப் புலமை எல்லாம் நன்றாக வெளிப்பட்டன. பெரும் புகழை அங்குதான் பெற்றார். புகழைத் தேடித் தந்த ஊர், இவர் பெயருக்கு முன்னால் ஒட்டிக் கொண்டது!

வேதநாயகர், தாய் மொழியான தமிழிலும், அன்னிய மொழியான ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்றவர்; நூறு ஆண்டுகளுக்கு முன்பே, சட்ட நுணுக்கங்களைத் தமிழிலே தந்தவர்; பெண் கல்வியின் பெருமையை உணர்த்தியவர்; தமிழிசை மேடை தோறும் முழங்க வேண்டுமென ஆசைப்பட்டவர்; எந்த மதத்தினராயினும், அவர்களுடன் சமமாகப் பழக வேண்டுமென்ன அறிவுரை கூறியவர்; அவ்வாறே நடந்தும் காட்டியவர்; இளமையிலே கவி பாடியவர்; பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி என்ற நாவல்களையும், பெண் மதி மாலை, சர்வ சமரச கீர்த்தனை போன்ற கவிதை நூல்களையும் இயற்றியவர்.

"தமிழைப் படிக்காமல் வேற்று மொழியைப் படிப்பவர்களால், இந்த நாட்டுக்கு எள் அளவும் பயனில்லை. அவர்கள் எந்த நாட்டு மொழியைப் படிக்கிறார்களோ, அந்த நாட்டுக்கே குடியேறிப் போய் விடுவதுதான் நலம்" என்பார்.



திருப்பூர் குமரன்

இவர் பிறந்ததோ ஏழைக் குடும்பத்தில். ஐந்தாம் வகுப்பு வரைதான் கல்வி கற்க முடிந்தது. படிப்பை நிறுத்தியதும், வேலை தேடி அலைந்தார். திருப்பூரில் ஒரு பஞ்சு வர்த்தக சாலையில் எடை சரி பார்க்கும் வேலை கிடைத்தது. நாணயமாகவும் திறமையாகவும் இவர் வேலை செய்து வந்தார்.

நாள் ஆக ஆக இவருக்கு நாட்டைப் பற்றிய கவலை ஏற்பட்டது. 'அன்னியருக்கு அடிமையாக வாழ்வதா? நாமும் தேச விடுதலைப் போரில் ஈடுபட வேண்டும். காந்தி வழியிலே நடக்க வேண்டும்' என்று அடிக்கடி நினைப்பார்.


1931 – ஆம் ஆண்டு ஜனவரி *10*–ஆம் தேதி, திருப்பூரில் சட்ட மறுப்பு இயக்கம் நடந்தது.

தொண்டர்கள் இரண்டு இரண்டு பேராக அணிவகுத்துச் சென்றார்கள். முன் வரிசையில் குமரன் கொடி ஏந்திச் சென்றார். போலீஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். தடி கொண்டு தாக்கினர். குமரன் கையிலிருந்த கொடியை ஒரு போலீஸ்காரர் பிடுங்க முயன்றார். குமரன் விடவில்லை.

போலீஸார் ஆத்திரப்பட்டனர். தலையை நோக்கிப் பலமாக அடித்தனர். மண்டை உடைந்தது. குமரன் கீழே விழுந்தார். அப்போதும் கொடியை விடவில்லை. பலவந்தமாக அக்கொடியைப் பறித்தனர் போலீஸார்.

அடிபட்ட குமரனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். நல்ல முறையில் சிகிச்சை அளித்தனர் ஆயினும் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. 28–வது வயதை எட்டுவதற்கு முன்பே வீர சுவர்க்கம் அடைந்து விட்டார்!

பள்ளி செல்லும் தம்பி





அழகாபுரி இளங்கோவன்

ஏடுதூக்கிப் பள்ளிசெல்லும் தம்பிதம்பி — நாளை
ஏற்றங்காண வேண்டும்உன்னை நம்பிநம்பி!
நாட்டைவீட்டை எண்ணிநீயும் பாருபாரு — தம்பி
நன்குகற்று நல்லனவே கூறுகூறு.

ஜாதிமத பேதமெல்லாம் தள்ளுதள்ளு — தம்பி
ஜவகர்காந்தி வாழ்ந்தமுறை கொள்ளுகொள்ளு!
நீதிநெறி சொல்லும்வழி செல்லுசெல்லு — தம்பி
நிமிர்ந்தநடை பாரதியை வெல்லு!வெல்லு!

இந்தியநம் திருநாட்டை எண்ணுஎண்ணு —-தம்பி
எந்தநாளும் புத்திகூர்மை பண்ணுபண்ணு!
செந்தமிழை ஆர்வமோடு பாடுபாடு — நம்
தேசம்உயர வழிவகைகள் தேடுதேடு.

வாடும்மாந்தர் வாட்டம்போக்க முந்துமுந்து — நல்ல
வளம்பெருக்கு உடல்உழைப்பைத் தந்துதந்து.
நாடும்மொழியும் நமதுகண்ணாய் எண்ணுஎண்ணு — தம்பி
நாட்டும்மண்ணைப் பொன்விளையப் பண்ணுபண்ணு!

1. எகிப்து.
2. புலி.



சித்திரப் புதிர்-8
விடைகள்

3. அ. குதிரை, ஆ. கழுதை, இ. நாய், ஈ. கரடி, உ. பசு, ஊ. யானை, எ. கரடி.
4. பீட்ரூட்.
5. கோக்கோ பறிக்கிறான்.

புதுமைப் போட்டி-3 முடிவு

சென்ற ஆகஸ்ட் இதழில் அறிவித்த புதுமைப் போட்டி — 3 — க்கு நாங்கள் எதிர்பார்த்த அளவு விடைகள் வரவில்லை. பெரியோர்களது வாழ்க்கை வரலாறுகளையெல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே, கோகுலத்தில் 'இளமையில் இவர்கள்' போன்ற பல கட்டுரைகளை வெளியிட்டு வந்தோம். அந்தக் கட்டுரைகளைப் படித்து, நினைவிலே வைத்துக் கொண்டிருப்பவர்களுக்குப் புதுமைப் போட்டி — 3 — ல் கேட்கப் பட்ட வினாக்களுக்கு எளிதில் விடை கூற முடிந்திருக்கும்.

ஆனாலும், எங்களுக்கு வந்த மொத்த விடைகள் 254 தான்!

அவற்றில் எட்டுக்கும் சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுதியவர் ஒரே ஒருவர் தான்!

ஒரு தவறுடன் விடை எழுதியவர்கள் ஐவர்.

விடைகள் :

1. பகத்சிங்.
2. விஸ்வேஸ்வரய்யா.
3. கஸ்தூரிபா.
4. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.
5. ரவீந்திரநாத தாகூர்.
6. மாயூரம் வேதநாயகம் பிள்ளை.
7. ராஜாஜி.
8. தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையர்.



ஏ.நாகேஸ்வரன்

முதற்பரிசு ரூ. 50/— பெறுபவர்:

ஏ. நாகேஸ்வரன் (2544),
S/o. என். ஆனந்தம்,
61, சந்திக் கூடத் தெரு,
விருதுநகர் — 626 001.

இரண்டாம் பரிசு ரூ. 25/—
(ஆளுக்கு ரூ. 5/— வீதம் பகிர்ந்தளிக்கப்படுகிறது.)

1. க. ரவிக்குமார் (3770),
   3, சுந்தர விநாயகர் கோவில் தெரு,
   மேட்டுப் பாளையம் — 641 301.
2. கே. எஸ். ராஜேஸ்வரி,
   D/o. கே. ஆர். சீனிவாசன்,
   30 — B, டூரி சுப்ரமண்யம் வீதி,
   கோபி — 638 452.
3. ஏ. இந்திரா,
   ஆறும் வகுப்பு 'ஆ' பிரிவு,
   பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
   திருப்பூர் — 638 604.
4. ப. பார்த்தசாரதி (109),
   41, ஸ்ரீ கிருஷ்ண பவனம்,
   அரசு மருத்துவமனை ரோடு,
   தேனி — 626 531.
5. க. முத்துக்குமார் (3769),
   3, சுந்தர விநாயகர் கோவில் தெரு,
   மேட்டுப் பாளையம் — 641 301.

பரிசு பெற்றவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.
பங்கு கொண்டவர்களுக்கும் எங்கள் வாழ்த்துக்கள்.

— ஆசிரியர்.

கேளுங்கள்; சொல்லுகிறோம்

* சென்னையில் குதிரைமேல் மன்றோ என்ற வெள்ளைக்காரர் உட்கார்ந்திருப்பதுபோல் ஒரு சிலை இருக்கிறதே. அதை ஏன் இன்னும் அகற்றாமல் அங்கே வைத்திருக்கிறார்கள்?

— ச. குணசேகர், சென்னை—21.

சர் தாமஸ் மன்றோ வெள்ளையராக இருந்தாலும், மிகவும் நேரமையானவர்; இந்தியர்களிடம் மிகுந்த அன்பு உடையவர். அவர் சென்னை கவர்னராக இருந்த போது அரசாங்கத்தில் பல இந்தியர்களை வேலையில் சேர்த்துக் கொண்டார். இந்திய நாட்டுக்கு நன்மை செய்தார் என்பதால் தான் அவர் சிலையை அகற்றாமல் வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். மேலும், அது எவ்வளவு அழகான சிலை! அதைப் போல் சிலையை அபூர்வமாகவே காண முடிகிறது.



* வயலின் நம் நாட்டு இசைக் கருவிதானே?

— கே. ஆர். கோமளா, திருப்பாதிரிப் புலியூர்.

இல்லை. இது முதன் முதலில் ஐரோப்பாவில் 400 ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்டது. பிறகு, இத்தாலியர்கள் இதைத் திருத்தி அமைத்தார்கள். நம் நாட்டுக்கு இது வந்து நூறு ஆண்டுகளே ஆகின்றன. இந்திய இசைக்கு, அதிலும் கருநாடக இசைக்கு இது மிகவும் பயன்படுகிறது. இதை பிடில் என்றும் அழைக்கிறார்கள்.

* 'கோகுலம் சிறுவர் சங்கம்' போல், 'கோகுலம் இளைஞர் சங்கம்' ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்பது என் நண்பர் (வயது 23) ஆசை. அதை நிறைவேற்றுவீர்களா?

— ஆ. காளியப்பன், பனைமரத்துப்பட்டி.

இன்னொரு தம்பி, "என் தாத்தாவுக்கு வயது 75. 'கோகுலம் தாத்தா சங்கம்' ஆரம்பித்தால் என்ன?" என்று கேட்கிறான். எல்லாமே நல்ல யோசனைகள் தான். கோகுலம் சிறுவர் சங்கத்தை நல்ல முறையில் நடத்தி வெற்றி கண்டாலே போதும். வேறு சங்கங்களைத் தொடங்கும் உத்தேசம் இப்போது இல்லை.

* நான் ஒன்பதாவது படிக்கிறேன். எனக்கு ஜப்பான் மொழி கற்றுக் கொள்ள ஆசை. நம் சென்னை நகரில் யாரிடம் கற்றுக் கொள்ளலாம்?

— ஏ. முத்துக்குமார், சென்னை—4.

Indo - Nippon Cultural Exchange Society (304 , 305, Anna Road, Madras-18.)

என்ற நிறுவனத்தில் ஜப்பான் மொழி கற்றுத் தருகிறார்கள். நேரில் சென்றோ அல்லது தொலைபேசி மூலமோ விவரம் அறியலாம். தொலைபேசி எண்: 451439.

* 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தை எப்போது காந்தித் தாத்தா தொடங்கினார்?

— எஸ். ஹேமலதா, திருப்பதி.

1942 ஆகஸ்ட் 8-ம் தேதி.

* 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' என்று ஆரம்பமாகும் உலக நீதியைப் பாடியவர் புலவர் தணிகை உலகநாதன் அவர்கள் தானே?

— ந. சின்னக்கருப்பி, நாட்டரசன் கோட்டை.



புலவர் தணிகை உலகநாதரும் சிறந்த கவிஞர்தான். ஆனால், 'உலக நீதி' பாடிய

வர் வேறொரு புலவர். அவர் பெயரும் உலகநாதர்தான். அவர் வாழ்ந்தது 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்.

*** வெங்காயம் மருந்தாகவும் பயன்படும் என்கிறார்களே, உண்மையாகவா?**

— தே. ராஜாமணி, குன்றத்தூர்.



உண்மைதான். வெங்காயம் இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்; சீரணசக்தியை அதிகமாக்கும்; வாதம், காமாலை போன்ற நோய்கள் வராமல் பாதுகாக்கும். வெங்காயச் சாற்றைப் பிழிந்து அதில் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடுவார்கள் — மூல நோய் குணமாக.

*** கோகுலம் தீபாவளி மலர் வெளியிடுவீர்களா?**

— இரா. முத்துக்குமரன், பீளமேடு.

இல்லை. ஆனால், எங்கள் அலுவலகத்திலிருந்து வெளிவரும் 'கல்கி' மிகப் பெரிய அளவில் ஆண்டுதோறும் தீபாவளி மலர் வெளியிடுகிறது. அதில் 'கோகுலம் பக்கங்'களும் உண்டு. இந்த ஆண்டும் வழக்கம் போல் கல்கி தீபாவளி மலர் வெளிவருகிறது.

*** மகாபாரதத்தை சமஸ்கிருதத்தில் பாடியவர் யார்? தமிழில் பாடியவர் யார்?**

— மா. வேதபுரி, ஆரணி.

சமஸ்கிருதத்தில் பாடியவர் வியாசர். தமிழில் பாடியவர் வில்லிபுத்தூரார். இவர் சமஸ்கிருத மகாபாரதத்தைத் தழுவி 4339 பாடல்கள் பாடினார். இவருக்குப் பின் வந்த நல்லாப் பிள்ளை, முருகப் பிள்ளை என்பவர்கள் மேலும் 11,000 பாடல்களைப் பாடி முதலிலும், நடுவிலும், கடைசியிலும் சேர்த்து மகாபாரதத்திற்கு முழு வடிவம் கொடுத்திருக்கிறார்கள்.

*** ஆங்கிலேயர் நம் நாட்டிற்கு வராமல் இருந்திருந்தால் நமக்கு ஆங்கில அறிவே ஏற்பட**

டிருக்காதா?

— ப. முத்து செம்பரநாதன், திண்டுக்கல்.

நிச்சயம் ஏற்பட்டிருக்கும். காரணம், அது உலக மொழியாகப் பரவி விட்டது!

இங்கிலாந்திலும், கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து போன்ற நாடுகளிலும் உள்ள சுமார் 27 கோடி மக்களுக்குத் தான் அது தாய் மொழியாக இருந்தாலும், இப்போது உலகின் பல பகுதிகளிலும் உள்ள மக்கள் அந்த மொழியைக் கற்றுக் கொண்டு விட்டனர். சீனரும் ஜப்பானியரும் ஆங்கிலத்தைக் கற்கும் போது நாம் மட்டும் சும்மா இருப்போமா?

*** ஔவை நடராஜன், ஔவை துரைசாமி என்கிறார்களே, இவர்களெல்லாம் நாடகத்தில் ஔவையாராக நடித்தார்களா? ஔவை என்று பெயர் வரக் காரணம் என்ன?**

— சி. என். சத்திய நாராயணன், வளவனூர்

ஓ! ஔவையாராக நடித்த கலைஞர் டி. கே. சண்முகம் அவர்களை 'ஔவை டி. கே. சண்முகம்' என்று அழைத்தார்களே, அதை நினைத்துக் கொண்டு கேட்கிறாயா? ஆனால் இவர்கள் ஔவையாராக நடித்ததால், இப்படிப் பெயர் வரவில்லை. ஔவை துரைசாமி ஒரு சிறந்த தமிழறிஞர். அவர் பிறந்த ஊர் ஔவையார் குப்பம் என்பது. அவருடைய மகன் தான் ஔவை நடராஜன். தந்தையாரைப்போலவே பெயருக்கு முன்னால் இவரும் ஊர்ப் பெயரைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்.

*** முன் முதலாகத் தமிழில் அச்சடிக்கப்பட்ட புத்தகம் எது? எப்போது?**


— கே. ராமசாமி, நாகை.

1577-ல் 'கிறிஸ்தவ வணக்கம்' என்ற புத்தகம் அச்சிடப்பட்டது. ஆனால், அது அச்சிடப்பட்டது போர்த்துகல் நாட்டில்!

*** நம் தேசியக் கொடியை எடுத்துச் செல்லும்போது எப்படி எடுத்துச் செல்ல வேண்டும் என்று கூறுவீர்களா?**

— என். கர்மாட்சி, திருப்பூர்.





தேசியக் கொடியை எடுத்துச் செல்லும் போது, வலது தோளில் உயர்த்திப் பிடித்துச் செல்ல வேண்டும். ஊர்வலத்தில் செல்லும் போது, தேசியக் கொடியை வைத்திருப்பவர் முன்னால் செல்ல வேண்டும். மற்றவர்கள் பின் தொடர்ந்து செல்ல வேண்டும்.

*** ஒலிம்பிக் சின்னத்திலுள்ள ஐந்து வளையங்களிலும் ஐந்து நிறங்கள் இருக்கின்றனவே. ஏன் ஒரே நிறத்தில் இல்லை?**

— தே. ஜெகதாசன், சென்னை—6.

நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிகப்பு— இந்த ஐந்து நிறங்களிலும் அந்த ஐந்து வளையங்கள் இருப்பதற்கு ஒரு காரணம் உண்டு. எந்த நாட்டுக் கொடியை எடுத்துக் கொண்டாலும் அதில் இந்த ஐந்து நிறங்களில் ஒன்று நிச்சயமாக இருக்கும்.

*** மலபார் என்பதும் கேரளம் என்பதும் ஒன்றா? வேறு வேறா?**

— ம. சீனிவாசன், தேரூர்

கேரள நாட்டை அன்னியர்கள் மலபார் என்றுதான் அழைத்தார்கள். மலைவாரம் என்பதைத்தான் அப்படிச் சுருக்கிவிட்டனர்.

*** நம் தமிழ் நாட்டில் கழுதை பொதி சுமக்கிறது. வடக்கே ஒட்டகம் பொதி சுமக்கிறது. வேறு மிருகங்களை இப்படிப் பொதி சுமக்க உபயோகிக்கிறார்களா?**

— கே. ராஜசேகரன், திருச்சி—1.

திபெத்தில் கவரிமா, தென் ஆப்பிரிக்க மலைப் பகுதிகளில் லாமா, வடதுருவப் பகுதிகளில் பனிமான் — இப்படிப் பல வகையான மிருகங்கள் பல இடங்களில் பொதி சுமக்கின்றன.

*** தென்னை மரம் எத்தனை வருஷங்கள் இருக்கும்?**

— என். மாலதி, பேராவூரணி.

தென்னையின் சராசரி வயது 80.

புதிர்க்கதை-4 விடை

முதல் டாக்டர்,—தான் அணிந்த கையுறையின் மீதே இன்னொரு கையுறையையும் அணிந்து ஆபரேஷன் செய்தார். இதனால் முதல் ஜோடி கையுறையின் உட்பகுதி டாக்டர் உடல் மீதும், இரண்டாம் ஜோடி கையுறையின் வெளிப்பகுதி நோயாளியின் மீதும் பட்டிருக்கும்.

இரண்டாம் டாக்டர், இரண்டாம் ஜோடி கையுறை மட்டும் அணிந்து ஆபரேஷன் செய்தார். இரண்டாம் ஜோடி கையுறையின் உட்பகுதி டாக்டர் கையிலும், ஏற்கெனவே நோயாளியின் மீது பட்ட வெளிப்பகுதி இப்பொழுது நோயாளியின் மீதும் பட்டிருக்கும்.

மூன்றும் டாக்டர் முதல் கையுறையின் உட்பகுதி வெளிப் பகுதியாகவும், வெளிப் பகுதி உட்பகுதியாகவும் மாற்றப் பட்ட கையுறையை அணிந்து கொண்டார். அதன்மேல் இரண்டாம் கையுறையை அணிந்தார். இப்பொழுது முதல் கையுறையின் வெளிப்பகுதி டாக்டர் கையிலும், எப்பொழுதும் நோயாளியின் மீது பட்ட இரண்டாம் ஜோடிக் கையுறையின் வெளிப்பகுதி இப்பொழுதும் நோயாளி மீது பட்டது.

சுருக்கமாகச் சொன்னால் இரண்டு ஜோடி கையுறைகளுக்கும் நான்கு பக்கங்கள் இருக்கும். எண் கொடுத்தால் முதல் ஜோடியின் உட்பக்கம் — ஒன்று, வெளிப்பக்கம்— இரண்டு. இரண்டாம் ஜோடியின் உட்பக்கம் — மூன்று. வெளிப்பக்கம் — நான்கு. முதல் ஆபரேஷனில் டாக்டரின் உடல் மீது எண் ஒன்றும், நோயாளியின்மீது எண் நான்கும் பட்டது. இரண்டாவதில் எண் மூன்று, எண் நான்கு; மூன்றாவதில் எண் இரண்டு, எண் நான்கு.



கண்ணன்தான் வந்தானே!

— பேட்டிக் கட்டுரை
எஸ்.ராதை

பால்வடியும் குழந்தை முகம். கள்ளமில்லாச் சிரிப்பு. சரளமான இசையுடன் வாத்தியம். இத்தனைக்கும் உரியவன்தான் மாண்டலின் ஸ்ரீனிவாஸ்.

நான் அவனைக் காண நேர்ந்ததே ஒரு பொது நிகழ்ச்சியில். நிகழ்ச்சி நடத்தியவரிடம் நடையாய் நடந்தேன், 2 நிமிட நேரமாவது, அவனுடன் பேச சந்தர்ப்பம் அளிக்குமாறு.

பம்பாயில் முதல்நாள் இரவு கச்சேரியை முடித்துக் கொண்டு ஆகாய விமானம் ஏறி சென்னை வந்து பஸ்ஸில் பயணம் செய்து கச்சேரி நடைபெறும் இடத்திற்கு வந்து சேரும்போது இரவு மணி 8.45. எவ்வளவு களைப்பிருக்கும்? ஜனங்கள் ஆர்வத்தில் அவனைச் சூழ . 'தாகத்திற்குத் தண்ணீராவது குடிக்க விடுங்கள்' என்று அவன் வேண்டியதைப் பார்க்கும்போது மிகவும் பாவமாக இருந்தது.

சாப்பிட்டுவிட்டுச் சிறிது ரெஸ்ட் எடுத்து, கச்சேரி ஆரம்பிக்கும்போது இரவு மணி 10.00. சரி, நமக்கு அவன் பேட்டி கிடைக்கப் போவது இல்லை என்று தீர்மானித்துவிட்டேன். கச்சேரி ஆரம்பமே களைகட்டிவிட்டது.


ஒருமுறை கேட்கும்போது வீணை பாலசந்தரை அவன் இசை நினைவூட்டும். ஒரு சமயம் குழலின் இனிய நாதத்தைச் செவி உணர, தீராத விளையாட்டுப் பிள்ளை என்ற கண்ணன் பாடலைக் கேட்டு அருகில் கண்ணனே வந்ததுபோல் பிரமை தட்ட, என்னையே நான் மறந்தேன். என் வயதுள்ள பையனுக்கு இவ்வளவு திறமையா! ஆண்டவனின் அருளை நினைத்து வியக்காமல் இருக்க முடியவில்லை.

கச்சேரி முடியும்போது மணி விடியற்காலை 1.45. நடுவில் சிறு தூக்கமோ, களைப்போ முகத்தில் தெரியாதோ? ஊகூம். சிறிதுகூட இல்லை.

மணியைப் பார்த்தபின் தளர்ந்தே விட்டேன். 'சரி, இதற்குமேல் நமக்கு வாய்ப்பு இல்லை' என்று நினைத்தேன். பத்திரிகை நிருபர் வேலை எவ்வளவு சிரமமானது என்பதை அனுபவத்தில் முதல் முறையாய் உணர்ந்தேன். எதற்கும் கிளம்புமுன் அவனை அருகே சென்று பார்த்தேதீருவது என்ற முடிவுடன் நிகழ்ச்சி நடத்தியவரிடம் செல்ல, அவர் என் உறுதியைக் கண்டு ஒரு கணம் திகைத்தார். பிறகு மனம் நெகிழ்ந்து அறிமுகப்படுத்தினார்.

"எனக்கு நேரமில்லை. கிளம்பிக் கொண்டிருக்கிறேனே!" என்று

எஸ்.ராதை





ஸ்ரீநிவாஸ் தயக்கத்துடன் பதிலளிக்க, உன்னை நான் அதிகம் சிரமப்படுத்த மாட்டேன். நம்மைப் போன்ற சிறுவர்களுக்கான பத்திரிகையில் உன்னைப் பற்றிய சிறு தகவல்களையாவது அளித்துப் பெருமையடைய விரும்புகிறேன். ப்ளீஸ்'' என்று கெஞ்ச, புன்சிரிப்புடன் சம்மதித்தான். அந்த 2 நிமிட நேரப் பேட்டியைத்தான் கீழே அளித்துள்ளேன். போட்டோ கிராபரை அந்த நேரத்திற்கு ஏற்பாடு செய்ய முடியாமற் போனதை என் துரதிர்ஷ்டமாகக் கருதுகிறேன்.

நான்: உன் வயது என்ன? எந்த வகுப்பில் படிக்கிறாய்? எந்தப் பள்ளியில்?''

ஸ்ரீனிவாஸ்: வயது 14. ஒன்பதாவது படிக்கிறேன். ஸ்கூலில் இல்லை. பிரைவேட்டாக வீட்டிலேயே.

நான்: உன் குரு யார்? முதல் மேடை நிகழ்ச்சி எங்கு நடந்தது?

ஸ்ரீனிவாஸ்: சுப்பாராவ். ஆந்திராவில் குடிவாடா என்னும் இடத்தில்.

கேள்வி: எத்தனை வருடங்களாகக் கற்கிறாய்?

பதில்: 6 வயதில் ஆரம்பித்தேன்.

கேள்வி: எத்தனையோ வாத்தியங்கள் இருக்க மாண்டலினைத் தேர்ந்தெடுக்கக் காரணம்?

பதில்: என் அப்பாதான் உற்சாகம் ஊட்டினார்.

கேள்வி: நீ புத்தகங்கள் படிக்கும் வழக்கம் உண்டா?

பதில்: எப்போதாவது. நேரம் கிடைக்கும்போது.

கேள்வி: 'கோகுலம்' பத்திரிகையை உனக்கு அனுப்பினால் படிக்கிறாயா?''

பதில்: எனக்குத் தெலுங்குதான் தெரியும். ஆனால் யாரிடமாவது காட்டி படிக்க முயற்சி செய்வேன்.

நான்: ரொம்ப நன்றி.

ஸ்ரீனிவாஸ்: நன்றி.


கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர் பட்டியல்

தொடர்ச்சி

2891 கே. பிரசாத், தேசவ பவன், கல்படி, அம்மாண்டிவிளை, குமரி மாவட்டம்.
2892 கு. விமலகுமாரி, பிளாட் எண் 20, பரணி காலனி, வீட்டு எண் 4, சூரியா தெரு, சென்னை — 93.
2893 ஆர். பத்மலதா, 26, கடைவீதி, கவுந்தப்பாடி — 638 455.
2894 ஆர். சசிகுமார், 26, கடைவீதி, கவுந்தப்பாடி — 638 455.
2895 கே. கமலக்கண்ணன், 5/11, சர்ச் வீதி, அரியாங்குப்பம், பாண்டி — 7.
2896 என். சிவகுமார், 25/B, இரட்டைப் பிள்ளையார் கோவில் தெரு, புதுப்பாளையம், கடலூர் — 1.
2897 டி. நடராஜன், 39, கொல்ல மேட்டுத் தெரு, சின்னக் கடை வீதி, திருச்சி — 2.
2898 பெ. சரவணன், 144, நாடார் வீதி, செல்வபுரம், (தெற்கு), கோவை — 1.
2899 சு. வசுமதி, 22/20, சுந்தரேஸ்வாமி கோயில் தெரு, கொசப்பேட்டை, வேலூர் — 1.
2900 ப. ஜெயக்குமார், த/பெ. ஏ. என். பழனி, பேட்டைத் தெரு, ஊசூர் — 632 105.
2901 கி. பத்மா, 1, 4வது குறுக்குத் தெரு, தாம்பரம் சானடோரியம், ஜெயா நகர், சென்னை — 47.
2902 பி. சுரேஷ், 123, நாகை ரோடு, திருவாரூர்.
2903. ஜெ. ஸ்ரீப்ரியா, டி — 75, எட்டாவது குறுக்குத் தெரு, திருச்சி — 18.
2904. பி. சுரேஷ், 123, நாகை ரோடு, திருவாரூர் — 1.
2905. ஆர். உத்ரா, 63, வடக்கு ரத்தின சபாபதிபுரம் தெரு, திருநகரம், அருப்புக் கோட்டை.
2906. சி. சாந்தி, 5, 10 — வது கிழக் குறுக்குச் சாலை, காந்திநகர், வேலூர் — 6, வ. ஆ.
2907. சி. காமாட்சி, 5, 10 — வது கிழக் குறுக்குச் சாலை, காந்தி நகர், வேலூர் — 6, வ. ஆ.
2908. ஜெ. நந்தினி, 8பி, பிள்ளையார் கோவில் தெரு, சைதாப்பேட்டை, ஆரணி — 632 301.
2909. நா. ஆத்ரேயன், 1/ஏ, சன்னதி தெரு, சென்னை — 88.
2910. எம். வி. ஆர். ஸ்ரீ யோகீஸ்வரன், 36 ஏ, கீரன்பாளையம், 4 — வது தெரு, மதுரை — 9.
2911. ஜி. ராதா, 19/4, டி. பி. ஸ்கீம் ரோடு, கந்தசாமி ரோடு விரிவு, சென்னை — 28.
2912. வி. புவனேஸ்வரி, 2, கெஞ்சி அருணகிரி தெரு, ஆரணி — 632 301.
2913. வி. ஸ்ரீவித்யா, 2, கெஞ்சி அருணகிரி தெரு, ஆரணி — 632 301.
2914. குரு. வாசுதேவன், 'புஷ்யம்', நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை — 44.
2915. எம். ஜி. இராமச்சந்திரன், சங்கமங்கலம், சிக்கல்வழி — 611 108.
2916. ஆர். ராமு, 77, காகிதக்காரத் தெரு, வாலாஜா, வ. ஆ. மா.
2917. ஏ. ராஜவேலு, 10/68, டபேதார் வீதி, காட்டூர், கோவை.
2918. எஸ். கிருஷ்ணமூர்த்தி, 9/2, காசி விஸ்வநாதர் கோவில் தெரு, வேலூர், வ. ஆ.
2919. வெ. கலைவாணி, C/o. ஆண்டவர் அண்ட் கோ, சென்னிமலை பாதை, காங்கயம், 638 701.
2920. அ. திருமாவளவன், 149, செங்குந்தர் தெரு, துறையூர்.
2921. எஸ். லட்சுமணன், F — 41, வடகாசி அம்மன் கோவில் முதல் தெரு, சங்கரன் கோவில்.
2922. என், செந்தில்குமார், 65, ஹபீப் சாஹிப் தெரு, கோட்டை, சேலம் — 636 001.
2923. சி. சங்கரநாராயணன், த/பெ. ச. சிதம்பர சுப்பிரமணியன், முதல்வர், அம்பை கலைக் கல்லூரி, அம்பாசமுத்திரம் — 627 401.
2924. ப. கலைவாணி, 8/ஏ, புதுப்பேட்டை வடக்குத் தெரு, சிதம்பரம்.
2925. எஸ். சக்திவேல், C/o. எம். ஏ. வி. சத்தியமூர்த்தி, இடைக்காடு, அச்சுவேலி, ஸ்ரீலங்கா.
2926. கா. அ. அறிவரசு, 10/85 ஏ, தடாகம் ரோடு, சிவாஜி காலனி, கோவை — 25.
2927. எம். எஸ். நாகலட்சுமி, த/பெ. கே. எம். சுப்பாராஜ், குமாரபுரம் நள்ளி (வழி) சாத்தூர்.
2928. பிரியா, 71, முத்துமணி விலாஸ், கிழத் தெரு, பத்தமடை.
2929. ஸ்ரீசிவக்குமார், 71, முத்துமணி விலாஸ், கிழத்தெரு, பத்தமடை.


2930. இ. சித்ரா, D 6, 47, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை—17.
2931. சி. ஆர். பிரபுராம்குமார், S/o. ராஜசேகர், சப் இன்ஸ்பெக்டர், கச்சேரி ரோடு, கொட்டாரம்—629 703.
2932. டி. சிவகுமார், பிளாட் 18, டாக்டர் அம்பேத்கார் ஹவுஸ் பில்டிங் சொளைடி, ரெட்டி பட்டி ரோடு, மாமாங்கம் போஸ்ட் — 636 302.
2933. ஆர். கணேஷ், 2, பாரதியார் தெரு, சென்னை—75.
2934. வி. சுந்தர்ராஜ், S/o. வரதராஜ், வெல்ல வியாபாரி, ரீடிங் ரூம், ஹோஸ்பெட் —583 201.
2935. K. Srinivasan, 8/114, Devanga Street, Chamaraj Nagar, Mysore Dt, Karnataka.
2936. கே. ரவி, 147, தியாகு முதலி தெரு, பாண்டிச்சேரி — 605 001.
2937. ஜி. சந்திரமௌலி, 109, சோலையப்ப முதலி தெரு, கும்பகோணம்—1.
2938. த. ந. அழகுலதா நாச்சியார், த/பெ. சே. வே. தவமணி நாச்சியப்பன், கோட்டையூர் அழகாபுரி போஸ்ட், பி. எம். மாவட்டம்.
2939. என். ஜெயந்தி, 20, சோமசுந்தரம் 3—வது தெரு, சென்னை—23.
2940. என். தாரகேஸ்வரி, 20, சோமசுந்தரம் 3—வது தெரு, சென்னை—23.
2941. எஸ். சந்திரமௌலி, 55, வைத்யர் அண்ணாமலை தெரு, சென்னை—4.
2942. ஜெ. உமாதேவி, 123, பட்டேல் ரோடு, ராம் நகர், கோவை—641 009.
2943. வி. மீனு, பிளாட் 24, ராம்நகர் 2—வது தெரு, நங்கநல்லூர், சென்னை—61.
2944. ஜெ. காஞ்சனாதேவி, 9/123, பட்டேல் ரோடு, இராம்நகர், கோவை—9.
2945. என். லட்சுமி, 15, 5—வது மெயின் ரோடு, நியூ காலனி, சென்னை—44.
2946. பி. டி. ராஜா, பி 3, ஹவுசிங் போர்டு, சங்கரன்பாளையம், வேலூர்—632 001.
2947. கே. குமரன், 32/1, அருங்கந்த பூண்டி பெரிய தெரு, தோட்டபாளையம், வேலூர் 632 004.
2948. ஆர். ராகவேந்திரன், 95 ஏ, சாலை ரோடு, உறையூர், திருச்சி—3.
2949. டி. எஸ். ஸ்ரீதர், 3, திலகர் தெரு, ஆர். எஸ். புரம், கோவை—2.
2950. என். மாதவன், 15, 5—வது மெயின் ரோடு, நியூ காலனி, சென்னை—44.
2951. கு. ராகவன், 24/125, C — 3, மேஸ்கி குவார்ட்டர்ஸ், சேலம் கேம்ப், மேட்டூர் டேம்—4.
2952. பி. ஜெயந்தி, 11/12, கொசமடத் தெரு, திருவண்ணாமலை — 606 601.
2953. எஸ். வெங்கடேஷ், 23, சன்னியாசிக் கிராமம், திருநெல்வேலி.
2954. ச. சிவசுப்பிரமணியன், 10, பழைய காலனி, சங்கர் நகர்.
2955. டி. கனகராஜ், 205, நூறு அடி ரோடு, காந்திபுரம், கோவை—12.
2956. ஏ. அனுராதா, 46, சிலம்பணி விநாயகர் சந்நிதி, ஆர்ச், தேவகோட்டை.
2957. எஸ். சிவன் அருட்செல்வன், பி 11/31, L.I.G. Flat, கே. கே. நகர், மதுரை—20.
2958. பெ. ச. சரவணபவா, 22, 11—வது கிழக்கு குறுஞ்சாலை, காந்திநகர், வேலூர் 632 006.
2959. கா. சேஷாத்திரி, S/o. கணேசன், ஆசிரியர், காட்டுக்கானூர் — 632 312.
2960. பி. முரளி, சி 24, L. I. G. Colony, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி.
2961. ஏ. அருணாசலம், 10/34, மில் ரோடு, சோமனூர்—638 668.
2962. ச . திரவியம், CC 42, இளங்கோ தெரு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி.
2963. மு. பா. கீதா, முத்துகிருஷ்ணாபுரம், வடக்குத் தெரு, விக்கிரமசிங்கபுரம், நெல்லை மாவட்டம்.
2964. எஸ். ராஜஸ்ரீ., பி — 2/504, பாய்லர் பிளாண்ட் போஸ்ட், திருச்சி—14.
2965. க. கந்தன், 52, யாதவர் வீதி, அச்சிறுப்பாக்கம்.
2966. வெ. செல்வி, C/o. செயலாளர், ஞாயிறு நூலகம், ஸ்ரீ தண்டபாணி துவக்கப்பள்ளி, கண்டராமாணிக்கம்.
2967. எம். ராதா, 68, காந்தி நகர், ஆத்தூர், சேலம் மாவட்டம்.
2968. எஸ். பி. இளவரசி, D/o. டி. எஸ். பழநியப்பன், ஆசிரியர், மெயின் ரோடு, கம்மாபுரம் — 606 103.
2969. க. முருகேசன், வ. உ. சி. காலனி, சேயூர் ரோடு, அவிநாசி — 638 654.
2970. என். ராஜேந்திரன், 1 — ஏ, வ. உ. சி. காலனி, அவிநாசி — 638 654.
2971. எஸ். ஸ்ரீதர், 29/10, கோனூர் ஸ்டோர், அரபிக் குளத் தெரு, திருச்சி—2.
2972. இரா. கோபாலகிருஷ்ணன், 21, தெற்கு ரத வீதி, வடக்கு ஆத்தூர், நெல்லை மாவட்டம்.
2973. ஜெ. பரத் இராஜகோபாலன், 6, போரூர் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை—59.
2974. இரா. மங்கையர்க்கரசி, D/o. எம். ராமலிங்கம், ஆசிரியர், திருப்போரூர்.
2975. ஜெ. ஜோஸ்பின் சகாயராணி, C 2/157, கைலாசபுரம், திருச்சி—14.
2976. ச. சுப்பிரமணியன், C/o. எஸ். சண்முகசுந்தரன், வணிகவியல் பேராசிரியர், வ. செ. சி. அரசினர் கலைக்கல்லூரி, பூலாங்குறிச்சி—622 413.
2977. A. M. R. ராகவேந்திரன், 15, பேயாழ்வார் கோயில் தெரு, சென்னை—5.

(இன்னும் வரும்)


சுரதன் என்ற அரசன் எதிரிகளிடம் தோற்றுக் காட்டுக்குள் ஒளிந்தான். அங்கே தன் பிள்ளைகளிடம் மனஸ்தாபம் கொண்டு வாழ்க்கை வெறுத்து வந்திருந்த சமாதி என்ற வியாபாரியைக் கண்டான்.
இருவரும் அதே காட்டில் வசித்த மேதஸ் என்ற முனிவரைச் சந்தித்தனர்....
சுவாமி வணங்குகிறோம்.
உங்கள் மனத்துயரத்துக்கு ஆறுதலாகப் பராசக்தி கதைகளைக் கூறுகிறேன்.
மேதஸ் முனிவர் கூறிய துர்கா தேவி கதை: மகா பிரளய காலம். சகல உலகங்களும் மூழ்கி விட, ஸ்ரீமந் நாராயணன் பிரளய வெள்ளத்தில் ஆதிசேஷன் மீது நித்திரை செய்தார்.
தேவியின் கருணை
ஆதாரம்: ரா. கணபதி எழுதிய நவராத்திரி நாயகி
படக்கதை: ஆனந்தி
சித்திரம்: வினு
மகாவிஷ்ணுவின் காதுகளிலிருந்து மது, கைடபன் என்ற இரு அசுரர்கள் தோன்றி...


... ஒரே தாவலில் பிரம்மாவிடம் வந்தார்கள்.
பலவீனனான நீ இறங்கு! இனி நாங்கள் தான் படைப்புத் தொழில் செய்வோம்!
பிரம்மா பயந்து தாமரைத் தண்டுக்குள் ஒளிந்து கொள்ள...
ஹஹஹ் ஹா!
ஹஹா!
தாமரைத் தண்டுக்குள் பிரம்மா...
தந்தை உறங்குகிறார். இந்த ராக்ஷஸர்களை என்னால் வெல்ல முடியாது. பராசக்தியைப் பிரார்த்திப்பதே வழி... நீயே ஸ்வாஹா! நீயே ஸ்வதா!...
துர்கை தோன்றினாள்...
தேவி! விஷ்ணுவை எழச் செய்து மது, கைடபர்களை ஸம்ஹாரிக்கச் செய்யுங்கள்!
அப்படியே ஆகட்டும்!
தேவியின் கருணையால் பகவானை நித்திரையில் ஆழ்த்தியிருந்த தாமஸி தேவி விலக விஷ்ணு கண் விழித்தார்...



கோபம் பொங்கி எழ மது, கைடபர்கள் மீது பாய்ந்தார். பிரளய ஜலத்தின் மீதே போரிட்டனர்.
திருமாலின் ஆயுதங்கள் பயனற்றுப் போக அவர், அசுரர்களோடு மல்யுத்தம் செய்தார். வெற்றி கிட்டவில்லை...
மது கைடபர்கள் கர்வம் அடைந்தனர்
பேஷ், இவ்வளவு காலம் சமாளித்து விட்டாயே! இதுவரை விளையாடினோம். இனிதான் எங்கள் பலம் முழுவதையும் காட்ட வேண்டும்!
கைடபன் கடவுளுக்கே வரம் அருளும் அளவுக்குக் கர்வமுற்றான்....
ஆதிபராசக்தி கருணையுடன் விஷ்ணுவின் உள்ளத்தில் தோன்றி....
அவர்களாகவே மரணத்தைக் கோரினாலொழிய அவர்களைக் கொல்ல முடியாது!
உன் வீரத்தை மெச்சினோம்! நீ வேண்டும் வரத்தைக் கேள்!


அம்பிகையின் யோசனையை நன்றியுடன் ஏற்ற மகாவிஷ்ணு...
வீரர்களே! மதுகைடபர்களை நான் ஸம்ஹாரம் செய்தேன் என்று அடுத்த சிருஷ்டியில் உலகம் என்னைக் கொண்டாட வேண்டும் — இதுவே நான் கோரும் வரம்!
திடுக்கிட்டான் மது. தந்திரம் செய்தான் கைடபன்....
கைடபா! மோசம் போனோம்! உன் கர்வமே நம் அழிவுக்குக் காரணமாகப் போகிறது!
நாராயணா! நீ விரும்பும் வரம் தந்தோம். ஆனால்....
ஊழி வெள்ளத்தில் நிலமே கிடையாது என்பதை அறிந்திருந்தான் கைடபன்...
தண்ணீரில் எங்களுக்கு மரணம் இல்லை. நீர் இல்லாத பூமிக்கு எங்களை அழைத்துப் போ பார்க்கலாம்!
விஷ்ணு ஆதி பராசக்தியைத் தியானித்தார்... விசுவரூபமாய் வளர்ந்தார்...
தம் அகன்ற தொடையில் இரு அசுரர்களையும் தூக்கி வைத்துக் கொண்டு சக்ராயுதத்தால் சிரச்சேதம் செய்து விட்டார்.



அசுரர்களின் ஆவிகள் பரமாத்மாவுக்குள்ளே கலந்து விட்டன. அவர்களின் உடல்கள் புதிய பூமியாக உருவெடுத்து மனிதர்களும்
பிராணிகளும் பயிர் பச்சைகளும் வாழும் நிலமாயிற்று...
மேதஸ் மகரிஷி கதையை முடித்தார்....
பிரும்மாவும் விஷ்ணுவும் தங்கள் வெற்றிக்குக் காரணமான மகா காளியைத் துதித்தார்கள்... ...தேவியின் கருணைக்கு எல்லை இல்லை.. ..இன்னும் கேளுங்கள்...
சுரதனும் சமாதியும் பக்தியுடன் கேட்க, மேதஸ் மகரிஷி தொடர்ந்தார்.... உலகையே ஆட்டிப் படைத்த ரம்பன் கரம்பன் என்ற இரு ராட்சதர்கள்...
கரம்பா! நாம் தேவருலகையும் வெல்ல வேண்டும்!
ரம்பா! அதற்கு நாம் கடும் தவம் செய்ய வேண்டும்!
கரம்பன் தவம்.......
ஐந்து நதிகள் சேரும் இந்தப் புண்ணியத் தலத்தில் நான் நீரில் மூழ்கி நின்று தவம் செய்கிறேன்!
ரம்பன் தவம்....
நதிக்கரையில் நாலு புறமும் தீ மூட்டிக் கொண்டு மேலே சூரியனைப் பார்த்தவாறு பஞ்சாக்கினி சூழ நான் தவமிருப்பேன்!


ரம்பன்-கரம்பன் கடுந்தவத்தால் தேவருலகு நடுங்கியது... வருணன் இந்திரனை எச்சரித்தான்...
தவத்தைக் கலைக்காவிட்டால் நாம் தொலைந்தோம்!
இந்திரன் முதலையாக உருவெடுத்தான்.
நீருக்குள் மூழ்கிச் சென்று கரம்பனை விழுங்கி விடுகிறேன்...
கரம்பன் அலறியது ரம்பன் காதில் விழுந்தது.
ஐயோ! அண்ணா!
ஆ! தம்பி!
வாளால் தன் தலையைத் தானே வெட்டிக் கொள்ளத் துணிந்தான் ரம்பன்.
தம்பி இறந்த பின் நான் உயிர் வாழ்ந்து என்ன பயன்?
அவர்கள் சரிதம் அப்போதே முடிந்திருக்கும். ஆனால் தவத்திற்குப் பலன் இல்லாது போகுமா? எனவே அக்னி பகவான் தோன்றி....
ரம்பா, நில்! என்ன வரம் வேண்டுமோ கேள்!



ரம்பன் கேட்ட வரம் அக்னியைக் கலவரத்தில் ஆழ்த்திய போதிலும் அவரால் மறுக்க முடியவில்லை.
அக்னியே! இந்திரனை வெல்லக் கூடிய மகனை எனக்கு அருள வேண்டும்.
தந்தேன் வரம்!
ரம்பன் எருமையாக மாறி ஒரு பெண் எருமையுடன் காடுகளில் சுற்றி அலைந்தான். ஒரு எருமைக் கன்று பிறந்தது...
மைந்தா! மகிஷாசுரா! இந்திரனை வெல்வதையே நோக்கமாகக் கொண்டு வளர்வாயாக!
ரம்பன் தவமிருந்து பெற்ற மகிஷாசுரன் விரும்பியபோது மனித, மிருக, தேவ வடிவங்களை எடுத்துக் கொள்ளும் சக்தி பெற்றிருந்தான்..
தேவருலகைத் தவிர மற்ற எல்லா உலகங்களையும் தன்வசமாக்கிக் கொண்டான்.
இனி தேவ லோகம் மட்டும் தான் பாக்கி. தூதனே! நீ போய் இந்திரனிடம் எனக்குப் பணிந்து தேவருலகை விட்டு வெளியேறும்படி சொல்லு!



தூதன் இந்திரனிடம் சென்று செய்தி கூற...
மகிஷாசுரனை யுத்தகளத்தில் சந்திக்கிறேன் என்பதே என் பதில்!
தேவாசுர யுத்தம். தேவர்கள் தோற்று ஓடினாலும் சாகவில்லை. திரும்பி வந்தார்கள். அசுரர்கள் தரப்பிலோ பலர் இறந்தார்கள்.
தேவர்களை வென்றும் பயனில்லாது போகிறதே!
தன் படைத்தலைவர்களை அழைத்தான் மகிஷாசுரன்...
தேவர்களைக் கொல்ல முடியவில்லை. எனவே நான் தவம் செய்யப் போகிறேன். யுத்தத்தை நீங்கள் தொடர்ந்து நடத்துங்கள்!
கடுந்தவம் புரிந்த மகிஷாசுரன் முன் பிரும்மா தோன்றி...
சாகாவரம் தவிர வேறு எதுவேண்டுமானாலும் கேள்!
பெண்ணைத் தவிர வேறு யாராலும் எதனாலும் எனக்கு மரணம் நேரக் கூடாது!
வரம் பெற்றுப் புது பலத்துடன் திரும்பிய மகிஷனை அவன் சேனாபதிகள் உற்சாகமாக வரவேற்றனர்.
மகிஷாசுர சக்கரவர்த்தி! வாழ்க! வாழ்க!


யுத்தகளத்தில் சாம்பரி மாயையால் மகிஷாசுரன் லட்சக் கணக்கான மகிஷர்களாகத் தோன்றவும் தேவர்கள் நடுங்கினர்.
நாராயணா! வாஸுதேவா! அநாதரக்ஷகா!
பரிவுடன் பறந்து வந்தார் மகாவிஷ்ணு...
அவரது சுதர்சன சக்கரம் யுத்தகளம் முழுதும் சுற்றி மகிஷனின் மாயாரூபங்களை அழித்தது...
ஆனால் மகிஷன் சிங்க ரூபம் எடுத்து விஷ்ணு மீது பாயவும் அவர் வைகுந்தம் திரும்பி விட்டார்!
ஹா ஹா! நடுங்கி ஓடும் நாராயணன்!
மகாவிஷ்ணுவே தோல்வியடைந்ததைக் கண்டு தேவர்கள் கலக்கமடைந்து ஓடி ஒளிந்தனர். இந்திரனின் வாகனமாகிய ஐராவதத்தைக் கைப்பற்றி அமராவதி சென்றான் மகிஷாசுரன்.
தேவலோகம் அசுரர் வசப்பட்டதும் ரம்பன் பெற்ற வரம் நிறைவேறியது.
ஊர்வசி! மேனகை! நடனமாடுங்கள்! உம்... ஹா..ஹா.. ஹா!



தேவர்கள் அனைவரும் சிவனையும் விஷ்ணுவையும் துதித்தனர்.
ஹர ஹர மகாதேவா! நமோ நாராயணா!
இருவரும் தோன்றியதும் இந்திரன்...
ஹரிஹரனாகிய தாங்கள் அறியாததா? அமராவதியில் எனது சிம்மாசனத்தில் மகிஷாசுரன் அமர்ந்து ....
பராசக்தியைப் பிரார்த்திப்போம்.
சிவபெருமான் உட்பட அனைவரும் தியானிக்க...
ஜெய ஜெய ஜெய ஜெய!
அவர்கள் அனைவர் சக்தியும் ஜோதிப் பிழம்பாக அவர்கள் முகங்களிலிருந்து வெளிப்பட்டு மங்கள ரூபியான தேவியாக உருக் கொண்டது.
ஜெய ஜெய ஜெய ஜெய!
ஹிமவான் அளித்த சிம்மவாகனத்தில் அமர்ந்து தேவர்கள் அளித்த ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டாள் தேவி. அன்று மகாலய அமாவாசைக்கு முன் தினம்.
ஜெய ஜெய ஜெய ஜெய!



தேவர்களே! கலங்க வேண்டாம். அறிவுச் செல்வம்தான் ஒருவனைக் காப்பாற்றும். அறிவில்லாத மகிஷனிடமிருந்து உங்களைக் காப்பேன்.
யுத்த களத்தில் லட்சக்கணக்கான அசுரர்கள் தேவி மீது ஆயுதங்களை எறிந்தனர். பயனற்றுப் போயின. சிங்கமே அசுரர்களைக் கொன்றது.
மகிஷாசுரனே வந்தான். அவனைப் பாசத்தால் கட்டினாள் தேவி.
நழுவினான் மகிஷாசுரன்.
மகிஷன் மனிதனாகவும் யானையாகவும் சிங்கமாகவும் உரு மாறி மாறி எதிர்த்தான்.
மூடனே! உனக்கு அழிவு காலம் இது!
கீழே விழுந்த மகிஷாசுரனின் கழுத்தில் பாதத்தை வைத்து அழுத்தி திரிசூலத்தால் சம்ஹரித்தாள் தேவி.


அசுர மாயைகள் ஒழிந்தன. தேவர்களும் ரிஷிகளும் தேவி பராசக்தியை வணங்கி வாழ்த்தினார்கள்.
சுரதன், சமாதிக்கு மேதஸ் மகரிஷி மகிஷாசுர மர்த்தனி கதையைக் கூறி முடித்தார்.
தேவியைச் சரணடைந்து மனப்பூர்வமாகப் பிரார்த்திப்பவர்களுக்கு ஒரு துயரும் நேராது...
இன்னும் கூறுங்கள் சுவாமி!
மேதஸ் மகரிஷி தொடர்ந்தார்: சும்பன் நிசும்பன் என்ற அசுரர்கள் தேவர்களை வென்று விட்டார்கள்.
ஆ இதுதான் அமராவதியா!
இதை விடச் சிறந்த நகர் உருவாக்குவோம்.
இருவரும் இமய மலைச் சாரலில் புதிய தலைநகரம் அமைத்து கொடுமைகளைச் செய்து வந்தார்கள்.
தேவர்கள் தங்கள் குருவான பிருஹஸ்பதியை அணுகினார்கள்.
தேவர்களே! அளவு மீறி சுக சௌக்கியங்களில் ஆழ்ந்து போனீர்கள். அதனால் நேர்ந்த துன்பம் இது. பராசக்தியைப் பிரார்த்தனை செய்யுங்கள்.
தேவர்களின் பிரார்த்தனைக்கு இணங்கி இமய மலையில் வாழும் கௌரி தோன்றினாள்.
தேவர்களே உங்களைக் காப்பேன்!


சும்ப நிசும்பர்களின் நகருக்கருகே சோலையில் வீணை வாசித்தாள் தேவி
சும்பனின் ஆட்களான சண்டனும் முண்டனும் தேவியைப் பார்த்துவிட்டு எஜமானனிடம் வந்தார்கள்.
பிரபோ! பேரழகி ஒருத்தியைக் கண்டோம்.
நீங்கள் தான் அவளை அடையத் தகுதியானவர்.
சும்பன் தூது அனுப்பினான்...
எங்கள் அரசர் வீரத்தில் நிகரற்றவர்; அழகில் மன்மதனை வென்றவர்... தேவர்களைத் தோற்கடித்தவர்...
நான் சண்டி... என்னைப் போரில் வெல்பவனையே மணாளனாக ஏற்பேன்!
செய்தி அறிந்து ஆத்திரமுற்றான் சும்பன்.
ஏ! தாம்ர லோசனா! அவளைக் கட்டி இழுத்து வா!
அறுபதாயிரம் போர் வீரர்களுடன் சென்றான் தாம்ரலோசனன். தேவியின் தலைமுடியைப் பற்றி இழுத்துப் போக எண்ணி நெருங்கினான்.
ஹ்ரீம்!


தேவியின் ஹுங்காரத்தி
லேயே புகைந்து போனான்
தூம்ரலோசனன்!
அசுரப் படையை தேவியின் சிம்மம் அதம் செய்தது..
விஷயமறிந்ததும் திகைத்த சும்பாசுரன்
சமாளித்துக் கொண்டு...
சண்ட முண்டர்களே!
நீங்கள் போய் தூம்ரலோசனனின்
தோல்வியை வெற்றியாக்கித்
திரும்புங்கள்!
அழகிய தேவி கௌரி, காளி
சக்தியாக, சண்ட முண்டர்களை
வெல்லும் சாமுண்டேச்
வரியாக உருவெடுத்தாள்..
சண்ட முண்டர்களையும் அவர்களுடன்
வந்த அசுரப் படையினரையும் அழித்தாள்.
தோல்வியை ஏற்காமல் சகல உலகங்களி
லிருந்தும் அசுரப்படைகளை வரவழைத்து
ரக்த பீஜன் தலைமையில் அனுப்பினான் சும்பன்.


பிரும்மா, விஷ்ணு, சிவன், இந்திரன், முருகன் முதலிய தெய்வங்கள் தங்கள் சக்திகளைத் திரட்டி, பெண் தெய்வங்களாக, ஸப்த மாதர்களாக தேவிக்கு உதவ அனுப்பினர்.
அந்த ஏழு தளபதிகளின் துணையுடன் அசுரர்களை அழித்தாள் தேவி, சாமுண்டி.
ரக்த பீஜன் சாமுண்டியால் உயிர் உறிஞ்சப்பட்டு மடிந்தான்.
அடுத்துப் போரிட வந்தான் நிசும்பன். அவன் தலையை வெட்டி வீழ்த்தினள் அம்பிகை.


சும்பன் ஒருவனைத்தவிர அசுரர்களில் வேறு யாரும் மிஞ்சி இராத நிலையில்...
ரக்தபீஜனும் நிசும்பனும் வீழ்ந்த பிறகு நான் மட்டும் ஏன் இருக்க வேண்டும்? நானும் வீர மரணம் அடைகிறேன்...
மாவீரனும் பெரும் சக்தி படைத்தவனுமான சும்பன், அம்பாளைத் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் நின்றான்!
வானிலேயே பயங்கர யுத்தம் நடந்தது. தேவி சும்பனைச் சுழற்றி அடித்து, பூமியில் அறைந்தாள். திரிசூலத்தால் மாய்த்து மோட்சமளித்தாள்.
அமரருலகில் மீண்டும் அமைதி நிலவியது. தேவி அசுரர்களை வதைத்து தேவர்களைக் காத்த தினங்களே நவராத்திரி. தேவர்கள் தங்கள் ஆயுதங்களின் சக்தியைத் திரும்பப்பெற நடத்திய பூஜையே ஆயுத பூஜை. தேவர்கள் வெற்றி விழா கொண்டாடிய தினம் விஜயதசமி.

ஓசியில் ஒரு பயணம்

மலர் வண்ணன்

"அப்படி பெரிசா நான் என்னத்தைக் கேட்டுட்டேன்? கேவலம் ஒரு சினிமா. இதுக்குப் போய் அப்பா இவ்வளவு சத்தம் போடுவதா? நான் என்ன ஒவ்வொருத்தரைப் போல் தினமுமா போறேன். மாசத்துக்கு ஒண்ணு... கொஞ்சமாவது இரக்கம் வேண்டாம்? அவனவன் சினிமா சினிமாவாப் பார்த்துட்டு வந்து கிளாஸ்லே பிச்சு உதர்றான். நினைச்சாலே அழுகை வரது. நமக்கு என்னடான்னா....'

பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்த கணேசன் கண்களைச் சட்டென்று துடைத்துக் கொண்டான். கண்ணிலிருந்துஉதிர்ந்தபெரியபெரிய துளிகள் அவன் கைபட்டுக் காணாமல் போயின!

பஸ் வருகிறதா என்று பார்த்தான். காணோம்.

'இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமை. டிக்கெட் கிடைக்குதோ இல்லையோ, போதாக் குறைக்கு பஸ் வேறு லேட்.

கணேசனின் கைகள் அவனையும் அறியாமல் பாக்கெட்டைத் தடவின. ஒரு ரூபாய் நோட்டும், ஒரு ரூபாய்ச் சில்லறையும் கையில் பட்டன.

'போறதுக்கு அம்பது பைசா. வரதுக்கு அம்பது பைசா. சினிமாவுக்கு ஒரு ரூபாய். ரெண்டு ரூபாயும் சரியாப் போச்சு. ஒரு அஞ்சு காசுகூட அதிகமாத் தரலே. ஒரு ரூபாய் டிக்கெட் கிடைக்கலேன்னா என்ன பண்றது? ச்சே....'

'இந்தப் படத்தை கிளாஸ்லே ஒருத்தனும் பார்க்கலே.நாளைக்குப் போய் கதை சொல்லி அவனுகளை அசர அடிச்சால்தான் எனக்கு நிம்மதி. கடவுளே டிக்கெட் கிடைக்கணும்!'

பாக்கெட்டுக்குள் கையை விட்ட கணேசன் ஐம்பது பைசாவை எடுத்து உள்ளங் கையில் வைத்து இறுகப் பிடித்துக் கொண்டான், பஸ் டிக்கெட்டுக்கு.

'பேசாமல் இதையும் பாக்கெட்டில் போட்டுக் கொண்டால்?'

'டிக்கெட் எடுக்க வேண்டாமா?'

'ஒரு நாளைக்கு ஓசியிலேதான் போவோமே! ஒரு ரூபாய் டிக்கெட் கிடைக்கலேன்னா... ஒண்ணு தொண்ணூறு வாங்கலாமே!'

'இருக்கிறதே இரண்டு ரூபாய். திரும்பி வரதுக்கு என்ன பண்றது?'

அதை அப்பப் பார்த்துக்கலாம். முடிஞ்சா மறுபடியும் ஓசி... இல்லேன்னா இருக்கவே இருக்குது, நடராஜா சர்வீஸ்.'

எவனாவதுசெக்கிங்பிடிச்சிட்டா?'

கணேசனின் முகம் சட்டென்று சுருங்கிப்போயிற்று. உதட்டைப்பிதுக்கிக் கொண்டு, சோர்ந்து போனான்.

பஸ் வந்து நின்றதும் ஏறிக் கொண்டான். உள்ளே ஏராளமான கூட்டம். ஒடுங்கியவாறே நின்று கொண்டான்.

"கணேசா, எங்கேடா?"

கணேசன் திரும்பிப் பார்த்தான். கடைசி சீட்டில் அவனுடைய வகுப்புத் தோழன் உட்கார்ந்திருந்தான்.

"பாபு, நீயா, நான் சினிமாவுக்குப் போறேன், நீ?"

"அக்கா வீட்டுக்கு! அடுத்த ஸ்டாப்லே இறங்கிடுவேன்."

பஸ் உறுமிவிட்டுப் புறப்பட்டது.

"ஏண்டா பாபு.... இன்னிக்கு பஸ் லேட்?"

'ம். அதை ஏன் கேட்கறே? சிங்காநல்லூர் கிட்ட செக்கிங் வந்தாங்க. ஒரு டிக்கெட் உதைக்கவே, எல்லாரையும் செக் பண்ணினாங்க. அதான் லேட். பாவம்,ஒருகிழவி மாட்டிட்டா."

கணேசன் யோசித்தான்.

'இப்பத்தான் செக்கிங் முடிஞ்சிருக்கு? அப்போ, பீளமேடு போற வரைக்கும் நிச்சயமா செக்கிங் இருக்காது. பேசாமல் டிக்கெட் வாங்காமலேயே போயிடலாம். கண்டக்டர், இந்தக் கூட்டத்திலே எண்ணிப் பார்க்கவா போறார்?"

கண்டக்டர் தனக்கு அருகில் வந்த போது, கணேசன் தலையைக் குனிந்து கொண்டான்.

இதயம் படபடத்தது. கண்டக்டர் போன பிறகும்கூட அந்தப் படபடப்பு மறையவில்லை.



கண்டக்டர் தன்னை உற்றுப் பார்த்த் மாதிரி இருக்கிறதே, என்று நினைத்துக் கொண்டான்.

பாபுசொல்லியதோ, இறங்கியதோ எதுவும் தெரியவில்லை. ஒரு பக்கம் பயம். ஒரு பக்கம் சந்தோஷம்.

ஒரு பிச்சைக்காரன் தன்னை இடித்துக் கொண்டு நின்றதைக் கவனித்த போதுதான் கணேசன் சுய நினைவுக்கு வந்தான்.

அருவருப்போடு பார்த்தான்.

இவன்எங்கேஏறித்தொலைத்தான்? கர்மம்!'

அந்தப் பிச்சைக்காரன் இவனை இடித்தவாறே எம்பி எம்பி பஸ்ஸின் முன்புறம் பார்த்தான். யாரைப் பார்க்கிறான் இவன்?

"சாமி.... பீளமேடு ஒரு டிக்கெட் கொடுங்க?"

கண்டக்டர் பின்புறமாக வருவதற்குள் மூன்று முறை கேட்டுவிட்டான்.

கண்டக்டர் வேறு யாருக்கோ டிக்கெட் கொடுப்பதற்குள் 'டிக்கெட், டிக்கெட், பீளமேடு.... ஒண்ணு..." என்று பறந்தான்.

கண்டக்டர்சிரித்துக்கொண்டான்.

"ஏம்பா, நீயோ பிச்சை. டிக்கெட்டுக்கு ஏன் பறக்கறே? ஒரு காலை வேறு காணோம். பேசாமப் பயணம் செய்ய வேண்டியதுதானே?"

"அது தப்புங்க சாமி. டிக்கெட்டு வாங்காமல் போறது பாவம். ஏதோ நாலு மகராசருங்க நாலு காசு தானம் பண்ணுங்க. நான் உங்களை ஏமாத்த ஆரம்பிச்சா, இந்தநாலுகாசும்கிடைக்காமல் போகும். இந்தாங்க நாப்பது காசு இருக்கு.

"ம். உனக்காக இரக்கப்பட்டேன் பாரு." என்றவாறே டிக்கெட்டைக் கிழித்துக் கொடுத்தார் கண்டக்டர்.

கணேசனுக்கு வியர்த்துக் கொட்ட ஆரம்பித்தது. இதயத்தில்யாரோசுருக்கென்று குத்தின மாதிரி இருந்தது.

"ஐயோ... கேவலம், ஒரு பிச்சைக்காரன். அவனுக்கு இருக்கிற அறிவு கூட நமக்கு இல்லையே! படிச்சு என்ன பிரயோஜனம்?"

கணேசன்கூனிக்குறுகிப்போனான்.

'பேசாமல் டிக்கெட் வாங்கி விடலாமா?'

'இந்நேரம் என்னடா பண்ணி னேன்னு கண்டக்டர் திட்டுவார்.'

'இங்கேதான் ஏறினேம்'னு சொல் லிட்டால்?'

'கண்டக்டர் அப்பவே உற்றுப் பார்த்த மாதிரி இருந்தது?'

'இப்போ என்ன செய்யறது?'

ஒரு பிச்சைக்காரனின் நேர்மை, தன் கண்களைத் திறந்துவிட்டதை எண் ணியவாறே கலங்கினன் கணேசன்.

கையில் இருந்த காசு கனத்தது.

''பிளேமேடு இறங்குங்க...'' என் ருர் கண்டக்டர்.

'ஆ, வந்தாச்சா?'

கணேசன் எந்த முடிவுக்கும் வர முடியாமல் தடுமாறியவாறே இறங்கி ஞன்.

'இந்தக் காசு எனக்கு வேண்டாம்! இதை என்ன செய்வது?

கணேசன் யோசித்துக் கொண் டிருக்கும்போதே, அந்தப் பிச்சைக் காரனும் பஸ்ஸில் இருந்து இறங்கி ஞன்.

சட்டென்று ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டான் கணேசன்.

வேகமாய் அந்தப் பிச்சைக்கார னின் அருகில் சென்ருன். அவன் கை களைத் தொட்டான். இழுத்தான். கை களுக்குள் அந்த ஐம்பது காசு நாண யத்தைப் புதைத்து மூடிவிட்டு, சினிமா தியேட்டரை நோக்கி வேகமாக ஓடி ஞன். அப்போது அவன் மனத்தி லிருந்த பாரம் இறங்கிவிட்டது!

காகிதத்தைக் கண்டு பிடித்தவரின் கதி



1900 ஆண்டுகளுக்கு முன்பு சீனர்கள் மூங்கிலின் மேலும், பட்டின் மீதும் எழுதி வந்தார்கள். மூங்கிலின் மீது எழுதுவது கடினமாக இருந்தது. பட்டு விலையோ அதிக மாக இருந்தது. ஆகையால், 'எழுதுவதற்கு ஒரு புதிய பொருளைக் கண்டுபிடிக்க வேண் டும்; அது மலிவாகவும் இருக்க வேண்டும்; கனமில்லாமலும் இருக்க வேண்டும்' என்று ஸை–லூன் என்னும் ஒரு சீனக்காரர் நினைத் தார்.

இதைப் பற்றியே அவர் சிந்தனை செய் தார். பல ஆராய்ச்சிகளும் நடத்தினர். சிறிது காலத்தில் அவருடைய முயற்சி வெற்றி பெற் றது. கந்தல் துணிகளிலிருந்தும், பழைய கயிறு களிலிருந்தும், பழைய வலைகளிலிருந்தும் எழுதுவதற்கான ஒரு பொருளை அவர் கண்டு பிடித்தார். உடனே, சீனச் சக்கரவர்த்தி யிடம் இதைத் தெரிவித்தார்.

சக்கரவர்த்தி அவர் கண்டுபிடித்த பொருள் மிகவும் உபயோகமானது என்பதை உணர்ந் தார். உடனே, ஸை–லூனுக்கு நிறையப் பரிசுகள் அளித்து அவரை ஒரு பிரபுவாக வும் ஆக்கினர்.

சில ஆண்டுகள் சென்றன. ஒருநாள், சக்கரவர்த்திக்கு ஏதோ ஒரு விஷயமாக ஸை–லூன் மீது அபாரமான கோபம் வந்து விட்டது. விசாரணை செய்து தண்டனை வழங் கப் போவதாக அறிவித்தார். ஸை–லூன் பயந்து விட்டார். தமக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என்று பயந்து நஞ்சைத் தின்று தற்கொலை செய்து கொண்டு விட்டார்.

முதல் முதலாகக் காகிதத்தைக் கண்டு பிடித்தவரின் கதி இப்படி ஆனதே என்று சீன மக்கள் மட்டுமல்ல; நாமும் வருந்துகி றேம் அல்லவா?



மேலேயுள்ள காட்சி, பாரதியாரின் ஒரு பாடலில் உள்ள சில வரிகளை நினை ஆட்டுகின்றன அல்லவா? அவை எந்த வரிகள்?

விடை : 76 ஆம் பக்கம்.

பிருந்தாவனக் கதைகள்

நகைப் பெட்டி

ஆர்.கே.கோபிநாத்
(6269)



ஓர் ஊரில் ராமு, சோமு என்று இருநண்பர்கள் இருந்தார்கள். ஆனால், இருவரும் பெரிய எத்தர்கள்.

அன்று அவர்கள் ஊரில் சந்தை. ஒரு பக்கம் ராமு, ஒரு கூடையில் முக்கால் பகுதி மண்ணையும் மேலாகக் கால் பகுதி உளுத்தம் பருப்பையும் எடுத்துக் கொண்டு வந்தான். இன்னொரு பக்கம் சோமுவும் அதே போல முக்கால் அளவு மண்ணும் கால் அளவு துவரம் பருப்பும் எடுத்துக் கொண்டு வந்திருந்தான். சோமுவைக் கண்ட ராமு, "ஏன் நாம் விளைகை உள்ளே செல்ல வேண்டும்? இங்கேயே ஒருவர் பொருளை ஒருவர் மாற்றிக் கொள்ளலாமே" என்றான். உடனே சோமு ஒப்புக் கொண்டான். 'இவன் சரியான முட்டாள். ஏமாந்து விட்டான்!' என்று ராமு தனக்குள் எண்ணிக் கொண்டான். அதைப் போல சோமுவும் எண்ணிக் கொண்டான். இருவரும் வீட்டில் சென்று கூடையைத் திறந்து பார்த்ததும் திடுக்கிட்டார்கள். நன்றாக ஏமாந்தார்கள்.

இந்த இரு எத்தர்களும் எப்படியோ ஒன்று சேர்ந்து வேலை தேடப் புறப்பட்டார்கள். போகும் வழியில் ஒரு பெரிய மாளிகையைக் கண்டார்கள். உள்ளே சென்று அந்த மாளிகையின் எசமானியான கிழவியிடம் அவர்கள் வேலை கேட்டார்கள். அவளும் அவர்களை உடனே வேலையில் சேர்த்துக் கொண்டாள். சில நாட்கள் சென்றன. ஒரு நாள் காலையில் ராமு சோமுவிடம், "இன்று இரவு கிழவி உறங்கும் போது அவளுடைய நகைகளை எடுத்துக் கொண்டு நாம் ஓடிவிடலாம். பிறகு, இருவரும் பங்கிட்டுக் கொள்ளலாம்" என்று கூறினான். சோமுவும் 'சரி' என்றான்.

இதை ரகசியமாக அறிந்த கிழவி அன்று மாலையே தன் நகைகளைக் கழற்றிப் பத்திரமான ஓர் இடத்தில் மறைத்து வைத்தான். ராமுவும் சோமுவும் கிணற்றருகே வேலை செய்து கொண்டிருக்கும் போது கிழவி ஒரு பெரிய பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய்க் கிணற்றில் போட்டாள். இதைப் பார்த்த ராமுவும் சோமுவும் ஏன் என்று கேட்டார்கள். அதற்கு கிழவி, "இவ்வளவு வயதான எனக்கு நகைகள் எதற்கு? எனவே, நான் என் நகைகளை எல்லாம் பெட்டியில் வைத்துக் கிணற்றில் போட்டு விட்டேன்," எனக் கூறினாள்.

இதை அறிந்த இருவரும் உள்ளூர மகிழ்ந்தனர். இரவு இருவரும் கிணற்றின் அருகில் சென்றனர். சோமு ராமுவிடம், "நீ கீழே இறங்கிக் கயிற்றைப் பெட்டியோடு கட்டு. நான் மேலே இருந்து இழுக்கிறேன். பிறகு, நீ மேலே

வா'' என்று கூறினான். அதற்கு ராமுவும் ஒப்புக் கொண்டான்.

'ராமு உள்ளே இறங்கிப் பெட்டியைக் கயிற்றால் கட்டி மேலே எடுக்கச் சொல்வான். உடனே நாம் அதை எடுத்துக் கொண்டு ஓடிவிடலாம்' என்று சோமு தனக்குள் எண்ணிக் கொண்டான். அதேபோல ராமுவும் உள்ளே இறங்கியவுடன், பெட்டியில் உள்ள நகைகளை எடுத்துக் கொண்டு வெறும் பெட்டியை மேலே அனுப்பி விடலாம்' என்று தனக்குள் எண்ணிக் கொண்டான். அதேபோல ராமுவும் உள்ளே இறங்கினான். பெட்டியைத் திறந்து பார்த்ததும் திடுக்கிட்டான். ஏனென்றால் பெட்டியில் நகை இல்லை. உடனே ராமுவே பெட்டியில் உட்கார்ந்து கொண்டு 'எடு' என்றான். உடனே சோமு இழுத்தான். 'எவ்வளவு கனமாக இருக்கிறது?' என்று தனக்குள் எண்ணிக் கொண்டான். பெட்டியை எடுத்துக் கொண்டு நடுக் காட்டிற்குள் ஓடினான். ஓடி ஓரிடத்தில் நின்று பெட்டியைத் திறந்து பார்த்ததும் திடுக்கிட்டான். ஏனென்றால், அதற்குள் நகைகள் இல்லை. அதற்குப் பதில் ராமு அதில் உட்கார்ந்திருந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்ததும் அவர்களுக்கே சிரிப்பு வந்து விட்டது. ''இனி மேலாவது உழைத்துச் சம்பாதிப்போம்'' என முடிவு செய்தார்கள்.



கந்தன் ஒரு ஏழைச் சிறுவன். அவன் பெற்றோருக்கு அவன் ஒரே பிள்ளை ஆயினும், அவர்கள் உழைத்து ஈட்டிய செல்வம் உணவுக்கு மட்டுமே போதுமானதாயிருந்தது.

கந்தன் பத்தாம் வகுப்புப் படிக்கும் சிறுவன். அவனுக்கும் அவன் தந்தைக்கும் ஒரே அளவான ''கால்'' கள். ஆசையால் ஒரே செருப்பு! தந்தை வீட்டில் இருக்கும் போது கந்தன் அதனை அணிந்துகொள்வான். தந்தை வேலைக்குப் போய் விட்டால் கந்தன் வெறுங் காலோடுதான் வெயிலில் செல்லுதல் வேண்டும். அவன் தன் தந்தையிடம் செருப்பு வாங்கித் தரும்படி பல நாளாகக் கேட்டு வந்தான். அவரும் 'ஆகட்டும்' என்று கூறி வந்தார்.

அன்று வெள்ளிக்கிழமை. கந்தன் கோயிலுக்குச் சென்றான். மதிய வேளை; ஈ காக்காய் கூட இல்லை! இவன்தான் அங்கு இருந்தான். தரிசனம் முடிந்தபின் கோயிலைச் சுற்றினான். அப்பொழுது அங்கு யாரோ வருவது போல் இருந்தது. ஒரு சுற்றுச் சுற்றியபின் வெளியே வந்தான். ஆ! எதிரே அழகான புத்தம் புதிய ஒரு ஜோடி செருப்பு அனாதையாய்க் கிடந்தது! தன் நிலையை எண்ணினான்.

சட்டெனசுற்றுமுற்றும்பார்த்தான். செருப்புக்குச் சொந்தக்காரரைக் காணோம். கோயிலைச் சுற்றி வருகிறார் போலும்!

'இதுதான் சமயம்' என அதைக் காலில் மாட்டிக் கொண்டு எவ்வளவு வேகமாகநடக்கமுடியுமோ அவ்வளவு வேகமாய் ஓட்டம் பிடித்தான்.

பார்வைக்கெட்டாத தூரம் வந்து விட்டான். ஓர் அச்சம் நீங்கி மற்றொரு அச்சம் பிறந்தது. தன் அப்பா அம்மா எப்படி இது கிடைத்தது என்று கேட்டால்...? என்ன சொல்வது? அவன்தான் பொய்யில் மன்னனாயிற்றே! அவனுக்கில்லாத பொய்யா? [illegible] டை அடைந்தான்.

தாய் அவனைக் கண்டவுடன், ''அட! இந்தச் செருப்பு உனக்கு எப்படிக் கிடைத்தது?'' என்றாள். உடனே, அவன், ''அம்மா! நான் ஆபத்தில் சிக்கியிருந்த ஒருவரைக் காப்பாற்றினேன். அவர் எனக்கு ஏதாவது பரிசு கொடுக்க நினைத்தார். அப்போது அவர் கையில் பணம் இல்லாததால், தான் வாங்கிய புதுச் செருப்பையே தானம் செய்து விட்டார்!'' என்றான். தாயோ உண்மை தெரியாததால்

அவனைத்தட்டிக்கொடுத்தாள். அவன் தந்தை சிறிது நேரத்திற்குப் பின் வீட்டிற்கு வந்தார். அவர் வீட்டிற்குள் நுழைவதற்கு முன்பே, கந்தனின் தாய் அவன் செய்த வீரச் செயலைக் கூறி அதற்காக அவன் பெற்ற பரிசையும் காட்டினாள்.

உடனே தந்தை கந்தனைப் பாராட்டினாரா? இல்லை. 'படார்...! படார்..!' என்று இரு அடிகள் இரு கன்னத்திலும் விழுந்தன. கன்னம்—தக்காளிப் பழம் போல் சிவந்து விட்டது. ஏன்?

அது அவன் தந்தை கந்தனுக்காக வாங்கிய புத்தம் புதுச் செருப்பு. புதிதாக உடைகளையோ, செருப்புகளையோ வாங்கினால் அதைக் கோயிலுக்குப் போட்டுச் செல்வது அவர்கள் குல வழக்கம். அதனால் அவர் அதைப் போட்டுச் சென்றார். அவர் உள்ளே சாமிகும்பிட்டுக்கொண்டிருந்தபோது தான் கந்தன் அது யாருடையது என்பது தெரியாமல் எடுத்து வந்திருக்கிறான்! அவர் கொடுத்த அடிகளில் ஒன்று அவனுடைய திருட்டுச் செயலிற்காக! மற்றொன்று அவன் சொன்ன பொய்க்காக!

அன்றிலிருந்து கந்தன் தீய செயல்களை விடுத்தான். திருந்தி நல்லவனாக வாழ முயன்றான்.

* * * * * * *

நெஞ்சங்கள் பேசின!

எஸ். அரவிந்தன் (1235)



அது புறநகரில் உள்ள அழகிய பங்களா. சுற்றிலும் மரஞ்செடி, கொடிகளும், நடுவில் புல் தரையில் மத்தியில் உள்ள வெண்ணிற வீடு, ஊட்டி போல மனத்தைக் கவர்ந்து வருவோரை மலைக்க வைக்கிறது.

அப்போது படகு போன்ற கார் அந்த பங்களாவின் வாயிலில் வந்து நின்றது. அதிலிருந்து, கதர்ச் சட்டை அணிந்த ஒருவர் இறங்கினார். எளிய உடை. அறிவின் திருவுருவம். சல்யூட் அடித்து வரவேற்கிறான் மிடுக்காக சீருடையில் உள்ள பணியாள்.

'இந்த ஏழை ஆசிரியருக்கா இந்த வரவேற்பு?' மலைப்புடன் மெதுவாக நடக்கிறார். அந்த வீட்டின் இளவரசிக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க தினமும் மாலையில் வருபவர் அவர்.

வீட்டின் வெளியில் பிரம்பு நாற்காலி, மேசை, பசும்புல் தரையில், போடப்பட்டு திறந்த வெளிப் பள்ளியாகத் திகழ்ந்தது. வகுப்பின் இடையில் இருவருக்கும் சிற்றுண்டி வரும். அந்த ஆசிரியரால் எண்ணிப்பார்க்கக் கூட முடியாத் சத்துணவு அது. அதனைப் பரிமாற வேறு ஒரு பணியாள்.

இயந்திர கதியில் பல பணியாட்கள் வெவ்வேறு வேலைகளைக் கவனித்த வண்ணம் உலவுவர்.

வகுப்பு முடிந்து, வீடு திரும்ப மீண்டும் அந்தக் கார் பவனி வரும். காரில் ஏற்றிவிட்டு, சல்யூட் அடித்து, வழியனுப்ப அதே சீருடைப் பணியாளன்! வரவேற்ற போதும், வழியனுப்பும் போதும் அவன் முகம் தனிக்களையுடன் திகழும். தோட்டத்தில் பூந் தொட்டிகளைப் பராமரிப்பது, விருந்தினரை வரவேற்று, வழியனுப்புவது எல்லாமே அவனுக்குக் கைவந்தக் கலை. அவன் பெயர் மாதவன்.

ஆண்டு முழுதும், நடந்து வந்த அந்த வகுப்புக்கு அன்றுதான் கடைசி நாள். அந்த ஆண்டின் விடுமுறையில் இளவரசி ஊட்டி செல்வதால், அடுத்த ஆண்டுதான் ஆசிரியர் வர வேண்டும்.

எவ்வளவோ பணியாட்கள் அந்த வீட்டில் உபசரித்தபோதும் மாதவனின் உபசரிப்பால் மிகவும் மனம் பூரித்தார் ஆசிரியர். கடமைக்காகப் பணியாற்றும் பல பணியாட்களுக்

கிடையே, நெஞ்சார்ந்த மனம் ஒப்பிச் செய்யும் அவன் பணி, அவர் நெஞ்சை மிகவும் கவர்ந்தது.

"மாதவா! உன்னிடம் என்னையறியாத பிரியம் ஏற்படுகிறது. உனக்கு ஏதேனும் அளிக்க வேண்டும் என விரும்புகிறேன். என்னாலானது இது தான். இனி அடுத்த ஆண்டுதான் நாம் சந்திப்போம்!" எனக் கூறித் தம் பையிலிருந்து ஒரு ரோஜா மலரை அவன் வெள்ளைச் சீருடைச் சட்டைப் பையில் பித்தான் அருகில் பொருத்தினார்.

நன்றிப் பெருக்காலும், அன்பு வெள்ளத்தாலும்திக்குமுக்காடியமாதவன் மீண்டும் ஒரு சல்யூட் அடித்தான்.

மகிழ்ச்சியால் ஒளி வீசிய அவன் கண்களில் திடீரென ஒரு மாற்றம். முகத்தில் ஒரு வாட்டம்.

திகைத்தார் ஆசிரியர்.

"என்னப்பா, என்ன விஷயம்? ஏன் கலக்கம்?" என வினவினார் ஆசிரியர்.

"ஐயா! என்னிடம் அன்புகொண்டு என்னை கௌரவப்படுத்தினீர்கள்! நன்றி! ஆனால், நான் என் கடமையில் தவறிவிட்டேனே என்ற எண்ணம் என்னைக் கலங்க வைக்கிறது.

"இத்தோட்டத்தில் உள்ள பூக்களை யாரும் பறிக்காமல் பாதுகாப்பதும் என் கடமை! இதை யார் மனமும் நோகாமல் நான் செய்ய வேண்டும். ஆனால், இன்று நான் என் கடமையைச் செய்யாமல் தவறிவிட்டேனே என அஞ்சுகிறேன்" என்றான் மாதவன்.


"கவலைப்படாதே. அந்த ஐயம் உனக்கு வரக்கூடாதே என்றுதான் பூவின் காம்பில் ஒரு காகிதம் சுற்றி வைத்துள்ளேன். அதைஎடுத்துப்பார்" என்றார் ஆசிரியர்.

'இந்தப்பூ இந்தத் தோட்டத்தில் பறித்தது அல்ல' என்று அக்காகிதத்தில் எழுதியிருந்தது.

'ஆசிரியர் மனத்தைப் புண்படுத்திவிட்டோமோ' என்று மாதவன் மீண்டும் வருந்தினான்.

ஆறுதலாய் முதுகில் தட்டிக் கொடுத்தார் ஆசிரியர். இருவர் கண்களும் கலங்கின. ஒருவரை ஒருவர் உணர்ந்த அவர்களின் வாய்கள் பேசவில்லை, நெஞ்சங்கள் பேசின.


11 மொழிகளில் மகாத்மாவின் கையெழுத்து



நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி 11 மொழிகளில் தம்முடைய கையெழுத்தைப் போடத் தெரிந்து வைத்திருந்தார். ஒரு சமயம் மொரார்ஜி தேசாய் காந்தியிடம் அந்த 11 மொழிகளிலும் கையெழுத்துப் போடுமாறு கேட்டு வாங்கி வைத்திருக்கிறார். (படத்தில் அதை நீங்களும் சேகரித்து வைத்துக் கொள்ளலாமே!)

—R·R· ரங்காச்சாரி.


இதோ
தீபாவளி!
'சுதர்ஸன்'



என் கதையைக் கேளுங்கள்

- யானை

என்னைக் கண்டாலே உங்களுக்கெல்லாம் ஆனந்தம்தான்!

ஆனை ஆனை அழகர் ஆனை!
அழகரும் சொக்கரும் ஏறும் ஆனை!

என்று பாட ஆரம்பித்து விடுவீர்கள்.

'உலகத்திலே உயரமான மிருகம் நான்தான்' என்று அந்த நெட்டைக் கழுத்து ஒட்டைச் சிவிங்கி பெருமையாகச் சொல்லிக் கொண்டதே.. ஆனால், நிலத்தில் வாழும் மிருகங்களிலே மிகப் பெரியது எது என்று சொன்னதா? அது சொல்லாவிட்டால் போகிறது. இதோ, நான் சொல்லுகிறேன். நான்தான் மிகமிகப் பெரிய மிருகம். பார்த்தாலே தெரியவில்லையா?

காட்டிலே நானும் என் குடும்பத்தாரும் எப்போதும் கூட்டமாகவே இருப்போம். எங்கள் கூட்டத்தில் முப்பது பேர் உண்டு. இரை தேடப் போகும் போதும் தண்ணீர் குடிக்கப் போகும் போதும் நாங்கள் ஒருவர் பின் ஒருவராகப் போவோம். எங்களுக்கு வழிகாட்டியாக முன்னால் ஒரு தலைவர் போவார். அந்தத் தலைவர் வயதானவராக இருப்பார். அனுபவமும் அவருக்கு அதிகம். அந்தத் தலைவருக்குப் பின்னால், பெண் யானைகள் தங்கள் குட்டிகளுடன் போகும். அவைகளுக்குப் பின்னால்தான் ஆண்களாகிய நாங்கள் போவோம்.

சில சமயம் வேட்டைக்காரர்கள் காட்டுக்குள்ளே வந்து எங்களைப் பிடிக்கச் சூழ்ச்சி செய்வார்கள். அதனால், அந்தத் தலைவர் காற்று வரும் திசையிலே அடிக்கடி துதிக்கையைத் தூக்கிப் பிடித்து, மனித வாசனை வருகிறதா என்று பார்ப்பார். மனிதர்கள் வருவது தெரிந்தால் துதிக்கையைத் தரையில் ஓங்கி அடிப்பார். கீச்சுக் குரலில் பிளிறுவார். உடனே நாங்கள் எல்லோரும் பத்திரமான இடத்திற்கு நடக்க ஆரம்பித்து விடுவோம். தாவிக் குதித்துச் செல்லவோ, வேகமாக ஓடவோ எங்களுக்குத் தெரியாது. ஆனாலும், வேகமாக நடப்போம். சாதாரணமாக மணிக்கு 7, 8 மைல் நடக்கக் கூடிய நாங்கள் அப்போது 15 மைல் வேகத்தில் செல்வோம்.

வேகமாக நாங்கள் நடக்கும்போது, சில குட்டிகளால் எங்களைத் தொட்டு நடக்க முடியாது. அப்பொழுது ஒவ்வொரு குட்டியும் தன் தாயின் வாலைத் துதிக்கையால் பிடித்துக் கொண்டே நடக்கும். தாயும் தன் குட்டியை வாலால் இழுத்துக் கொண்டே போவாள். தானே நடப்பது பாதி, தாயார் இழுப்பது பாதி — இப்படியே ஆபத்திலிருந்து குட்டிகளும் எங்களோடு தப்பித்துக் கொள்ளும்.

குறுக்கே ஆறு வந்தால், கவலைப்பட மாட்டோம். எங்களுக்குத்தான் நன்றாக நீந்தத் தெரியுமே! வேகமாக நீந்தி அக்கரை போய் விடுவோம். இவ்

வளவு பெரிய உடம்பைத் தூக்கிக் கொண்டு எப்படித்தான் நீந்துகிறதோ!' என்று ஆச்சரியப்படுகிறீர்களா? செங்குத்தான பாதையில் நாங்கள் ஏறி இறங்குவதைப் பார்த்தால், இன்னும் ஆச்சரியப்படுவீர்கள். மிகவும் சரிவான இடங்களில், நாங்கள் கால்களைப் பரப்பிக் கொண்டு வயிற்றால் நகருவதைப் பார்த்தால், மேலும் மேலும் ஆச்சரியமாயிருக்கும்!

என் கண்ணைப் பார்த்து, 'இவ்வளவு பெரிய யானைக்குக் கோலிக் குண்டு போலக் கண் இருக்கிறதே!' என்று பல சிறுவர்கள் வியப்படைகிறார்கள். கண் சிறிதாக இருப்பதால், பார்வையும் கொஞ்சம் மந்தம் தான். கண் சிறிதாயிருந்தாலும், காது எவ்வளவு பெரிதாக இருக்கிறது. பார்த்தீர்களா? முறம் போல் இருக்கிறதல்லவா?

கண், காது இவைகளைவிட எனக்கு மிகவும் அவசியமான பாகம் மூக்குத்தான். என்னுடைய மூக்கு மிக மிக நீளம். "மூக்கா! அது எங்கே இருக்கிறது?" என்று கேட்கிறீர்களா? மூக்காகவும், கையாகவும் எனக்கு உபயோகப்படும்துதிக்கைதான் அது! என் துதிக்கையின் நுனியில் உங்களுக்கு இருப்பதுபோல் ஐந்து விரல்கள் இல்லை. ஒரே ஒரு சின்ன விரல்தான் உண்டு. துதிக்கையின் நுனியில் கூர்மையாக இருக்கிறதே, அதைத்தான் விரல் என்கிறேன்!

மூச்சு விடவும், வாசனை அறியவும், உணவை வாயில் திணிக்கவும், தண்ணீர் குடிக்கவும், தண்ணீரை எடுத்து உடம்பில் தெளிக்கவும் இந்தத் துதிக்கைதான் உபயோகப்படுகிறது. இதனால், பெரிய பெரிய மரங்களையும் தூக்குவேன். சின்னஞ் சிறிய புல்லையும் பறிப்பேன். எதிரே புலி வந்தால் அதற்கும் என் துதிக்கையால் ஓங்கி ஓர் அறை கொடுப்பேன்!




புதிய ரப்பர்!

நீங்கள் உபயோகப்படுத்துகின்ற ரப்பர் துண்டுகள் சில மாதங்களில் கடினமடைந்து எழுத்தை நன்றாக அழிப்பதில்லை. அப்படிக் கடினமாகி அழிக்க மறுக்கும் ரப்பரைச் சிறிதளவு மண்ணெண்ணெயில், இரண்டு நாட்களுக்கு ஊறப் போட்டு வைத்திருந்து, சிறிது நேரம் உலர்த்துங்கள். கடினமாயிருந்த ரப்பர் வெண்மையும், மென்மையும் அடைந்து, புதியது போல எழுத்தைச் சுத்தமாக அழிக்கும்.

—எடையூர் சிவமதி

என் முன்னால் ஒரு சிறு பட்டாணிக் கடலையை நீட்டிப் பாருங்கள்! கீழே விழாமல் அதை நான் எடுத்துத் தின்று விடுவேன். தரையில் கிடக்கும் ஊசியைக் கூட என்னால் சுலபமாக எடுத்து விட முடியும்! என் துதிக்கை நுனியில் இருக்கிறதே சின்னஞ்சிறு விரல், அது அவ்வளவு நுட்பமானது. துதிக்கையால் இன்னொன்றும் செய்வேன். அதுதான் சலாம் போடுவது!

என்னையும் என் தோழர்களையும் 'இந்திய யானைகள்' என்று அழைப்பார்கள். எங்களை இந்தியாவில் மட்டுமல்ல; இலங்கை, பர்மா, மலேசியா, சயாம் முதலிய இடங்களிலும் காணலாம். எங்களிலே இன்னொரு வகை



உண்டு. ஆப்பிரிக்க யானை என்று அதற்குப் பெயர். இருவருக்கும் என்ன வித்தியாசம்? ஒன்றா, இரண்டா? பல வித்தியாசங்கள் உண்டு.

ஆப்பிரிக்க யானைக்குக் காது பெரிதாயிருக்கும். கண்ணும் சற்றுப் பெரிதுதான். உயரமும் ஓரடி அதிகமாகவே இருக்கும். நாங்கள் பத்தரை அடி உயரம் வளர்ந்தால், அவை பதினொன்றரை அடி உயரம் வளரும். துதிக்கை நுனியில் எங்களுக்கு ஒரு விரல்தானே இருக்கிறது? ஆனால், அதற்கு இரண்டு விரல்கள் உண்டு. எங்களில் ஆணுக்கு மட்டும்தான் தந்தம் இருக்கும். ஆனால் ஆப்பிரிக்காவில் ஆண், பெண் இரண்டுக்குமே தந்தம் உண்டு. தந்தம் இல்லாத பெண் யானையை அங்கே அபூர்வமாகத்தான் காணலாம். அவைகளின் தந்தங்கள் எங்களுடைய தந்தங்களை விட நீளமாகவும், கனமாகவும் இருக்கும்.

தந்தத்தைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால், இதற்கு ஆசைப்பட்டுத்தானே நீங்கள் எங்களை வேட்டையாடுகிறீர்கள்? இந்தத் தந்தத்தால் எத்தனையோ சாமான்களைச் செய்கிறீர்கள். எல்லாம் விலை உயர்ந்த சாமான்கள்! அழகான சாமான்கள்!

எங்கள் கூட்டம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. நாங்கள் போகும் வழியில் ஆழமாகக் குழி வெட்டி, இலை தழைகளை அதன்மேல் பரப்பி, எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த சிலரைத் தந்திரமாக மனிதர்கள் பிடித்துச் சென்று விடுகிறார்கள். அப்படிப் போனவர்களில் பலரை எப்படியோ மனிதர்கள் மயக்கித் தங்களுக்கு அடிமையாக்கி விட்டார்களாம். அவர்களில் சிலர் பாரம் தூக்குகிறார்களாம். சிலர் புலி வேட்டைக்குப் பயன்படுகிறார்களாம். வேறு சிலர் முகபடாம் தரித்துக் கொண்டு, முதுகில் அம்பாரியுடன் ஊர்வலத்தில் செல்கிறார்களாம்; சர்க்கஸில்கூட சிலர் வித்தை காட்டி வருகிறார்களாம்; இன்னும் சிலர் கோயில்களுக்கே சொந்தமாகி விட்டார்களாம்! முன் காலத்தில் யுத்தம் செய்வதற்குக் கூட எங்கள் இனத்தவர் உதவினராம்! குதிரைப் படை, யானைப் படை என்று கேள்விப்பட்டிருப்பீர்களே!

புலி, சிங்கத்துக்கெல்லாம் நாங்கள் பயப்படுவதே இல்லை. ஆனாலும், இந்த உலகிலே எங்களுக்குச் சில பகைவர்கள் உண்டு. அவர்களில் முக்கியமானவர்கள் மூவர்.

விஷப் பாம்பு எங்களுக்கு ஒரு விரோதி. அது புல்தரைகளுக்கு நடுவே ஓசைப்படாமல் வந்து, எங்களுடைய துதிக்கையின் நுனியில் கடித்துவிடும். அதில் பிழைத்துவிட்டால், மறுபிழைப்புத்தான்!

இன்னொரு விரோதி தீ எறும்பு. அது எங்கள் துதிக்கை மேல் ஏறி, நறுக் நறுக்கென்று நன்றாகக் கடித்து விடும். அந்தக் கடியை எங்களால் தாங்கவே முடியாது. சில சமயம் எங்களுக்குப் பைத்தியம் கூடப் பிடித்து விடும்!

மூன்றாவது விரோதி ஒன்று உண்டு. அது செயற்கை விரோதி. அது மனிதர்களுடைய துப்பாக்கியிலிருந்து வரும் குண்டுதான்!

இந்த மூன்றைத் தவிர எதற்குமே நாங்கள் அதிகமாகப் பயப்படுவதில்லை.

உங்களையெல்லாம் உங்கள் அம்மாக்கள் பத்து மாதம் சுமந்து பெற்றிருப்பார்கள்.. ஆனால் என் அம்மா என்னை அதைப் போல் இரு மடங்கு மாதங்கள் — அதாவது இருபது மாதங்கள் — சுமந்து பெற்றாள். நான் பிறக்கும் போது தனியாகத்தான் பிறந்




தேன். நான் பிறப்பதற்கு 4 ஆண்டுகளுக்கு முன்னால், என் அம்மாவுக்கு இரட்டைப்பிள்ளைகள் பிறந்தனவாம். எங்கள் இனத்தில் தடவைக்கு ஒரு பிள்ளைதான் சாதாரணமாகப் பிறக்கும். இரட்டைப் பிள்ளை பிறப்பது அபூர்வமே!

நான் பிறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னால் என் அம்மா என்ன செய்தாளாம், தெரியுமா? தன் கூட்டத்தாரை விட்டுக் காட்டுக்குள்ளே வெகு தூரம் சென்றாளாம். அடர்த்தியான ஓர் இடத்திலே போய், அங்கே தான் மட்டும் தனியாகவே, தங்கியிருந்தாளாம். என்னை எதிர்பார்த்துத்தான் அவள் அப்படிச் செய்திருக்கிறாள். சில நாட்களில் நான் பிறந்துவிட்டேன்.

பிறந்து இரண்டு நாட்கள் வரை, என்னால் எழுந்து நிற்க முடியவில்லை. படுத்தபடியே இருந்தேன். என்மேல் ஈ மொய்க்காதபடி அம்மா துதிக்கையால் விசிக் கொண்டேயிருந்தாள். என் உடம்பிலே மிருதுவான கொழுந்து மணலைப் போட்டுப் பக்குவமாகத் தேய்த்துவிட்டாள். முதல் பத்து நாட்கள் பாலைக் குடிப்பதும் தூங்குவதுமாகவே பொழுது போக்கினேன். பால் குடிப்பது என்றதும் துதிக்கையால் குடித்திருப்பேன் என்று தானே நினைக்கிறீர்கள்? இல்லை. வாயால்தான் குடித்தேன்! அம்மா மடியிலிருந்த இரண்டு காம்புகளையும் சப்பிச் சப்பிக் குடித்தேன்.


பசுவின் மடியைப் போல் என் அம்மாவுக்கு இருக்காது. குரங்குக்கு இருப்பது போல முன் கால்களுக்குச் சிறிது பின்னால் வலப்புறம் ஒரு காம்பும், இடப்புறம் மற்றொரு காம்பும் இருக்கும்.




தேவை இல்லை!
"அவங்க ஸ்கூல் பஸ்சுக்கு, ஹாரனே தேவை இல்லையாம்!"
—சுதர்சன்.

பத்து நாட்களான பிறகு, அம்மாவோடு நானும் நடக்க ஆரம்பித்தேன். ஆனாலும், அப்போது என்னால் வெகு தூரம் போக முடியவில்லை. மெதுவாக நடந்து நடந்து நானும் அம்மாவும் அவளுடைய பழைய தோழர்களுடன் வந்து சேர்ந்து கொண்டோம். நான் அந்தக் கூட்டத்தில் நுழைந்ததும், எல்லோரும் என்னைப் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்கள். அந்தக் கூட்டத்தில் என்னைப் போல் இன்னும் சில குட்டிகள் இருந்தன. ஏதாவது ஆபத்து என்று தோன்றினால், பெரியவர்களெல்லாம் குட்டிகளாகிய எங்களை நடுவே விட்டுச் சுற்றிலும் வட்டமாக நின்று கொள்வார்கள்.

நான் ஏதாவது தவறு செய்தால், என் அம்மா துதிக்கையால் என்னை அடிப்பாள். மகிழ்ச்சி ஏற்பட்டால் துதிக்கையால் என்னைத் தடவிக் கொடுப்பாள். அடிக்கிற (துதிக்)கை தானே அணைக்கும்!





கேலிச் சித்திரங்கள்

—ரானு

கார்ட்டூனிஸ்ட் ரானு சொல்கிறார்:

''ஓவியங்களில் பலவகை உண்டு. அதில் வயிறு வலிக்க நம்மைச் சிரிக்க வைக்கக் கூடியது, கேலிச் சித்திரம் ஒன்றுதான். இதை வரையக் கற்றுக் கொள்வது மிகக் கடினம் என்று பல குழந்தைகள் நினைக்கின்றார்கள். ஆனால், ஆர்வத்துடன் வரையக்கற்றுக் கொண்டால், இதைவிட எளிதானது வேறொன்றுமில்லை.''


''எப்படி வரையக் கற்றுக் கொள்ள வேண்டும் தெரியுமா?''

''பென்சிலால் ஒரு சைபர் போடுங்கள். அதுதான் மனிதனின் தலை. அதனுள் இரண்டு வெறும்புள்ளிகளை வையுங்கள். அதுதான் இரண்டு கண்கள். அதன்மேல் சிறிய வளைவு கோடுகளைப்போட்டால்புருவம்வந்துவிடும். அதன் கீழே ஒரு சின்ன அரை வட்டம் இருந்தால் அதுதான் மூக்கு. மூக்கிற்கு கீழே. இன்னொரு வளைவு கோடு போடுங்கள். அதுதான் வாய். சைபருக்கு இரண்டுபுறத்திலும், இரு அரை வட்டம் போட்டால் அதுதான் காது. மீண்டும் சைபருக்கு மேல் இரண்டு வளைவு கோடுகளைப் போட்டால் தலை முடி வந்துவிடும்.

''இந்தமுறையில்படம்போட்டால், ஒரு வேடிக்கையான மனிதனின் முகத்தை நீங்கள் பார்க்கலாம். இதையே மீண்டும் மீண்டும் வரையுங்கள். பிறர் உங்களை மெச்சுவார்கள். இதுதான் கேலிச் சித்திரம் வரைய நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய முதல் பாடம்.

இதன்பின் பத்திரிகையில் வெளியாகிற கேலிச்சித்திரங்களைக் கூர்ந்து கவனியுங்கள். அந்த மாடலில் உங்கள் கற்பனையில், நீங்களே 'ஜோக்கை' தயார் செய்யுங்கள். தினமும் சில மணி நேரம் இந்தப் பயிற்சியை மேற்கொண்டால் நீங்களும் ஒரு கார்ட்டூனிஸ்ட்தான்!

ஓவியம் சிறப்பாக அமையவில்லை



என்றால், சிலந்தி கூடு கட்டுவது போல மீண்டும் மீண்டும் வரைய வேண்டும். "ஆனால், எனக்கு ஓவியம் வராது; வரையத் தெரியாது" என்றுமட்டும் நினைக்கக் கூடாது.

'இதென்ன பெரிய விஷயமா... சில நொடிகளில் படங்களைப் போடுவேன்' என்று நினைத்து, வரைந்தால்தான் கேலி சித்திரம் உங்களிடம் நட்புக் கொள்ளும்.

"எனக்கு சைபர் சரியான வடிவில் வரையத் தெரியவில்லை" என்று சில குழந்தைகள் கூறுகின்றனர். அப்படி ஓர் நினைப்பு வால்ட் டிஸ்னிக்கு இருந்திருந்தால், உலகப் புகழ் பெற்ற ஓவியராக அவர் ஆகியிருக்க முடியுமா? இல்லை 'கலிபோர்னியா'விலும், 'லாஸ் ஏஞ்சலி'லும் டிஸ்னி லேண்ட் தான் உருவாகி இருக்குமா?


"கேலிச் சித்திரங்களைக் கற்றுக் கொள்ள நினைக்கிற ஒவ்வொரு குழந்தையும், தூரிகையைத் தொடுவதற்கு முன் "நாமும் வால்ட் டிஸ்னி போல ஆக வேண்டு"மென்று சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும்."


கேலிச் சித்திரம் உங்களுக்கு வருமானத்தையும் தேடித் தரும். எப்படித் தெரியுமா?

புது வருடப் பிறப்பு, பொங்கல், தீபாவளி, நவராத்திரி, போன்ற பண்டிகை வரும்போது கிரீட்டிங்ஸ் கார்டுகளைத் தயார் செய்யுங்கள். அதில் விசித்திரமான கேலிச் சித்திரங்களை வரைந்து, அதற்கு ஏற்ற ஜோக்கையும் இணைத்துப் பல வடிவங்களில் வாழ்த்துக்களை எழுதுங்கள். பிறரைப் பிரமிக்க வைக்கும்படி இந்தக் கேலிச் சித்திர அட்டைகளை நீங்கள் உருவாக்கினால், பள்ளி நண்பர்களும், உறவினர்களும் நிச்சயம் விலை கொடுத்து வாங்குவார்கள். அதனால் சமூகத்தில் உங்கள் கௌரவம் உயரும். உங்களிடம் ஒளிந்திருக்கிற திறமையைப் பிறர் அறிய இன்றே கேலிச் சித்திரங்களை வரையக் கற்றுக் கொள்ளுங்களேன்."

பேட்டி: மு. சிவாஜி.

ஓவியராகலாம்







விளையும் பயிர்

"ஏண்டா! உன் மூளை ஒரே களி மண்ணிலே பண்ணியிருக்கா? எதுவுமே உன் மூளையிலே ஏற மாட்டேன்கிறதே!" என்று பையனை ஆசிரியர் கோபிப்பது வழக்கம்! விளையும் பயிரிலே பல அபார 'மூளை'யுள்ள சிறுவர்களும் உண்டு.

செஸ் விளையாட்டுக்காரர்களுக்கு அபார மூளை தேவை; ராஜ தந்திரமும் வேண்டும். சதுரங்கக் காய்களைக் 'கணக்கு' பண்ணி அதைச் சரியாக நகர்த்துவதற்கு அபார சாமர்த்தியம் இருக்க வேண்டும். இளம் வயதில் இந்த செஸ் விளையாட்டில் முதல் தடவையாக மாபெரும் வெற்றியைச் சம்பாதித்திருக்கிறான் வி. வெங்கடேஷ்!

தமிழ்நாட்டில் பதினாறு வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு செஸ் போட்டி அண்ணா சர்வகலாசாலையில் நடைபெற்றது. பதக்கம் பெறாத இளைஞர்களுக்கான போட்டியில் 237 சிறுவர்கள் கலந்து கொண்டனர். இதில் படே படே செஸ் சாம்பியனான மானுவல் ஆரனின் புதல்வர் அசோக் ஆரனும் கலந்து கொண்டார்.

வெங்கடேஷுக்கு யோகம். அவன் தாத்தா ஹரிஹரன் செஸ்ஸில் தேசிய, ராஜ்ய விருதுகளைப் பெற்றவர். அவனது தந்தை விசுவநாத் 'எல்காட்' ஸ்தாபனத்தில் நிதித்துறை டைரக்டர். இவருக்கும் செஸ் ஆட்டத்தில் நிபுணத்துவம் உண்டு. வெங்கடேஷுக்கு ரத்தத்தோடு செஸ்ஸும் கலந்து வந்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. செஸ் நிபுணன் வெங்கடேஷின் அன்னை சுப்புலக்ஷ்மி ராமகிருஷ்ணா இங்கிலீஷ் மீடியம் பள்ளியில் பிரின்சிபால்! பெற்றோர் சிறுவனது செஸ் ஆர்வத்துக்கு ஊக்கம் ஊட்டித் தட்டிக் கொடுத்தது அவனுக்கு வெற்றியைத் தேடித் தந்தது.

செமிபைனல் ஆட்டத்தில் முந்தின வருஷ சாம்பியன் எஸ். என். ரவியை வெங்கடேஷ் வென்றது 'கிரீடம்' சூட்டிக் கொண்டதுபோல. இறுதி ஆட்டத்தில் ராஜனை எளிதாக ஜயித்துப் பதக்கம் பெற்றான் வெங்கடேஷ். புது தில்லி டால் செஸ் கிளப் நடத்திய இப்போட்டியில் வென்ற வெங்கடேஷ் புது தில்லி சென்று மற்ற ராஜ்யங்களின் வெற்றி வீரர்களோடு ஆடுவதற்கு இருக்கிறான்.

சென்ற வாரம் 18 வயதுக்குட்பட்ட செஸ் ஆட்டக்காரர்கள் பந்தயத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றது தனிச் சிறப்பு.

சென்ற வருஷம் வெங்கடேஷ் சோவியத் சாம்பியன் உஸ்தெத் நோவிடம் (Ustet Knov) இருபத்தைந்து நாட்கள் சென்று நுணுக்கங்களைக் கற்றறிந்திருக்கிறான். பதினோராவது வகுப்பில் பயிலும் வெங்கடேஷ் படிப்பிலும் கெட்டிக்காரன். பத்தாம் வகுப்பில் 82.6 சதவீதம் மார்க்குகள் எடுத்தானென்றால் அவனது புத்திசாலித்தனத்தை எடை போட்டுவிடலாம்!

பல சர்வதேசப் பந்தயங்களில் ஆடும் வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான் சிறுவன் வெங்கடேஷ். இந்த இளம் விளையும் பயிருக்கு ஊக்கமும் உற்சாகமும் வாய்ப்பும் கிடைத்தால் தமிழ்நாட்டுக்கும் இந்திய நாட்டுக்கும் பல பெருமைகளைப் பெற்றுத் தருவான். முதல் முயற்சியிலேயே வெற்றிப் பதக்கத்தைக் குவித்த வெங்கடேஷுக்கு வாழ்த்துக்கள்.

– பி. எஸ். மணி

ஒரு பூனை புலியாகிறது



டாக்டர் பூவண்ணன்

11. வெல்வது யார்?

துணைக் கமிஷனர் தொலைபேசியைக் கீழே வைத்துவிட்டுச் சோகத்தோடு கமிஷனரைப் பார்த்தார்.

"பதினொரு மணிக்கு நிகழ்ச்சி தொடங்கும் என்றால், சாதாரணமாக மந்திரிகள் அரை மணி, முக்கால் மணி நேரம் தாமதமாகப் புறப்படுவார்கள். இவர் காலம் தவறாத அமைச்சராக இருக்கிறாரே!" என்று கூறிய கமிஷனர் ஒரு நிமிடம் சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு, "மிஸ்டர் துணைக் கமிஷனர்! வயர்லெஸ் மூலம், காவல் துறையினருடன் தொடர்பு கொள்ளுங்கள். மத்திய மந்திரியின் காருக்கு முன்னே நம் துறையினர் பாதுகாவலுக்குச் சென்று கொண்டிருப்பார்கள். அவர்களிடம், கொலை நடக்கலாம் என்று செய்தி வந்திருப்பதை அறிவியுங்கள். அவர்கள் அதை அமைச்சரிடம் தெரிவித்து, அவரைக் குழந்தை எழுத்தாளர் சங்க நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாமல் திரும்பிப் போகுமாறு வற்புறுத்தச் சொல்லுங்கள். அமைச்சர் போகும் வழியில் அவர் காரை வழி மறித்தும் சொல்லலாம் என்றும் தெரிவியுங்கள். வயர்லெஸ் மூலம் தொடர்பு கொள்ள முடித்த அனைவரிடமும் தெரிவியுங்கள். க்விக்! நாம் விதியோடு போட்டி போட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். கால தாமதம் சாலவும் தீது" என்று கூறினார். அவர் எழுத்தாளர் என்பதும் பேச்சில் வெளிப்பட்டது.

துணைக் கமிஷனர் அறைக்கு வெளியே ஓடினார். அறையிலிருந்த மூவரும் மயான அமைதியில் ஆழ்ந்தனர். மயான அமைதியில்..... என்பது அமங்கலச் சொற்றொடரோ?

துணைக் கமிஷனரின் வயர்லெஸ் செய்தி காவல் துறையினரை அடைந்த போது, மத்திய மந்திரியின் கார் மேம்பாலத்தைக் கடந்து, வேகமாகச் சென்று கொண்டிருந்தது. மோட்டார் சைக்கிளில், காருக்கு முன்னே சென்ற காவல் அதிகாரி ஒருவர் செய்தியைக் கேட்டு அடைந்த அதிர்ச்சியில், அவரது வண்டி திசை தவறிச் சாலையின் குறுக்கே பாய்ந்தது. ஒரு கணத்தில் அதை உணர்ந்து வண்டியைச் சாலையின் மறு ஓரத்துக்குச் செலுத்தினார். அமைச்சரின் கார், வேகத்தைக் குறைக்காமல் விர்ரென்று சென்றது.

அதிகாரி தனது முட்டாள்தனத்தை நொந்து கொண்டார். சாலையின் குறுக்கே சென்ற மோட்டார் சைக்கிளை அப்படியே அங்கேயே நிறுத்தியிருந்தால், இந்நேரம் அமைச்சரின் கார் நின்றிருக்கும். சொல்ல வேண்டியதைச் சொல்லி, அமைச்சரைத்

நூலகத்தில் தூங்கினால் அபராதம்!

நம்மூர் நூலகங்களுக்குச் சிலர் தூங்கு
வதற்கென்றேசெல்கிறார்களே!கீழ்வரும்
செய்தியைப் படியுங்கள்:
இங்கிலாந்து நாட்டிலுள்ள பெர்க்
ஷயர் மாநிலப் பொது நூலகங்களில்,
புத்தகங்களைப் படிக்காமல் தூங்கினால்,
முதன் முறை எச்சரிக்கை செய்யப்படு
கிறார்கள். அதையும், மதிக்காமல் தூங்
கினால் 20 பவுன் அபராதம் விதிக்கிறார்
கள். நம் நாட்டு மதிப்புப்படி 20 பவுன்
என்பது 400 ரூபாய் ஆகும். பெர்க்
ஷயர் மாகாண கவுன்சில் நூலகங்களில்
தூங்குவோருக்குத் தகுந்த தண்டனை
வழங்கும் சட்டத்தை அமுலாக்கியுள்
ளது.

—ஆதாரம் 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்'
தகவல்: குடந்தை முரளி.



திருப்பி அனுப்பியிருக்கலாமே! அதிகாரி சாலையைப் பார்த்தார். அமைச்சரின் கார் ஆனந்த் தியேட்டரை நெருங்கிக் கொண்டிருந்தது. உடனே தனது மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட்செய்து, வேகமாகச் செலுத்தினார். அது மின்னலைப் போலப் பாய்ந்து அமைச்சரின் காரை விரட்டியது.

குழந்தை எழுத்தாளர் சங்கக் கூட்டம் மத்திய நூலகக் கட்டடத்தில் நடைபெறுகிறது. அதன் வெளி வாயிலில் அமைச்சரின் கார்மெதுவாகத்திரும்பி நுழையும்போதே, போலீஸ் அதிகாரியின் மோட்டார் சைக்கிள் அவர் காரைக் கடந்து முன்னே போய், அமைச்சரை வரவேற்கக் காத்து நின்ற சங்கப் பிரமுகர்களின் எதிரே நின்றது. "இனி அமைச்சரைக் கட்டடத்துக்குள் செல்லாமல் தடுத்துவிடலாம்" என்ற நம்பிக்கையுடன், அதிகாரி மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கினார்.

* * * * *

துணைக் கமிஷனர் குமார் பதினைந்து நிமிடத்தில் சோர்ந்த நடையும் தொங்கிய முகமுமாகத் திரும்பி வந்தார்.

"சாரி சார்! நமது முயற்சி முழுப் பலனைத் தரவில்லை" என்றார்.

"விளக்கமாய்ச் சொல்லுங்கள்" கமிஷனர் கேட்டார்.

"சார்! என்னுடைய வயர்லஸ்செய்தியைப் பெற்ற அதிகாரி ஒருவர், அமைச்சரை நிகழ்ச்சி நடக்கும் இடத்தில் நுழையும்முன் சந்தித்துத் தடுத்தார். ஆனால் அதிகாரி கூறிய காரணத்தைக் கேட்டு அந்த அமைச்சர் சிரித்தாராம். 'என்னைக் கொலை செய்வதாகச் செய்தி வந்திருக்கிறதா? இது போல் எத்தனை செய்திகள் கேட்டிருக்கிறேன்! என் வீட்டுக்குள்ளேயே வெடிகுண்டு இருப்பதாய் மூன்று மாதங்களுக்கு முன் செய்தி வந்தது. வீட்டை விட்டு ஓட்டலுக்குப் போகச் சொன்னார்கள். நான் மறுத்துவிட்டேன். அரசியலில் புகுந்துவிட்டால் இத்தகைய உருட்டல் மிரட்டலுக்கு அஞ்சக் கூடாது. நான் அஞ்ச மாட்டேன். நீர் போலீஸ்காரர். கொலை செய்பவனைப் பிடிக்கப் பாரும்! என்னைத் தடுக்கப் பார்க்காதீர்!' என்று கூறி, அதிகாரியைத்தம்கையாலேயே ஒதுக்கித்தள்ளி விட்டு, கட்டடத்துக்குள் போய் விட்டாராம். செய்தி வந்தது."

துணைக் கமிஷனர் சொன்னதும், "இந்த அமைச்சருக்கு திருக்குறளின் இந்திமொழிபெயர்ப்புவாங்கி, அதில், அஞ்சுவது அஞ்சாமை பேதைமை என்னும் குறளைச் சிவப்பு மையால் கோடிட்டு அனுப்ப வேண்டும்" என்றார், கமிஷனர்.

"அனுப்பலாம் சார், இன்று அவர் கொலையாகாமல் தப்பினால்" என்றார் துணைக் கமிஷனர்.

கமிஷனர், தமிழ் இலக்கியம் கற்றவர். 'ஊழிற் பெருவலி யாவுள' என்னும் வள்ளுவர் வாக்கு அவர் மனத்தில்பளிச்சிட்டது. அவருடைய முயற்சிகளை அமைச்சரின் விதி வென்று வருகிறதா? திடீரென்று, 'விதியே, இன்று உன்னை விடப்போவதில்லை! வெல்லுவது யார்? நானா, நீயா? பார்த்து விடலாம்!' என்றுஉரக்கக்கூறிக்கொண்டே எழுந்தார்.

"நாம் அமைச்சரின் நிகழ்ச்சி நடைபெறும் இடத்துக்கு இப்போதே செல்வோம். இங்கு இருக்கும் போலீஸ்காரர்களையும் உடன் அழைத்துக் கொள்! விதியோடு இறுதிப் போரை நடத்திவிடுவோம்" என்றார் கமிஷனர். அதை நிறைவேற்ற ஓடினார், துணைக் கமிஷனர்.

சேரனும், ஹனிமேனும் கமிஷனருடன் வர விரும்பினர். கமிஷனர் அனு

மதித்தார்.

அடுத்த ஆறும் நிமிடம் போலீஸ் வேன் மத்திய நூலகக் கட்டடத்தை நோக்கிப் பறந்தது. வேனுக்குள்ளேயே கமிஷனர், நிகழ்ச்சி நடக்கும் இடத்தில் என்னென்ன செய்ய வேண்டும் என்று கூறிக் கொண்டே வந்தார். அதை சேரனும் ஆவலோடும் அச்சத்தோடும் கேட்டான். அவன் மடியில் இருந்த டாலரும் கேட்டது.

* * * * *

மத்திய நூலகக் கட்டடத்தின் மாடியில் இருந்தது, அந்த அரங்கம். அதன் கிழக்கு மூலையில் மேடை. மேற்கு மூலையில் உள்ளே நுழையும் வழி. வழியிலே சிறிய மேசை. அதன் மீது, சந்தனக்கிண்ணம், பன்னீர்ச்சொம்பு, ரோஜாப் பூக்கள் நிறைந்த தட்டு. அதற்கடுத்த மேசையில் வண்ண வண்ணமாகக் கண்ணைக் கவரும் பல சிறுவர் நூல்கள்; அவை, அன்று மத்திய அமைச்சர் வெளியிடப் போகும் புத்தம் புதிய நூல்கள்.

ஹனிமேனுடன் உள்ளே சென்று கொண்டிருந்த சேரனுக்கு, இரண்டாம் மேசையின் முன் நின்று அன்று வெளியாகும் புதிய நூல்களை நிதானமாகப் பார்க்க வேண்டும் என்று ஆசை. ஆனால் அதற்கு இப்போது நேரம் ஏது? ஹனிமேனைத் தொடர்ந்து அவசரமாகச் சென்றான். இருவருக்கும் பின்னால் கமிஷனர் வந்தார்.


மத்திய அமைச்சர் கலந்து கொள்ளும் கூட்டத்தில் கமிஷனரின் வருகை வியப்பை விளைவிக்கவில்லை. அவரது வேண்டுகோளின்படி, முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த சங்கத்துப் பிரமுகர்கள் இரண்டு பேர் எழுந்து இடம் கொடுக்க, அங்கே ஹனிமேன் உட்கார்ந்தான். அருகே சேரன் உட்கார்ந்தான். அவன் மடியில் டாலர் உட்கார்ந்தது.

கமிஷனர் உட்காராமல் ஓரமாக ஒதுங்கி நின்றார். பின்னே காவல் துறையின் சி. ஐ. டி.க்கள் நால்வர் சாதாரண உடையில் மெதுவாக நடந்து வந்தார்கள். கமிஷனர் தலை அசைத்தார். ஒருவர் மேடைக்குப் பின்புறம் சென்றார். இன்னொருவர் மேடையிலிருந்த சங்கச் செயலாளரை அழைத்து முதல் இரண்டு வரிசைகளில் வீற்றிருப்பவரைப் பற்றி விசாரித்தார். மற்றொருவர் வடக்குப் பகுதியின் ஓரத்தில் நின்றிருந்த புகைப்படக்காரர்களை அணுகினார். நான்காமவர், கூட்டத்தின் நடுவே புகுந்தார்.

துணைக் கமிஷனர் மெல்ல நடந்து உள்ளே வந்தார். ஆனால் கடைசி வரிசையின் பின்னே நின்றார். அப்புறம் வந்த போலீஸ்காரர்கள், லிப்ட் வழியில், மாடிப்படியில், அரங்க வழியில், அரங்கத்தின் உள்ளே என்று ஆங்காங்கே பிரிந்து நின்றனர்.

அரங்கத்தில் பெருங்கூட்டம் என்று சொல்ல முடியாது. கடைசி வரிசை வரை ஆட்கள் இருந்தார்கள் என்றாலும் சில வரிசைகளில் சில நாற்காலிகள் காலியாய் இருந்தன. காலை நேரத்தில் நடக்கும் ஓர் இலக்கிய நிகழ்ச்சிக்கு, இது பெருங்கூட்டமாகக் கருதத் தக்கது.

இறை வணக்கம் முடிந்து, வரவேற்புரை முடிந்து, தலைமை உரை நடந்து கொண்டிருந்தது. சங்கத்தின் தலைவர் சிரித்த முகத்தோடு தம் தலைமை உரையில் குழந்தை எழுத்தாளர் சங்கத்தைப்



பற்றிய சில விவரங்களைக் கூறினார். 'தமிழ்நாட்டில் முப்பத்தைந்து ஆண்டுகளாக இடையறாமல் செயல்பட்டு வரும் ஒரே எழுத்தாளர் சங்கம் இது தான்' என்றபோது, சபையினர் கை தட்டி ஆரவாரம் செய்தார்கள். 'நேருவின் பிறந்த நாளில் குழந்தை நூல்களை வெளியிட்டு அதை இலக்கிய விழாவாக்கியது எங்கள் சங்கமே! இது வரை ஏறத்தாழ அறுநூறு நூல்கள் இத்தகைய விழாவில் வெளியாகியுள்ளன' என்றபோதும் கைதட்டல் தான்!

மேடையில் இப்படிப் பேச்சு நடக்கும்போதே, சி. ஐ. டி. க்கள் மேடையிலும், மேடையின் அருகிலும் இருந்தவர்களை மெதுவாக நெருங்கினார்கள். தமது அடையாள அட்டையைக் காட்டி ஒவ்வொருவராகத் தம்முடன் வருமாறு செய்து, அரங்கத்தின் வெளியே அழைத்துச் சென்றனர். அங்கே விசாரணையும் அவர் ஆயுதம் வைத்திருக்கிறாரா என்ற சோதனையும் ஓசைப்படாமல் நடந்தன. பிறகு சோதிக்கப்பட்டவரை உள்ளே அனுப்பினார்கள்.

தலைவர் முன்னுரை முடிந்து, ஒரு தமிழறிஞர் குழந்தை இலக்கியம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

கமிஷனரின் பார்வை அரங்கை அணு அணுவாக அலசிக் கொண்டிருந்தது. அரங்கின் ஒருபுறம் நின்றிருந்த புகைப்படக்காரர்களைப் பார்த்தார். ஆறு பேர் இருந்தனர். இருவர், தமிழக அரசின் செய்தித் துறையைச் சேர்ந்தவர்கள். அவர்களை அவர் அறிவார். இருவர் உள்ளூர் பத்திரிகைகளைச் சார்ந்தவர்கள். அவர்கள் முகங்கள் பழக்கமானவையாகவே தெரிந்தன. மீதியுள்ள இருவர் யார்? ஒருவன் இளைஞன். வயது இருபதுகூட இருக்காது. ஒடிந்து விழுவதுபோல மெலிந்த மேனி. நல்ல உயரம். அவர் தேடும் சேகர் சுமாரான உடல்வாகு உடையவன். ஐந்தரை அடி உயரம் உடையவன். ஆறாவது ஆள், வயதானவன். ஐம்பது வயதுக்கு மேலே இருக்க வேண்டும். வெள்ளைத்தாடி! வெள்ளை பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி! ஆனால் கையிலே லேட்டஸ்ட் மாடல், ஹாட் ஷாட் போன்ற கேமிரா! மேல் நாட்டு காமிரா போலத் தெரிந்தது; 'இருவரையும் விசாரிக்க வேண்டும்' என்று கமிஷனர் நினைத்தார். இதற்குள் புகைப்படக்காரர்களும் ஒருவர் பின் ஒருவராக அழைத்துச் செல்லப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டனர். மெலிந்த இளைஞனும், நரைத்த கிழவனும் உள்ளே வந்து பழைய இடத்தில் நின்று கொண்டனர்.

கமிஷனர் அவர்களைச் சோதித்த சி. ஐ. டி. யைப் பார்வையாலேயே அழைத்தார். சி. ஐ. டி. கமிஷனரிடம் வந்தார். மெலிந்த இளைஞன், திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு ஸ்டுடியோவைச் சார்ந்தவன் என்றும், நரைத்த கிழவன், இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையின் புகைப்படக்காரன் என்றும் தெரிவித்தார். இருவரிடமும் இதற்கான அத்தாட்சிகள் இருந்தன; ஆயுதங்கள் இல்லை என்றும் சொன்னார்.

கமிஷனரின் மனம் திருப்தி அடையவில்லை.


சி. ஐ. டி.க்கள் மேடையையும், மேடையின் அருகேயும் உள்ளவர்களைச் சோதித்துவிட்டார்கள். கொலைகாரன் என்று ஐயுறத் தக்கவர் யாரும் இல்லை. இப்போது பார்வையாளர்கள் சோதனைக்கு ஆட்பட்டுக் கொண்டிருந்தனர்.

தமிழறிஞர் பேசி முடித்துவிட்டார்.

மத்திய மந்திரி எழுந்து நின்றார்.

அன்று வெளியாகும் நூல்களை எழுதிய ஆசிரியர்களையும் பதிப்பாளர்களையும் அறிமுகப்படுத்த, ஒவ்வொருவராக மேடைக்கு வந்து தம் நூலை மந்திரியிடம் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

சேரன் நிகழ்ச்சியை ஆவலோடு பார்த்தவன், திரும்பி அரங்கைப் பார்த்தான். கமிஷனர், துணைக் கமிஷனர் அனைவரும் அவன் கண்ணில் பட்டனர். தன் மடியிலிருந்த டாலரைப் பார்த்தான். அதன் பார்வை வேறு எங்கோ படிந்திருப்பதை அறிந்தான். அவனும் அதன் பார்வை சென்ற திசையில் பார்த்தான். அதே வரிசையில் நான்கு இடம் தள்ளி ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவர் மடியில் சுமார் ஐந்து வயதுள்ள சிறுவன் உட்கார்ந்திருந்தான். டாலர் பெரியவரைப்



பார்க்கவில்லை. அவர் மடியில் உட கார்ந்திருந்த . சிறுவனைப் பார்க்க வில்லை. அந்தச் சிறுவன் கையையே பார்த்துக் கொண்டிருந்தது. அந்தக் கையில் காட்பரீஸ் ஜெம்ஸ் பாக்கெட் ஒன்றிருந்தது. சிறுவன் அந்தப் பாக் கெட்டை ஒரு கையில் பற்றிக் கொண்டு மறு கையால் அதைக் கிழித் துத் திறக்க முயன்று கொண்டிருந் தான். டாலர் அதைத்தான் பார்த்துக் கொண்டிருந்தது.

சேரன் அதைப் பார்த்தான். டால ருக்கு ஜெம்ஸ் என்றால் உயிர் என் பது தெரியும்: உடனே அதன் காதருகே குனிந்து, "டாலர்! உனக்கு ஜெம்ஸ் வாங்கித் தரேன்னு சொன்னேன் இல்லே? சாரி டாலர்! கூட்டம் முடிஞ் சதும், ஒரு பாக்கெட் ஜெம்ஸ் வாங்கி முழுசா தரேன்" என்று கிசுகிசுத்தான். என்றாலும் டாலரின் பார்வை ஜெம் ஸை விட்டு அகலவில்லை.

கமிஷனர் அரங்கம் முழுவதையும் பார்வையில் அலசினார். இந்த அலசல் எத்தனையாவது முறை? தெரியாது! இதுவரை ஐம்பது முறை, அறுபது முறை அரங்கை அவர் பார்வையில் அலசியிருப்பார். யார் மீதும் சந்தேகம் வரவில்லை!

யார் மீதும் வரவில்லையா?

"இந்தக் கிழப் புகைப்படக்கார னின் முகம் என்னவோ போலிருக் கிறதே! ஆனால் இவனிடம் ஆயுதம் ஏதும் இல்லை. கொலைசெய்யப்போகும் சேகர் இன்னும் இந்த அரங்கத்துக்கே வரவில்லையோ?

கமிஷனரின் பார்வை சுழல் விளக் காய்ச் சுற்றி நரைத்த கிழவன் மீது வந்து நின்றது.

கமிஷனர் அவனையே உற்றுப்பார்க் கும்போது, அவனும் கமிஷனரைப் பார்த்தான்.

"கமிஷனர் சார்! கொலைகாரனுக்கு நாலு முழ தூரத்திலேயே நிற்கிறீர் கள். உங்களால் அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லையே! எனக்கு நானே ஒரு சபாஷ் போட்டுக் கொள் கிறேன்" என்று மனத்தில் சொல்லிக் கொண்டான்.

அவன்.... அவன் யார்?

அவன்தான் கமிஷனர் தேடும் சேகர்! அன்று மத்திய மந்திரியைக் கொலை செய்யப் போகும் கொடிய





வன்! அவன் மாறுவேடத்தில் வந்திருந்தான்.

அவன் தனது சிறிய காமிராவைக் கண்ணில் பொருத்தி மேடையைப் பார்த்தான்.

எழுத்தாளர் — பதிப்பாளர் அறிமுகம் முடிந்தது. ஏவி. எம். அறக்கட்டளையின் பரிசளிப்பு முடிந்தது. இப்போது அமைச்சர் பேச வேண்டும்.

மேடையில் வலப்பக்கத்தில் பேச்சாளருக்காகப் போடப்பட்டிருந்த பீடத்தை நோக்கி அமைச்சர் வந்தார். பீடத்தின் பின்னே நின்ருர். அமைச்சர் நல்ல உயரம். அதனால் மார்புக்கு மேற்பட்ட பாகம் பீடத்திற்கு மேலே தெரிந்தது.

சேகர் காமிராவின் கோணத்தைச் சரி பார்த்தான். அமைச்சரின் மார்பு தெரிந்தது. இதயம் இருக்கும் இடத்தை அடையாளம் காட்டுவதுபோல, சட்டையில் ஒரு பாட்ஜ் இருந்தது. சேகர் அதைக் காமிராவால் குறி பார்த்தான்.

காமிராவால் குறி பார்த்தானு? அப்படியென்ருல்.....?

ஆமாம்! காமிரா உண்மையில் ஒரு நவீன துப்பாக்கி. படம் எடுப்பது போலப் பொத்தானை அழுக்கினுல், ஒரு சிறு தோட்டா சத்தம் செய்யாமல் குறி தவருமல், பறந்து சென்று அமைச்சரைக் கொல்லும்.

சேகர் பொத்தானின் மீது கைவைப் பதைக் கமிஷனர் பார்த்துக் கொண்டு தான் இருந்தார்.

சேகரின் விரல் பொத்தானை அமுக்கியது!

மறுகணம், 'இந்தச் சங்கம் நீண்ட காலம் வாழ வேண்டும்' என்று வாழ்த்திக் கொண்டிருந்த மத்திய மந்திரியின் மார்பை நோக்கி ஒரு தோட்டா, இராம பாணமாகச் சீறிச் சென்றது.

(அடுத்த இதழில் முடியும்).

பிருந்தாவனம்

எழுதியவர் யார்?


கீழ்க்கண்ட புத்தகங்களை எழுதிய வர்கள் யார், யார்?

1. நளவெண்பா
2. கீதாஞ்சலி
3. பாலராமாயணம்
4. கலிவரின் யாத்திரைகள்
5. அதிசய உலகில் ஆலிஸ்
6. சத்திய சோதனை
7. முருகன் அல்லது அழகு

விடை: 1. புகழேந்தி; 2. தாகூர்; 3. ர. அய்யாசாமி; 4. ஜொனதன் ஸ்விஃப்ட்; 5. லூயி கரால்; 6. மகாத்மா காந்தி; 7. திரு. வி. க.

— ஏ. எல். ராமு (3674), மதுரை.





சொல் விளையாட்டு

"கீழே சில சொற்கள் தரப்பட்டுள்ளன. அதே பொருளைக் குறிக்கும் இன்னொரு சொல் தேவை. நிபந்தனைகள்: புதிய சொல்லில் இரண்டே எழுத்துக்கள் இருக்க வேண்டும். முதல் எழுத்து நெடில் இரண்டாவது எழுத்து 'லி' என்று முடிய வேண்டும். உங்களால் முடியுமா? முயன்று பாருங்களேன்!

1. விளையாட்டுப் பொருள்.
2. பசுக் கூட்டம்.
3. ஒன்றுபோல்தோன்றுவது
4. சம்பளம்.
5. கிண்டல்.
6. மங்கலநாண்.


விடை: 1.கோலி; 2.காலி; 3.போலி; 4. கூலி; 5. கேலி; 6. தாலி.

— கே. பத்மப்ரியா (1213), சென்னை — 40.

ஊதுவத்தி — ஒரு யோசனை

நாம் சாமி படங்களுக்கு ஊதுவத்தி கொளுத்தி வைக்கிறோம். அதைக் கொளுத்துவதற்கு முன்பு வாசனைப் பன்னீரில் நனைத்துக் கொளுத்தினால், அரைமணி நேரம் எரிந்து முடியும் ஊதுவத்தி முக்கால் மணி நேரத்துக்கு மேல் எரியும். அத்துடன் ஊதுவத்தி இரட்டிப்பு வாசனையுடன் கமகமக்கும்.

— தா. சிந்துகுமார் (4764), திருவட்டார்.





பல தேசப் பழமொழிகள்:

* ஒவ்வொரு பொய்யும் ஒரு பல்லைத் தட்டுவதாக இருந்தால், எவருக்கும் பல்லே இருக்காது.
— ஸ்வீடன்.

* பழம் வேண்டுமானால், பூவைப் பாதுகாக்க வேண்டும்.
— பல்கேரியா.

* வறுமையில் நிறைவு காண்பவனே மிகப் பெரிய பணக்காரன்.
— கொரியா.

* தகுதி இல்லாதவனைப் புகழ்தல் கள்ளச் சந்தையில் ஒரு பொருளை விற்பதற்குச் சமம்.
— சீனா

* அறிவில்லாதவனுக்கு வரும் அதிர்ஷ்டம் பயனற்றதாகும்.
— ரஷ்யா.

— தொகுப்பு: கி. ராஜா (9526)
திருச்சி



அரசாங்கப் பேருந்துகள்

நம் தமிழகத்தில் உள்ள அரசினர் பேருந்துகள்:

திருவள்ளுவர், பல்லவன், அண்ணா, பெரியார், சோழன், சேரன், பாண்டியன், மருது பாண்டியன், தீரன் சின்னமலை, ஜீவா, பட்டுக்கோட்டை அழகிரி.


— ஜி. ராதாகிருஷ்ணன் (5356),
மயிலாடுதுறை.

சேலத்தின் செல்வம்

சேலத்தின் செல்வத்தைப் பற்றி ஆங்கிலத்தில் வேடிக்கையாகக் கூறுவதுண்டு. அது என்ன தெரியுமா?

S — Steel (எஃகு)
A — Aluminium (அலுமினியம்)
L — Limestone (சுண்ணாம்புக்கல்)
E — Electricity (மின்சாரம்)
M — Mango (மாம்பழம்)

— ம. தனலட்சுமி (5458), சேலம்—5



தமிழ் மாதங்கள்

கீழே சில வாக்கியங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் ஒரு தமிழ் மாதம் ஒளிந்திருக்கிறது. கண்டு பிடியுங்கள்.

1. எங்கள் தாத்தாவை காசிக்கு அனுப்பி வைத்தேன்.
2. அம்மா சில இட்லிகளைத் தட்டில் வைத்தாள்.
3. சீனு கார்த்தி கையைப் பிடித்து அழைத்துச் சென்றான்.
4. நான் காசித் திரை அரங்கில் ஓர் இந்திப் படம் பார்த்தேன்.
5. சீதை நடனமாடினாள்.

விடை: 1. வைகாசி; 2. மாசி; 3. கார்த்திகை; 4. சித்திரை; 5. தை.

— க. சரவணன் (2519),
சென்னை—21.





வெள்ளிக்கிழமை:

செஞ்சிக் கோட்டையை ஆண்ட ராஜா தேசிங்குக்கும் வெள்ளிக் கிழமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ராஜா தேசிங்கு பிறந்தது வெள்ளிக் கிழமை, அரசைப் பிடித்தது வெள்ளிக் கிழமை, மணமானது வெள்ளிக் கிழமை, மரணம் அடைந்ததும் வெள் ளிக்கிழமைதான். எனவேதான், இப் போதுகூட வெள்ளிக்கிழமைகளில் செஞ்சிக் கோட்டையைப் பார்க்க வருபவர்களிடம் கட்டணம் வசூலிப்ப தில்லை.


— நெ. அன்புசெழியன் (1727), பண்ணுருட்டி.

எத்தனை மதுரை!

மதுரையைச் சுற்றித்தான் எத்தனை மதுரைகள்! மதுரைக்குக் கிழக்கே கீழ் மதுரை. அதற்கும் அப்பால் மானா மதுரை. வடக்கே திண்டுக்கல்லுக்கு அப்பால் வடமதுரை. தெற்கே அருப் புக்கோட்டை ரோட்டில் நெடுமதுரை.

— என் செந்தில்குமார் (131) பேரூர்.





ஏன் சிரித்தார்கள்?

என் நண்பன் ராமு என்னிடம் வந்து, "முட்டிக்கு மேல் தொடை" என்றான். உடனே நான் முட்டிக்கு மேலே கையை வைத்துத் தொடைத் தேன். உடனே அருகிலிருந்த நண்பர் கள் சிரித்தனர். 'ஏன் சிரிக்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

"முட்டிக்கு மேல் தொடைதானே! நீ ஏன் துடைத்தாய்?" என்று கேட்டு விட்டு மேலும் சிரித்தார்கள்.

— எம். கே. தியாகராஜன் (7597), சிதம்பரம்.

பஞ்சும் நூலும்

சாப்பிடுபவர்: என்னப்பா, இட்லியிலிருந்து இப்படி நூல் நூலா வருது!

பரிமாறுபவர்: நேத்து நீங்க சாப் பிடும்போது இட்லி பஞ்சு பஞ்சாக இருக்கிறதுன்னு சொன்னீங்களே, அதுதான் இப்போ நூலா வருது!


— டி. பாஸ்கர் (4977), இராஜபாளையம்.




அன்றாட வாழ்வில் சில 'க்கு'கள்!

மரங்களில் ஒருவகை க்கு — தேக்கு
ஒரு காலால் தவம் செய்யும் க்கு — கொக்கு
முட்டாளைக் குறிக்கும் க்கு — மக்கு
ஆணவக்காரர் கொள்ளும் க்கு — செருக்கு
ஒளியைத் தரும் க்கு — விளக்கு
சுவை உணர உதவும் க்கு — நாக்கு
பித்தானுக்குப் பதில் உதவும் க்கு — ஊக்கு
தாமதமாய் வருவோர் கூறும் க்கு — சாக்கு

— ச. நடராஜன் (4885), தென்காசி





இவைகள் பேசினால்...?

வெண்டை: இதோ பாருங்கோ, இந்த வழவழா வியாபாரமெல்லாம் எனக்குப் பிடிக்காது. சொல்லிப்பிட்டேன்.

பாகற்காய்: இப்ப நான் சொல்றதெல்லாம் கசப்பாத்தான் இருக்கும். பின்னாலேதான் எல்லாம் தெரியும்.

வாழைக்காய்: என்னதான் சொல்லுங்கோ.. என் கை கறை படியாத கை.

தேங்காய்: இந்தக் குடுமியை எடுத்துட்டுக் கிராப் வச்சுக்க ஆசையா இருக்கு. ஆனாலும், சம்பிரதாயத்தை விட முடியல்லியே!

— பு. அருள் செல்வம் (9821), காரைக்குடி.


எது? எது?

1. மாம்பழத்தில் ஒரு வகையைக் குறிக்கும் நாடு எது?
2. விருந்து வழங்குவதை நினைவூட்டும் நகரம் எது?
3. பச்சை நிறத்தைக் குறிக்கும் தீவு எது?
4. அரசியுடைய நாடு எது?
5. அரசனுடைய நகரம் எது?
6. ஊசியைக் குறிக்கும் நாடு எது?

விடைகள்: 1.ருமானியா; 2.விருதுநகர்; 3. கிரீன்லாந்து; 4. குவீன்ஸ்லாந்து; 5.கிங்க்ஸ்டன்; 6.பின்லாந்து.

— சு. ஆனந்த் (7595), சிதம்பரம்.





காந்திஜியின் கடைசிக் கையெழுத்து

1948 ஜனவரி 30—ஆம் தேதி காந்திஜி வழக்கம்போல் பலருக்கும் பேட்டி அளித்துக்கொண்டிருந்தார். அன்று, இலங்கையைச் சேர்ந்த டாக்டர் டி. சில்வா என்பவரும் அவருடைய மகளும் காந்திஜியைக் கண்டனர். அப்போது டி. சில்வாவின் மகள் காந்திஜியிடம் கையெழுத்து வாங்கினாள். காந்திஜி போட்ட கடைசிக் கையெழுத்து அதுதான்!

— ஏ. பிரபு (641), பரோடா.

உருவகக் கதைகள்

தெய்வப் பிறவி

ஓர் அழகான கிளி உயரமான ஒரு மரத்தின் கிளை மீது அமர்ந்து பழத்தைக் கொத்திக் கொண்டிருந்தது. அந்தப் பழத்தின் இன்பத்தில் தன்னை மறந்திருந்த அதை 'டக், டக்' என்ற ஓசை கலைத்துவிட்டது. தன் தலை மேலே அடிப்பது போலிருந்த அந்த ஓசையைக் கேட்டுக் கிளி கடுங் கோபம் கொண்டது. ஓசையை எழுப்பிய கொடியவன் யார் என்று சுற்று முற்றும் தேடிப் பார்த்தது.

தனக்குக் கீழே மரங்கொத்தி மரத்தைக் கொத்துவதைக் கண்ட கிளி அதனிடம் சென்றது. "ஏ, அற்பப் பறவையே! நீ யார்? ஏன் இப்படி வீணாகச் சத்தம் போட்டு என் அமைதியைக் குலைக்கிறாய்?" என்று கேட்டது.

அந்த மரங்கொத்தி "நான் மரங்கொத்திப் பறவை. என் உணவு மரத்தினுள் இருப்பதால், மரத்தைக் கொத்துகிறேன்" என்று நெஞ்சுரத்துடன் கூறியது.

சிறிதும் பணிவின்றி அது கூறிய மறுமொழியைக் கேட்ட கிளி மேலும் கோபம் கொண்டது.

"நான் யார் தெரியுமா? நான் பறவையினத்தில் தேவநிலை பெற்றவன். தெய்வப் பிறவி. என் முன் நிற்பதற்கே உனக்குத் தகுதியில்லை. இதை உணராத நீ வணக்கமின்றிப் பேசுகிறாய்" என்று உரத்த குரலில் கிளி சொன்னது.

அதைக் கேட்டுச் சிரித்த மரங்கொத்தி, "ஐயனே, நீங்கள் எப்படித் தெய்வப்பிறவி பெற்ற பறவை என்பது அடியேனுக்குப் புரியவில்லையே? நாங்கள் கடைக்கண் பார்வைவைத்து, இந்த அடிமைக்கு விளக்கம் கூற வேண்டும்," என்று நையாண்டி செய்யும் முறையில் பேசியது.

கிளிக்குச் சினம் பொங்கியது. "ஏ, மரங்கொத்தியே! நீ வெறும் புழு பூச்சிகளை மட்டும் உண்கிறாய். நானோ, இனிய பழங்களைச் சுவைத்து விருந்துண்கிறேன். அதுமட்டுமல்ல; உனக்கு எளிய உன் பறவை மொழி மட்டுமே தெரியும். எனக்கு அத்துடன், தேவநிலை பெற்ற மனிதமொழியும் தெரியும். இந்த ஒரு சில உண்மைகளே, நான் உன்னை விட உயர்ந்தவன் — பறவைகள் எல்லாவற்றையும்விட உயர்ந்தவன் — தெய்வப் பிறவி பெற்றவன் என்பதை மெய்ப்பிக்கும்" என்று தன் நெஞ்சை நிமிர்த்திப் பெருமிதத்துடன் மொழிந்தது.

அதற்கு, "கிளியாரே, நீர், மரத்திலுள்ள பழங்களையெல்லாம் கடித்து நாசமாக்குகிறீர், நானோ, மரத்தை நாசப்படுத்தும் புழுபூச்சிகளை உண்டு, மரத்திற்கு நன்மை செய்கிறேன். மேலும், நாங்கள் பேசாத தேவநிலை பெற்ற மொழி பேசுவதாக நீர் சொன்னீர். ஆனால், உங்களால் அம்மொழியிலேயே சிந்தித்துப் பேச முடியுமா? ஒரு கிளி மற்றொரு கிளியுடன் அம்மொழியில் பேசக் கூட முடியாது.



அம்மொழி பேசுவோர் போல உயரவும் முடியாது. எனவே, இனியேனும் போலிப் பெருமை கொள்ளாதே! உன் நிலை உணர்ந்து உரிய முறைப்படி நடந்து கொள். அதுதான் உனக்கும் நல்லது; உடன் வசிக்கும் அனைவருக்கும் நல்லது'' என்று உரைத்த போது கிளி 'விர்'ரென்று பறந்து மற்றோர் மரத்திற்குப் போய்விட்டது.

துன்பத்தில் இன்பம்

ஒரு குயவர் தமது வேலைக்காக ஓரிடத்தில் களிமண்ணை வெட்டினார். பிறகு, வெட்டிய மண்ணை வீட்டிற்குக் கொண்டு வந்தார். அதில் அளவாகத் தண்ணீர் ஊற்றிக் காலால் மிதித்தும் கையால் பிசைந்தும் பக்குவப்படுத்தினார்.

அப்போது அந்த மண் தனக்குள் பேசிக் கொண்டது. ''நாம் யாருக்கும் தீங்கு செய்யவில்லை. அப்படி இருந்தும் இந்தக் குயவன், நம்மை வெட்டியும், குத்தியும், மிதித்தும், பிசைந்தும் துன்பப்படுத்துகின்றானே! இங்கு யாரும் கேட்பாரில்லையா? இதற்கு ஒரு முடிவே கிடையாதா?'' என்று நெஞ்சம் நொந்து பேசியது.

குயவர் மரச்சட்டத்திற்குள் அந்த மண்ணை ஓங்கியடித்தார். பரப்பினார். செம்மைப்படுத்தினார். அதை எடுத்துக் கீழே வைத்தார். அது வீட்டின் மேல் போடும் ஓட்டின் வடிவம் பெற்றிருந்தது. இரண்டு நாட்கள் வெயிலில் காய்ந்தது.

அப்போது, அந்த ஓடு ''நாம் எவ்வளவோ துன்புற்றோம். வேதனைப்பட்டோம். பிறகு, தற்போது அழகான வடிவம் பெற்றுவிட்டோம். இனி, நம்மை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. நம்மால் இனிமேல் பிறருக்கு உதவி செய்ய முடியும்'' என்று நினைத்தது. சற்று நேரத்திற்கெல்லாம் திடீரென்று பலத்த மழை வந்துவிடவே, அந்த மழையில் ஓடு கரைந்து உருத் தெரியாமல் போயிற்று!

மறுபடியும் அந்தக் குயவர், கரைந்து போன ஓடுகளுடன், புதிய மண்ணையும் சேர்த்து, ஓடுகள் அறுத்துக் காய வைத்தார். அவை நன்றாகக் காய்ந்ததும், அவற்றைத் திரட்டி, அடுக்கிச் சூளை போட்டார். அப்போது அந்த ஓடு, கொழுந்து விட்டெரிந்த செந்தீயினால் உள்ளம் வெந்து, வேதனையைத் தாங்க மாட்டாமல் துடித்தது. அளவுக்கு மீறிய துன்பத்திலிருந்து தன்னைக் காக்கும்படி, காற்றையும் வானையும் மன்றாடிக் கேட்டது. ஆனால் ஒரு



பலனும் கிட்டவில்லை.

சூளையில் தீ ஆறி அடங்கிய பிறகு, தாங்க முடியாத துன்பம், ஒரு முடிவுக்கு வந்தபிறகு, ஓடு தன்னை ஒரு முறை பார்த்துக் கொண்டது. தன் உடம்பில் புதுப்பொலிவும் புதுநிறமும் ஏறியிருப்பதை அறிந்தது. தன் ஆற்றலும் வளர்ந்திருப்பதாக உணர்ந்தது. அப்போது வந்த மழையிலும் அது கரைந்து விடவில்லை. கொடுந்துன்பமும் ஒருவிதத்தில் நன்மை அளித்திருப்பதை நன்றியுடன் நினைத்துக் கொண்டது.

— மலையமான்.

பாரதி புதிர்-4 விடை

காக்கை, குருவி எங்கள் ஜாதி — நீள்
கடலும், மலையும் எங்கள் கூட்டம்.
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி
வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்.
('ஜய பேரிகை' பாட்டில்)

சிறுமியின் கருணை

ஆரம்



பகலிலிருந்து துரை எவ்வளவோ அலைந்தாகிவிட்டது. வருமானம் கிடைக்கவில்லை. மூன்று பஸ் ஏறி இறங்கிவிட்டான். 'கிராக்கி' எதுவும் மாட்டவில்லை.

பஸ்ஸ்டாண்டில்சிவாவைப்பார்த்தான்.

''டேய், ஒண்ணும் கிடைக்கலேடா.....!''

''எனக்கும் ஒரு அஞ்சு ரூபாதான் கிடைச்சிச்சு..... வா! டீ சாப்பிடலாம்.....!''

''கடன்லே இப்பத்தான் டீ குடிச்சேன்..... நீ போ! அந்தாலே பஸ் வருது. கும்பல் நிறைய இருக்குது.... ஒரு கை பாக்கறேன்.... '— துரை ஓடினான்.

கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு ஏறி சைதாப்பேட்டைக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டான். அது மாதத்தில் முதல் வாரம்.... கும்பலில் பலர் பணத்துடன் இருப்பார்கள். சம்பளம் வாங்கிக் கொண்டு திரும்புகிறவர்கள். துரை கும்பலை நெருக்கிக் கொண்டு முன்னேறினான்.

துரையும், சிவாவும் இந்த ஜேப் படித்தொழிலுக்கு வந்து மூன்று வருடமாகிவிட்டது. இரண்டு பேரும் நாலாவது படிக்கும்போது படிப்பைப் பாதியில் விட்டுவிட்டார்கள். சிவாதான் துரையை இதற்கு அறிமுகம் செய்து வைத்தான். தங்கசாலையில் பொன்னப்பன் தெருவில் உள்ள முறுக்கு மீசை ராஜாபாதர் கும்பலைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.... இவர்களுக்கு அவன்தான் வாத்தியார். சென்னை நகரில் பத்து வருஷமாய் இந்தத் தொழில் நடத்துகிறவன் ராஜாபாதர்.

தொழில் பழகிய பிறகு இருவரும் ஒன்ருகவே 'சம்பாதிக்க க் கிளம்பினுர்கள். ஒவ்வொரு நாளும் இருபது முப்பதுக்குக் குறைவில்லை. சிவா நூறு இருநூறு கூட ஒவ்வொரு சமயம் அடித்திருக்கிருன். இதுவரை இருவரும் யாரிடமும் மாட்டிக் கொள்ளவில்லை. அப்படி மாட்டிக் கொண்டாலும் ராஜாபாதர் அவர்களைக் காப்பாற்றி விடுவான். ராஜா பாதர் பெரிய ஆள்! இவர்களுக்குக்கிடைக்கிற வருவாயில் தினமும் ஒரு பகுதி அந்த ராஜா பாதருக்குப் போய்ச் சேரும்.....!

பஸ் கும்பலில் துரை மூச்சு முட்ட முட்ட நகர்ந்து கொண்டிருந்தான். எதுவும் சரிப்பட்டு வரவில்லை.... யாரோ ஒரு சிறு பெண் மட்டும் ஒரு குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். வயது பத்து அல்லது பனிரெண்டு தான் இருக்கும். ஏதோ யோசனையில் எங்கேயோ கவனமாக இருக்கிருள்! என்ன கவலையோ? பார்த்தால் அப்பாவியாய்த் தெரிகிறது. இடுப்பில் ஒரு கருக்குப் பை தொங்குகிறது. அதில் கொஞ்சம் சில்லறைதான்

இருக்கும். மட்டமான கிராக்கிதான்! துரைக்கு ஒரு கணம் காரணமில்லாமல் தயக்கமாகவும் இருந்தது. ஆனால், இன்றைக்கு வேறு எதுவும் கிடைக்கவில்லையே! என்ன சோதனை! இதையும் விட்டுவிட்டால், இரவு பட்டினி தான் கிடக்க வேண்டும்!

அடுத்த நிமிடம் அந்தச் சுருக்குப்பை அவன் கைக்குள் வந்து அடங்கிற்று. யாரும் கவனிக்கவில்லை. கை விரல்களுக்கு அவ்வளவு சாமர்த்தியம்! பஸ் வேகமாய்த் தேனாம்பேட்டை தாண்டிக் கொண்டிருந்தது.

சைதாப்பேட்டையில் பஸ் வந்து நின்றவுடன் கூட்டம் இறங்கிற்று. துரை கும்பலோடு கும்பலாய் இறங்கினான். அவன் சற்று தூரம் சென்றபின்தான் யாரோ பின்னாலிருந்து கூப்பிடுவதை உணர்ந்தான்....

''அண்ணாச்சி....! நில்லு! ஒரு நிமிசம்....!''

துரைக்கு 'சொரக்'கென்று தூக்கிப் போட்டது.

அந்தப் பெண்தான் இடுப்பில் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வேகமாய் வந்து கொண்டிருந்தாள்!

''உன்னைத்தான்....!''

''என்ன?'' என்றான் துரை.

அவள் எதிரில் வந்து நின்று அவனைச் சற்று நேரம் பார்த்தாள்.

''என்ன பாக்கறே?''

''........'' — அந்தப் பெண் ஒன்றும் பேசவில்லை.

''என்னம்மா, முறைக்கிறே?''

''இந்தாப் பாரு! எங்க அண்ணாச்சி உன் வயசுதான்! இப்ப ஆஸ்பத்திரியிலே கிடக்கு.... கேட்டுக்க....''

''அதுக்கு என்னவாம் இப்ப?''

''கேளு அண்ணாச்சி! பூந்தமல்லிக்கு அப்பாலே பேட்டைதான் ஊரு எங்களுக்கு. ஆயா மட்டும்தான் இருக்கு. இது என் தம்பி. எங்க அண்ணாச்சி இருக்குதே.... அது இங்கிட்டு பிராட்வேயிலே ஒரு ஓட்டல்லே வேலை செஞ்சிக்கிட்டிருந்திச்சு.....''

''ஆமா, அதுக்கு என்ன இப்ப?''

''இரு அண்ணாச்சி, உன்னையப் பாத்தா அதைப் பாக்க வேணாம். அதே அச்சு! அப்படி இருக்கும். ஒரு வம்பு, தும்பு எதுக்கும் போகாது. ஒரு பொய், புரட்டு கிடையாது. கேட்டுக்க.... எங்க ஆயா அம்புட்டு கண்டிப்பா எங்களை வளத்திருக்காங்க.''

''சரி, அதுக்கு இப்ப என்ன?'' — துரைக்குப் பொறுக்கவில்லை.

அவள் அவனை மறித்தாள்.

''இரு, அண்ணாச்சி! இதைக் கேட்டுப்பிட்டுத்தான் போகணும்....போன வாரம் அந்த ஓட்டல்லே நடந்த கதையைக் கேளு.... அந்த முதலாளியோட கைக்கடியாரம் திருட்டுப் போயிருச்சாம்! ஓட்டல்லே வேலை செய்யற வங்க அத்தினி பேரையும் பிடிச்சுக் கட்டிப் போட்டு உதைச்சிருக்காரு பாரு.... அப்படி அடிச்சிருக்காரு..... போலீஸ்லே கூட அப்படி அடிக்க மாட்டாங்களாம்! அது மட்டுமில்லே. அந்த முதலாளி ஒவ்வொருத்தன் உள்ளங் கையிலேயும் கற்பூரம் கொளுத்திச் சாமி படத்துக்கு முன்னாலே நிறுத்தியிருக்காரு.... எங்க அண்ணாச்சி எம்புட்டுச் சொல்லியும் காதிலே வாங்கலே அந்தப் பாவி! கையெல்லாம் புண்ணாகிப் போயிடுச்சு! இப்ப ஆஸ்பத்திரியிலே கிடக்கு! இன்னொருத்தர் பொருளைக் கையாலே தொட மாட்டோம் நாங்க! அந்தக் கருமாரி சத்தியமாச் சொல்றேன் கேட்டுக்க....''

''ஆமா, இப்ப என்னை என்ன செய்யச் சொல்லுறே நீ....?'' — துரைக்கு நிலை கொள்ளவில்லை....

''.... கேளு அண்ணாச்சி கதையை. போன மாசம் இருபத்தஞ்சு நாளைக்கு அண்ணாச்சி வேலை செஞ்சிருக்கு. சம்பளம் வாங்கணும். அதுக்குத்தான் என் தம்பியையும் தூக்கிக்கிட்டு இன்னைக்கு ஓடியாந்தேன்.... அந்த முதலாளி மாசம் அறுபது ரூபா சம்பளம் குடுப்பாரு.... அப்ப இருபத்தஞ்சு நாளைக்கு எம்புட்டு? யோசிச்சுப் பாரு! அவரு என்ன செஞ்சார் தெரியுமா? ஒரு பத்து ரூபாத் தாளைத் தூக்கி எறிஞ்சிட்டு, ''தொலை கழுதை! அதுக்கு மேலே இந்தப் பக்கம் தலையைக் காட்டாதே!'' என்று எட்டி உதைச்சாரு.... இந்த அநியாயத்தை யாரு கேப்பாங்க....? எனக்கு வயிறு எரியுது! நியாயமான கூலியும் குடுக்காமே, எங்க அண்ணாச்சியையும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிச்சிட்டாரு அந்த முதலாளி. அந்தக் கருமாரிதான் அதைக் கேக்கணும் போ.....! இனிமே எங்க அண்ணாச்சி உடம்பு சரியாகி... வேலை தேடி.... அது எப்பவோ....? அதுவரைக்கும் வருமானம் இல்லை.... எங்க நிலைமையைப் பாத்தியா? யோசிச்சுப் பாரு....!''

துரை சற்று நேரம் எதுவும் பேசவில்லை. அவளும் பேசவில்லை.



"..... அந்த முதலாளி பெரிய பணக்காரரு.... இந்த ஊர்லே நாலு ஓட்டல் வைச்சு நடத்திக்கிட்டிருக்காரு... அவரு இப்படி எங்க வயித்திலே அடிக்கிறாரு....! நியாயமான கூலியைக் கொடுக்காமே ஏமாத்தி இந்த ஏழைங்களைக் கொள்ளையடிக்கிறாரு... ஆமா.... இதுவும் ஒரு திருட்டுத் தானே? இது பணக்காரத் திருட்டு!"

"........."

"....அதைவிடவா நீ என் சுருக்குப் பையை ஜேப்படி அடிச்சது பெரி சாப் போச்சு? பாத்தா உனக்குப் பசி எடுக்கிற மாதிரி தெரியுது....! இந்தா! பத்து ரூபாத் தாளைக் கையிலே தனியா வைச்சிட்டிருந்தேன்.... ஓட்டலுக்குப் போய் நல்லா சாப்பிடு! இந்தா பிடி! பிடி, அண்ணாச்சி....!"

— அவள் நீட்டுகிற அந்தப் பத்து ரூபாய் துரையின் நெஞ்சைச் சுட்டது. அவனுக்கு எதுவும் தோன்றவில்லை!

"வாங்கிக்க அண்ணாச்சி...! இந்தப் பத்து ரூபாயும் அந்தச் சுருக்குப் பையிலேதான் இருந்திருக்கோணும்... கையிலேயே வைச்சிருந்தேன்.... பசிச்சவன் சாப்பாட்டுக்குத் திருடினா அது அந்த முதலாளி செய்ததை விடப் பெரிய குற்றம் இல்லே.... இந்தா பிடி அண்ணாச்சி.....!"

துரை அதிர்ந்துபோய் விட்டான்!

'விருட்' டென்று சுருக்குப் பையைத் தூக்கி வீசிவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடினான்....

* * * * *


மறுநாள் காலை வழக்கம்போல சிவா வந்து துரையை எழுப்பினான். துரை எழுந்திருக்கவில்லை!

"நான் இனிமேல் இந்த வேலைக்கே வரவில்லை, நீ போ சிவா....!" — துரை தீர்மானமாகச் சொன்னான். சிவாவுக்கு பிரமிப்பு அடங்கவில்லை!

உங்களுக்குத் தெரியுமா?

—செந்தமிழ்ச்செல்வன்—

எகிப்திலுள்ள பிரமிடுகள் மன்னர்களின் சமாதிகள்தான். இவற்றுள் மிகப் பெரியது 'கியாப்ஸ்' என்னும் பிரமிட். இதற்குத் தேவைப்பட்டது: 50 இலட்சம் கற்கள் - ஒரு இலட்சம் ஆட்கள் - கட்டி முடிக்க சுமார் 20 ஆண்டுகள்.






உயிரினங்களில் முதலையால் மட்டுமே சுமார் ஆறு மணி நேரம் தண்ணீருக்குள் மூச்சை அடக்கிக் கொண்டிருக்க முடியும்.




மொகலாயப் பேரரசர் அக்பர் சிலந்திப் பூச்சியானது தன் வலையில் வந்து விழுகின்ற சிறு சிறு பூச்சிகளைக் கவ்விப் பிடித்துத் தின்பதைப் பார்த்து மகிழ்வாராம்.

ஆதாரம்:

'ஹுமாயூன் நாமா'



யானையின் சிறப்பு உறுப்பான தும்பிக்கையில் மட்டும் 40 000 தசைநார்கள் உள்ளன. நன்கு வளர்ந்த ஒரு யானை ஒரு டன் எடையுள்ள பொருளை தன் தும்பிக்கையால் மிக எளிதாகத் தூக்கி விடும்.



அணைக் கிணறு

வி.ர.வசந்தன்

வளைந்து வளைந்து மேலேறிச் சென்ற அந்த மலைப்பாதையில் விரைவாக முன்னேறிக் கொண்டிருந்தது அந்த பேருந்து வண்டி. எதிரே சற்று தொலைவில் மலை மீதிருந்து பொங்கி விழும் மலையருவியின் தோற்றம் நளினையும் நண்பர்களையும் மெய் சிலிர்க்க வைத்தது. அதன் அருகில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த நீர்மின் நிலையத்தைப் பார்க்கத்தான் அவர்கள் திட்டமிட்டு வந்திருந்தனர்.

நீர்மின் நிலையத்தினுள் அவர்கள் நுழைந்தபோது அவர்களோடு பேருந்தை ஓட்டி வந்த டிரைவரும் வருவதைக் கவனித்தான் நளின். ''டிரைவர், எங்க லக்கேஜ் எல்லாம் பஸ்ஸிலே இருக்கே, நீங்க பாட்டுக்கு எங்ககூட வந்துட்டீங்க'' என்றான்.

''கதவு,ஜன்னல் எல்லாம் நல்லாப் பூட்டிட்டேன் தம்பி, ஒண்ணும் பயமில்லை'' என்று சற்றுத் தயக்கத்துடன் சொன்னார் டிரைவர்.

''அதுசரி, நீங்க வந்து இங்க என்னத்த தெரிஞ்சுக்கப் போறீங்க? எங்க காமிரா, டிரான்ஸிஸ்டர் எல்லாம் பஸ்ஸிலேயே இருக்கு. போய்ப் பார்த்துக்குங்க'' என்றான் நளின் மறுபடியும் அதிகாரமாக.

அதைக் கேட்டதும் டிரைவரின் முகம் ஏமாற்றத்தால் சுருங்கிப் போய் விட்டது. ''கரண்டு தயார் பண்ணறது எப்படின்னு தெரிஞ்சுக்கலாம்னு பாத்தேன்'' என்று முணுமுணுத்தவாறு திரும்பிச் செல்ல எத்தனித்தார். ஆனால் அதற்குள் இதைக் கவனித்துக் கொண்டிருந்த ஆசிரியர், ''அவரும் நம்மோட வரட்டுமே நளின், பஸ்ஸைத்தான் நல்லா லாக் பண்ணியாச்சே'' என்றார். அதன்பிறகுதான் அமைதியானான் அவன்.

டிரைவர் ஏதோ கோட்டையைப் பிடித்துவிட்டது போன்ற வெற்றிக் களிப்பில் மாணவர்களோடு சேர்ந்து கொண்டார். வேடிக்கையாக பேசி அவர்களைச் சிரிக்க வைத்தவாறு அந்த மின்நிலையத்தின் ஒவ்வொரு பகுதிகளையும் பார்த்து, தெரியாததையெல்லாம் ஆர்வத்துடன் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

அவரது செய்கைகளையெல்லாம் கவனித்துக் கொண்டு வந்த நளினுக்கு ஆத்திரமாக வந்தது. தன்னோடு வந்த நண்பனிடம், ''அந்தப் பட்டிக்காட்டு டிரைவரைப் பாரு. நாகரீகம் தெரியாத இடியட். கிராமத்தான் யானையைப் பாத்த மாதிரி வாயப் பிளக்கிறான்'' என்று முணுமுணுத்தான்.

அவர்கள் மின்சாரம் உற்பத்தி செய்யும் பிரதான பகுதியை அடைந்தனர். மலை மீது இருந்து பாய்ந்து வரும் வெள்ளத்தைப் பிரமாண்டமான குழாய்களுக்குள் பாய்ச்சி அந்தக் குழாய் நீரை இராட்சத டர்பைன்களில் செலுத்த அவை சுழன்ற வேகத்தில்

மின்சாரம் உற்பத்தியாகிக் கொண்டிருந்தது.

ஆசிரியர் மாணவர்களுக்கு அது செயல்படும் விதத்தை விளக்கிக் கூறிக் கொண்டிருந்தார். அப்போது பின்னால் நின்று கொண்டிருந்த டிரைவர் மிக்க ஆவலோடு ஆசிரியரை நெருங்கி, ''அது எப்படிங்க, இந்தத் தண்ணீர் கரண்டா மாறுது'' என்று தன் சந்தேகத்தை அப்பாவித்தனமாகக் கேட்டார்.

உடனே நளின் குறும்பாக, ''தண்ணீர் இந்த இயந்திரத்துக்குள்ளே போய் ஆவியா மாறுது. அந்த நீராவி மின்சாரமா மாறுது'' என்றான்.

அவன் சொன்னதை உண்மையென்று நம்பிவிட்ட டிரைவர், 'அப்படீங்களா, சமாச்சாரம்' என்று வியப்புடன் கூற சுற்றி நின்ற மாண்வர்கள் 'கொல்'லென்று சிரித்தனர்.

ஆசிரியர் நளினைக் கண்டிக்கும் தோரணையில் பார்த்துவிட்டு, ''தண்ணீர் மின்சாரமா மாறவில்லை டிரைவர். மின்சாரம் தயாரிக்கும் இயந்திரத்தை இயக்குவதற்கு தண்ணீரின் விசை பயன்படுகிறது. அவ்வளவுதான். எப்படி சைக்கிள் டையனமோவைச் சுற்றுவதற்கு சைக்கிள் சக்கரம் பயன்படுகிறதோ அது மாதிரி'' என்று அவருக்குப் புரியும்படி சொன்னார்.

டிரைவர் புரிந்து கொண்டதற்கு அடையாளமாகத் தலையாட்டினாலும், தன் அறியாமையைப் பார்த்து மாணவர்கள் சிரிப்பதைக் காண அவருக்கு ஒரே அவமானமாகப் போய்விட்டது.

அவர் அவர்களைப் பார்த்து, ''தம்பிகளா, உங்களைப் போலப் பள்ளிக்கூடம் போய்ப் படிக்கிற வசதி எனக்குக் கிடைக்கலே. அதுனால இதுவெல்லாம் தெரியாமப் போச்சு'' என்றார்.

உடனே நளின் குறும்பாக, ''கவலையை விடுங்க டிரைவர். பெரிய பெரிய அறிவாளிகள் எல்லாம் பள்ளிக்கூடம் போய்ப் படிக்காதவங்கதான்'' என்றான்.

''நான் அறிவாளி இல்ல தம்பி. ஆனா அனுபவத்துலே ஏதோ கொஞ்சம் தெரிஞ்சிருக்கேன்'' என்றார் டிரைவர் சற்று வேதனையுடன்.

நளின் அவரைப் பார்த்து, ''ஏதோ கொஞ்சம்னா எப்படி, அரைக் கிணறு தாண்டற மாதிரியா?'' என்றான் கேலியாக.

டிரைவர் மேற்கொண்டு அவனிடம் எதுவும் பேசாமல் அந்த இடத்தை விட்டு நகர்ந்துவிட்டார்.

நளினின் குறும்புப் பேச்சு ஆசிரியருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆனாலும், அந்த இடத்தில் அவனைக் கண்டிப்பதால் அந்த மகிழ்ச்சியான சூழ்நிலை பாதிக்கப்படும் என்று மௌனம் சாதித்தார்.

அந்த நீர்மின் நிலையத்தைப் பார்த்துவிட்டு அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். வானளாவ வளர்ந்து நின்ற தேக்கு மரக்காடுகளும், ரப்பர் மரத் தோட்டங்களும் வழி நெடுக அவர்கள் கூடவே வந்து கொண்டிருந்தன. மாண்வர்கள் எல்லோரும் ஒரே சிரிப்பும் விளையாட்டுமாக இருந்தனர்.


அப்போது அந்த மலைப்பாதையின் ஒரு சிக்கலான வளைவில் பேருந்தின் வேகத்தை மட்டுப்படுத்த பிரேக்கைப் போட்டார் டிரைவர். 'கடக்'கென்று ஏதோ கழன்று கொண்டது. 'பிரேக்' வேலை செய்ய மறுத்தது. மறுநிமிடம்

9க்கு 7

'ஆம்ஸ்டர்டாம்' என்ற நகரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஹாலந்து நாட்டிலுள்ளது இது. இந்த ஊரின் பெயரை ஆங்கிலத்தில் எழுதினால், ARMSTERDAM என்று 9 எழுத்துக்களில் எழுதுகிறோம். ஆனால், இந்தப் பெயரையே 7 எழுத்துக்களால் எழுத உங்களால் முடியுமா? முயன்று பாருங்கள்.

இதோ, இப்படி அதை எழுதலாம்:

—ஓ. நா. ஓம்பிரகாஷ்.





பேருந்து கட்டுப்பாடில்லாமல் தாறுமாறாக ஓட ஆரம்பித்தது.

இடது பக்கம் கிடுகிடுவென்று பயங்கரப் பள்ளம், அதில் சாய்ந்துவிடாமல் இருக்கவும் எதிரே வரும் வாகனங்களில் மோதிவிடாமல் இருக்கவும் டிரைவர் போராடினார். அவர் தன் திறமை அத்தனையும் செலுத்தி வண்டியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயன்றார். எஞ்சினை நிறுத்தி வேகத்தைக் கட்டுப்படுத்திவிட்ட போதிலும் இறக்கமான மலைப்பாதையாதலால் வண்டியை நிறுத்த முடியவில்லை. ஒவ்வொரு வளைவிலும் திரும்பும்போது, 'இதோ பள்ளத்தில் உருண்டு எல்லோரும் தொலைந்தோம்' என்று அஞ்சி மாணவர்கள் அலறினர். வண்டிக்குள் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது.

ஆனாலும் டிரைவர் தன் நிதானத்தை இழக்கவில்லை. இன்னும் சற்று நேரத்தில் அந்த மலைப்பாதையில் மிகச் சிக்கலான வளைவுகளும், பயங்கரச் சரிவுகளும் வந்துவிடும். அதன்பின் விபத்தைத் தவிர்ப்பது என்பது இயலாத காரியம். அதற்குள் எப்படியாவது பேருந்தை நிறுத்திவிட வேண்டும் என முயன்றார் டிரைவர்.

அந்த நேரத்தில் சோதனையாக முன்னால் ஒரு மாட்டு வண்டி பெரும் பாரத்தோடு ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்க எதிரே தேக்கு மரங்களை ஏற்றிய ஒரு லாரி மூச்சைப் பிடித்துக் கொண்டு மேலேறி வந்து கொண்டிருந்தது. கட்டுப்பாடில்லாமல் வரும் பேருந்து செல்ல இடம் இல்லாதபடி சாலையை அடைத்துக் கொண்டன அந்த மாட்டு வண்டியும், லாரியும். இதோ மாட்டு வண்டியில் மோதி பள்ளத்தில் உருளப் போகிறது என்று எல்லோரும் வீறிட்டு அலறினர்.

நளின் பயத்தில் அதிர்ந்து போய் இருக்கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

அப்போது மழைநீர் தேங்கி சேறும், சகதியுமாக ஒரு நீண்ட பள்ளம் பாதையோரமாகத் தென்பட்டது.

அதைப் பார்த்ததுதான் தாமதம். மின்னல் வேகத்தில் செயல்பட்டார் டிரைவர். பேருந்தை சட்டென்று திருப்பி அந்தப் பள்ளத்தில் இறக்கினார். சேற்றில் முன் சக்கரங்கள் நன்கு

பதிந்து கொள்ள பேருந்து நின்றுவிட்டது.

டிரைவரின் சமயோசிதத்தால் ஒரு பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. நளின் அவரது தன்னம்பிக்கையையும் ஆபத்தைக் கண்டு கலங்காத திட மனத்தையும் கண்டு வியந்தான். இவரையா நாம் எள்ளி நகையாடினோம் என்று மனத்துக்குள் நாணினான்.

மாணவர்கள் எல்லோரும் பேருந்தில் இருந்து இறங்கினர். எதிரே பக்கவாட்டில் கிடுகிடுவென்று மலைச்சரிவு! இன்னும் ஓர் அடி தூரம் போயிருந்தால் பேருந்து சரிவில் இறங்கி இருக்கும்!

இத்தனை மாணவர்களின் உயிரைக் காப்பாற்றியதோடல்லாமல் பேருந்துக்கும் எவ்வித சேதமும் இல்லாமல் காத்த டிரைவரை எல்லோரும் சூழ்ந்து கொண்டு பாராட்டினர்.

ஆசிரியர் நளினை நெருங்கி வந்து. "என்ன நளின், இப்போது என்ன சொல்கிறாய்? யாரையும் குறைத்து மதிப்பிடுவது தவறு என்பதைப் புரிந்து கொண்டிருப்பாய் என நினைக்கிறேன். அவரை 'அரைக் கிணறு' என்று கேலி செய்தாயே. முழுக் கிணறும் தாண்டிவிட்டார், பார்த்தாயா! ஏதோ ஒரு வகையில் எல்லோரும் திறமைசாலிகள்தான் என்பதை இதிலிருந்தாவது தெரிந்து கொள்" என்றார்.

தன் தவற்றை உணர்ந்து கொண்ட நளின் ஆசிரியரின் முகத்தை எதிர் நோக்க முடியாமல் தலைகுனிந்தான்.



முடிவே இல்லாக் கடல்ராணி
முத்தம் கொடுக்க வருவாய்நீ
கரையில் நின்று அழைக்கின்றேன்
கால்களை நீரில் நனைக்கின்றேன்

நேரிய செல்வம் கொண்டவளே
நிலத்தில் காற்றைத் தருபவளே!
சூரியன் உன்னிடம் உதிக்கின்றான்
சுற்றியே உன்னில் குதிக்கின்றான்!

கப்பலைத் தாங்கிக் கொள்கின்றாய்
அப்பால் எங்கும் செல்கின்றாய்!

அலையாய்ப் புரண்டு வருகின்றாய்
ஆத்திரம் வந்தால் கொதிக்கின்றாய்!

அமைதி கொண்டு இருந்திடுவாய்
அழிக்கும் எண்ணம் மறந்திடுவாய்!
சமையல் உப்பைத் தந்திடுவாய்
சரியாய்க் கடலே நடந்திடுவாய்!


உன்னிடம் இருக்கும் பொருள்எல்லாம்
உலகம் பயன்பெறத் தந்திடுவாய்!
இன்னும் மேகம் உருவாக்கி
இங்கே மழையாய்க் கொட்டிடுவாய்!


ஓடும் ரயில் வண்டி!

இப்பக்கம் உள்ள வட்டத்தை ஒரு கனமுள்ள அட்டையில் ஒட்டிக் கொள்ளுங்கள். பிறகு, ஒவ்வொரு ரயில் வண்டியின் படத்தின் இடையே உள்ள நீண்ட கறுப்புக் கோட்டை பிளேடினால் வெட்டித் துவாரம் செய்து கொள்ளுங்கள். அதன்பிறகு வட்டத்தின் மையத்தில் உள்ள துவாரத்தில் ஒரு நீண்ட ஆணியை நுழைத்து அப்படத்தை நல்ல வெளிச்சம் உள்ள இடத்தில் முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்து, படத்தின் பிம்பம் அதில் தெரியும்படி பிடித்துக் கொள்ளுங்கள்.

வட்டத்தின் பின்புறம் துவாரத்தின் வழியாக, கண்ணாடியில் ரயில். வண்டியின் படத்தைப் பார்த்துக் கொண்டு வட்டத்தைச் சுழற்றுங்கள். ரயில் வண்டி புகையைக் கக்கிக் கொண்டு ஓடுவதைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்! உங்களுக்கும் நல்ல பொழுது போக்கு!!

—கே. எஸ். ராமமூர்த்தி.





திவ்யாக்குட்டி!

புதுவை கேசவ-சேகர்



எங்க வீட்டு திவ்யாக்குட்டி
சேட்டை பாருங்கோ! — உடன்
உங்களுக்கே சிரிப்புவரும்
ஓடி வாருங்கோ.

பாட்டி கையில் நாடிபார்த்து
டாக்டர் என்கிறாள்! — அவள்
காட்டுயானை நான்தானென்று
பிளிறிக் காட்டுறாள்!

அம்மாவோடு ஓட்டுப்போட
போவேன் என்கிறாள்! — திவ்யா
சும்மா கையை, காலை ஆட்டி
நடனம் என்கிறாள்!

மாமா மீசை மெய்யா, பொய்யா?
இழுத்துப் பார்க்கிறாள்! — "ஐயோ!
ஆமா"வென்று மாமாஓட
சிரித்து நிற்கிறாள்!



அப்பாவோட செருப்பை ஒளித்து
தேட வைக்கிறாள்! — அவள்
தப்பேசெய்யாக் குழந்தைபோல
பாடம் படிக்கிறாள்!

என்றுமவள் குறும்பு மனதில்
வடம் பிடிக்குமே! — அந்த
கின்னஸ்புக்கில் திவ்யா பெயர்
இடம் பிடிக்குமே!





சியாமளன் செய்த உதவி

அன்பிற்கினியவன்

ஆண்டுத் தேர்வுக்கு இன்னும் பதினைந்து நாட்களே இருந்தன. 'ஸ்டடி லீவு' தந்திருந்தார்கள். எனவே சியாமளன் தன் முழுக் கவனத்தையும் செலுத்தி, பாடங்களைப் படிக்க ஆரம்பித்திருந்தான். சிறிதும் சந்தடியின்றி அமைதியாக உள்ள இடத்தில் படித்தால்தான் மனத்தில் பதியும் என்பதால், வெகுநேர யோசனைக்குப் பிறகு, ஊரின் எல்லையிலுள்ள மண்டபத்தைத் தேர்ந்தெடுத்தான். புத்தகத்துடன் அங்கே புறப்பட்டான்.

மண்டபம் வெறிச்சோடியிருந்தது. ஊரிலுள்ள சப்தங்களும், இரைச்சல்களும் அங்கே துளியும் கேட்கவில்லை. அது மட்டுமல்ல. சற்றுத் தள்ளி மரங்களடர்ந்த தோப்பு ஒன்றும் இருந்தபடியால், 'குளு குளு' வென்று காற்றும் வீசிக் கொண்டிருந்தது.

எப்போதாவது ஒருமுறை யாராவது வழிப்போக்கர்கள் அந்த மண்டபத்துக்கு வந்து களைப்புத் தீர உட்கார்ந்து செல்வது உண்டு. தவிர, தோப்பைத் தாண்டி ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருப்பதால், குளிப்பதற்காகச் சில ,சமயம் ஆண்கள் மட்டும் அந்த வழியே வந்து போவார்கள்.

மண்டபத்தில் உட்கார்ந்து, புத்தகத்தை விரித்த போது, தன்னையறியாமலே எங்கிருந்தோ உற்சாகமும் மகிழ்ச்சியும் தன்னைச் சூழ்ந்து கொண்டதாய் உணர்ந்தான் சியாமளன். படிப்பதற்குத் தினமும் இங்கேயே வரவேண்டுமென்று முடிவு செய்து விட்டான்.

மூன்று நாட்கள் கழிந்தன.

மண்டபத்தின் அமைதியிலும் தனிமையிலும் சியாமளன் படித்தவை அவனது மனத்தில் பசுமரத்தாணி போல் நன்கு பதிந்தன. மகிழ்ந்தான்.

நான்காம் நாள்.

சியாமளன் படிப்பில் மூழ்கியிருந்த போது, அவனுக்குப் பக்கத்தில் ஒரு குரல், "தம்பி!" எனக் கேட்கவே, திடுக்கிட்டுப் போனான்.

தலை நிமிர்ந்து பார்த்தான்.

அவனுக்கு அருகில் தடித்த மனிதன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். தலை நிறைய அடர்த்தியான, எண்ணெயையும் சீப்பையும் பார்த்திராத முடி. 'கன்னங்கரேல்' என்று கருப்பசாமியாய்த் தோற்றமளித்தான். அடர்த்தியான, பெரிய ஆட்டுக்கடா மீசை வேறு!

ஆக, அவனைப் பார்க்கவே பயமாக இருந்தது, சியாமளனுக்கு!

அந்த ஆள் தன் கையில் ஒரு விலையுயர்ந்த வாட்ச் வைத்திருந்தான். பர்சும் இருந்தது. அவைகளைப் பார்த்தவாறே, "என்ன ஐயா? எதற்காகக் கூப்பிட்டீர்கள் என்னை?" என்று கேட்டான் சியாமளன்—பயத்தைவெளியே காட்டிக் கொள்ளாமல்தான்!

"தம்பி! உன்னை இரண்டு நாட்களாக இந்த இடத்தில் நான் பார்த்துக் கொண்டுதானிருக்கிறேன். உன் படிப்பைக் கெடுப்பதற்காக வந்துவிட்டேன் என்று நினைக்காதே! நீ எனக்கு இப்போது ஓர் உதவி செய்ய வேண்

டும்!'' என்றான் அந்த ஆள் தன் முரட்டுக் குரலில் அவசரம் அவசரமாக.

''என்ன உதவி?''

''வேறொன்றுமில்லை தம்பி. நான் ஒரு அவசர காரியமாக ஊருக்குள் சென்று பஸ் பிடித்து, பரமக்குடி வரை செல்ல வேண்டியதிருக்கிறது. அதனால், அதோ ஓடுகிற ஆற்றில் குளித்து விட்டுத்திரும்பிவிடலாம்என்றுநினைக்கிறேன். நிறைய ஆட்கள் அங்கு குளித்துக் கொண்டிருக்கிறபடியால், விலையுயர்ந்த இந்த வாட்சையும், பர்சையும் பாதுகாப்பது மிகவும் கஷ்டமான காரியம். நான் குளித்துக் கொண்டிருக்கிற போது, எவனாவது இவைகளைத் திருடிவிட்டானென்றால், அதையெல்லாம் நான் கவனித்துக் கொண்டிருக்க முடியுமா? கவனித்துக் கொண்டேயிருந்தால் குளிக்கத்தான் முடியுமா? அதனால் இவைகளை நீதான் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். குளித்துவிட்டு வந்து உன்னிடமிருந்து இவைகளை வாங்கிக் கொள்கிறேன்...'' என்றான் அந்த ஆள்.

சியாமளன் தயங்கினான்: 'இந்த மனிதன் பார்ப்பதற்கு சரியான கிராமத்தானாக இருக்கிறான். ஆனால் விலையுயர்ந்த பொருள் எப்படி இவனிடம் வந்தது? இவன் விழிக்கிற விழியும், தோற்றமும் நன்றாகவே இல்லை. திருடனாக இருப்பானோ...? ஆம்...! ஆம்...! அப்படித்தான் இருக்க வேண்டும். இவன் திருடனேதான்...! யாரிடமோ இந்த வாட்சையும், பர்சையும் பிக்பாக்கெட் அடித்திருக்கிறான் போலும்...!' என்று எண்ணினான்.

''தம்பி! அவசரம் — இவைகளை வாங்கிக் கொள்!'' என்று பரபரத்தான் அந்த ஆள்.

அவைகளை வாங்கிக்கொள்வதற்கு மிகவும்தயங்கினான் சியாமளன். அதே சமயத்தில்அந்த ஆள் சரியான முரடன் போலிருப்பதால்தன்னை அடித்து விடுவானோ என்றும் பயப்பட்டதால், எதுவும் பேசாமல், மனமில்லாவிட்டாலும் கூட, அவைகளை வாங்கிக் கொண்டான். வேகமாக ஆற்றை நோக்கி நடந்தான் அந்த ஆள்.

அதன்பின் சியாமளனுக்குப் படிப்பில் கவனம் செல்லவேயில்லை. 'அந்த ஆள் நிச்சயம் திருடனேதான். அவனைத் தேடி ஏதாவது கூட்டம் வந்தால், என்னைத்தான் பிடித்துக் கொள்ளப் போகிறது' என்று குழம்பிக் கொண்டிருந்தான்.

ஆனால் அவனது குழப்பங்களெல்லாம் வீணாயின.

எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை!

அரை மணி நேரம் கழித்து, அந்த முரட்டு ஆள் இவனிடம் வந்து, பொருட்களைத் திரும்பவும் வாங்கிக் கொண்டு, நன்றி கூறிவிட்டுச் சென்றான். அதன்பின்பே சியாமளனுக்கு நிம்மதி திரும்பி வந்தது.

மேலும் நான்கு தினங்கள் கழிந்தன.

ஐந்தாம் நாள்.,

மண்டபத்தில் சியாமளன் படிப்பு தொடர்ந்து கொண்டிருந்தது.

இளைஞன் ஒருவன் அவனருகே ந்தான்.

தூரத்தில் அவன் வரும்போதே கவனித்துவிட்ட சியாமளன், அவன் தன்னிடமே வந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டான்.

அந்த இளைஞனுக்குச் சுருண்ட முடி. சிவந்த நிறம். மஞ்சள் நிற முழுக்கைச்சட்டையும்,நீலநிறபேன்ட்டும், குளுமைக் கண்ணாடியும் அணிந்திருந்தான்.

''தம்பி! உன் பெயர் என்ன?'' என்று கேட்டான் அந்த இளைஞன் புன்னகையோடு.

அவனைப் பார்த்ததுமே சியாமளனுக்குப் பிடித்துவிட்டது. தன் பெயரைச் சொன்னான்.

''ரொம்ப நல்லது சியாமளன்! இதோ — இந்தச் சங்கிலியைச் சற்று நேரத்துக்கு நீ வைத்திருக்க வேண்டும்! இங்குதானே படித்துக் கொண்டிருக்கிறாய்? பிற்பாடு வந்து வாங்கிக்கொள்கிறேன்!'' என்றவாறு தன் கையிலிருந்த ஒரு சங்கிலியை நீட்டினான் இளைஞன்.

அதை வாங்கிக் கொண்டான் சியாமளன். அதன் எடை எப்படியும்மூன்று பவுனுக்குக் குறையாது என்று தோன்றியது சியாமளனுக்கு.



"எதற்காக இதை உன்னிடம் கொடுக்கிறேன் என்று யோசிக்கிறாயா? வேறொன்றுமில்லை. இந்தத் தோப்புக்குள் என் அண்ணன் வேலை செய்து கொண்டிருக்கிறார். அவர் கொஞ்சமும் பொறுப்பில்லாதவர். அவரைப் பார்க்கப் போகிறேன். என்னிடம் சங்கிலியைக் கண்டால் பிடுங்கிக் கொள்வார். அதனால்தான் உன்னிடம் கொடுக்கிறேன்..."

"முன்பின் தெரியாதவனாகிய என்னை நம்புகிறீர்களே என்றுதான் எனக்கு ஆச்சரியம்!"

"வேறு வழி? உன்னை விட்டால் இந்த இடத்தில் வேறு ஆட்களும் கிடையாதே?" என்று இளைஞன் சிரித்தான். அடர்ந்த தோப்புக்குள் சென்று விட்டான். சுமார் இருபது நிமிடங்கள் கழித்து—

ஐந்து பேர்கள் வேகமாக சைக்கிளில் வந்து சியாமளனருகே இறங்கினார்கள். அவர்களில் இரண்டு பேர் போலீஸ் உடையிலிருந்தார்கள்.

"தம்பி! எவ்வளவு நேரமாக நீ இங்கே படித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று ஒரு போலீஸ்காரர் கேட்டார்.

"ஒரு மணி நேரமாக, சார்!"

"அப்படியானால் உனக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்! இந்தப் பக்கமாகச் சற்று நேரத்துக்கு முன்பு ஓர் ஆள் — மஞ்சள்நிற முழுக்கைச் சட்டையும், நீல நிற பேண்ட்டும் அணிந்து — யாராவது வந்தார்களா?"

அட! அந்த இளைஞனைப் பற்றியல்லவா விசாரிக்கிறார்கள்? ஒருவேளை அந்த இளைஞர் இவர்களின் அதிகாரியோ? தோற்றம் அப்படித்தானே இருந்தது?

"ஆமாம் சார்! என்னிடம் கூடப் பேசினாரே!"

"அப்படியா? சபாஷ்! உன்னிடம் பேசிய பின்பு அவன் எந்தப் பக்கமாகப் போனான்? சீக்கிரம் சொல்லு!"

ஆங்கிலம் தமிழ் பேசுகிறது!



F – E யிடம்

"இப்படி எப்போதும் பல்லைக் காட்டிட்டு நிக்காதே."

M – W விடம்

"நீ இப்படி தலைகீழா நின்றாகூட அவனை உனக்குக் கட்டிவைக்க மாட்டேன்."

O – Q விடம்

"கொஞ்சம் வாலை மடக்கி வை."

R – P யிடம்

"எங்கே போயி காலை ஒடிச்சிட்டு வந்து நிக்கற."

I – S இடம்

"ஏன் இப்படி உடம்பை போட்டு வளைக்கிறே. கணுக்கு கிணுக்கு பிடிச்சுக்கப் போவுது.

-D. எழுசன்

– நன்றி: INDIMAGE

என்ன இது? அந்த இளைஞரை மரியாதைக் குறைவாக இந்தப் போலீஸ்காரர் பேசுகிறாரே!

குழம்பினான்.

அப்போது மற்றொரு போலீஸ்காரர், "சீக்கிரம் சொல் தம்பி! தாமதிக்காதே. அவன் ஒரு சங்கிலித் திருடன். சாலையில்செல்லும்பெண்களின் கழுத்தில் கிடக்கும் . சங்கிலியைப் போகிற போக்கில் அப்படியே இழுத்துப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிடுவது தான் அவன் தொழில்! சற்று நேரத்துக்கு முன்புதான் வழக்கம்போல் தன் கைவரிசையை ஒரு பெண்ணிடம் காட்டி விட்டான். அப்பெண் போட்ட கூச்சலில் பெரிய கூட்டமே கூடி விட்டது. நடந்த விஷயத்தை அந்தப் பெண் தன் பிரமையும் அதிர்ச்சியும் நீங்கி, முழுக்கப் புரியச் சொல்வதற்குள் ஏற்பட்ட நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு திருடன் சிட்டாய்ப் பறந்து விட்டான். எந்தத் திசையில் ஓடினான் என்பது தெரியாததால், கூட்டத்தினர் நான்கு குழுக்களாகப் பிரிந்து நாலா திசைகளிலும் விரட்டி வந்து கொண்டிருக்கிறோம். அதனால் தாமதப்படுத்தாமல் சீக்கிரம் சொல்!" என்றார்.

"ஆ.– அந்த ஆள் ஒரு திருடனா?" என்று அலறிய சியாமளன், "அப்படியானால் இந்தச் சங்கிலி?" என்று தன்னிடம் இளைஞன் தந்திருந்த சங்கிலியை போலீஸ்காரரிடம் நீட்டினான்.

அதைப் பார்த்ததுமே, "இந்தச் சங்கிலிதான்! இதுவேதான்!" என்றார் கூட வந்திருந்தவர்களில் ஒருவர் முக மலர்ச்சியோடு!

நடந்ததைச் சொன்ன சியாமளன், "அந்த ஆள் இந்தத் தோப்புக்குள் தான் போயிருக்கிறார் சார்!" என்றான்.

"இரண்டுபேர் இந்தப் பையனுக்குக் காவல் இருங்கள். மீதமுள்ள மூன்று பேரும் தோப்புக்குள் நுழைந்து அவனைத் தேடுவோம்!" என்றார் ஒரு போலீஸ்காரர்.

சியாமளனுக்கு அடிவயிற்றைக் கலக்கியது. 'தெரியாத்தனமாய் இந்தச் சம்பவத்தில் சிக்கிக் கொண்டோமே' என்று வருந்தினான்.

சற்று நேரத்தில் அந்த இளைஞனைப் பிடித்து இழுத்து வந்தார்கள் மூன்று பேரும்.


"நீயும் எங்களோடு காவல் நிலையத்துக்கு வா தம்பி! உண்மை... ச் சொல்லியதன்-மூலம் சமூக விரோதி ஒருவனைப் பிடிக்க எங்களுக்கு நீ உதவியிருக்கிறாயே! ஏற்கெனவே பலமுறை எங்களிடம் பிடிபட்டவன்தான் இவன். தோப்புக்குள் பதுங்கியிருந்தான். அங்கு அண்ணன் இருப்பதாக உன்னிடம் இவன் சொன்னது சுத்தப் பொய்! நீ நம்ப வேண்டும் என்பதற்காக அவ்வாறு கூறி உன்னை ஏமாற்றியிருக்கிறான்! நாங்கள் பிடிக்க வருகிறோம் என்பது தெரிந்துதான், சங்கிலியை உன்னிடம் கைமாற்றியிருக்கிறான்!" என்றார் ஒரு போலீஸ்காரர்.

போலீஸ் ஜீப்பைக் கூட்டி வருவதற்காக ஒரு ஆள் சைக்கிளில் விரைந்தார்.

இஸ்ரேல் நாட்டுக் கதை

ஆடு மேய்த்த சிறுவன் அரசன் ஆன கதை!

தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி



வெகு நாட்களுக்கு முன்னால் இஸ்ரேல் நாட்டில் ஈசாய் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு எட்டு பிள்ளைகள். முதல் ஏழு பிள்ளைகளும் போர் வீரர்களாகவும் இன்னும் பல நல்ல வேலைகளிலும் அமர்ந்தனர். ஆனால் கடைசிப் பிள்ளையான தாவீது மட்டும் அப்பாவுடைய செம்மறி ஆடுகளை மேய்த்து வந்தான். தாவீது சிறுவன். படு சுறுசுறுப்பு. அழகான தோற்றம். பிரகாசமான கண்கள்.

தாவீது நாள்தோறும் ஆடுகளுக்காக நல்ல புல்தரையைத் தேடித் திரிந்தான். ஒரு கையில் கவணும், இன்னொரு கையில் கம்பும் வைத்துக் கொண்டு அவன் ஆடுகளை நடத்திச் சென்றான். கவண் மூலம் அவன் கல்லை எறிவது ஓர் அழகு. ஆடோ அல்லது குட்டியோ மந்தையிலிருந்து விலகிப் போனால், அவன் கவணில் கல்லை வைத்துச் சுழற்றுவான். அந்தக் கல் 'விர்' என்று பறந்து சென்று சரியாக ஆட்டுக்கு முன்னால் விழும். அதைக் கண்டு பயந்த ஆடு மறுபடியும் மந்தைக்குத் திரும்பி விடும். இப்படிக் குறி பார்த்துக் கல் எறிவதில் தாவீது கெட்டிக்காரனாக இருந்தான்.

புல்தரைகளில் ஆங்காங்கே பாறைகளும், குகைகளும் இருந்தன. குகைகளில் கொடிய காட்டு மிருகங்கள் வசித்தன. ஒருநாள் ஒரு சிங்கம் மந்தைக்குள் நுழைந்து ஒரு ஆட்டுக்குட்டியைக் கவ்வியது. தாவீது ஓடிச் சென்று சிங்கத்தின் வாயிலிருந்து அந்தக் குட்டியை மீட்டான். சிங்கம் தாவீத்தின் மீது சீறியது. தாவீது சிறிதும் பயப்படவில்லை. சிங்கத்தின் பிடரி மயிரைப் பிடித்து உலுக்கினான். கைத்தடியால் அதன் மண்டையில் ஓங்கி அடித்தான். சிங்கம் கீழே விழுந்து இறந்தது. இன்னொரு சமயம் பயங்கரமான ஒரு கரடி ஆட்டு மந்தையில் புகுந்தது. தாவீது அதையும் தைரியமாக விரட்டியடித்து ஆடுகளைக் காப்பாற்றினான்.

தாவீத்திடம் ஒரு யாழ் இருந்தது. அவன் மிகவும் இனிமையாக யாழ் வாசித்தான். அந்த இசை கேட்பவர்களின் உள்ளத்தை உருக்கும்படியாகவும், கேளாதவர்களும் விரும்பிக் கேட்

குறள் ஒன்று கூறு

கா. மு. சிதம்பரம்



தினந்தோறும் குறளொன்று கூறு — அது
திகட்டாமல் இனிக்கும்தே றாறு
உடைமைகள் உனக்கென்று கூறும் — கற்றால்
உன் வாழ்வு புதுமலராய் நாறும்.

திருக்குறளில் இல்லாத தில்லை — அது
திசையெலாம் மணக்கின்ற முல்லை
மூவேந்தர் மடிவளர்ந்த பிள்ளை — குறள்
பாவேந்தர் வளர்த்திட்ட கிள்ளை.

கடமைகள் பலவற்றைச் சொல்லும் — அது
காலங்கள் தமையென்றும் வெல்லும்
முத்தாக விளங்கிடும் மொழிகள் — நீ
முன்னேறக் காட்டிடும் வழிகள்.

முப்பாலும் உனக்காகப் பேசும் — கடலுக்கு
அப்பாலும் தன்புகழை வீசும்
கல்லாமை குறையென்று ஏசும் — குறளைக்
கற்றோர்க்குத் துன்பங்கள் தூசு.

கும்படியாகவும் அவ்வளவு இனிமையாக இருந்தது. காலையிலும், மாலையிலும் அவன் இசையைப் பொழிந்து கொண்டே நடந்தான். இசையில் மயங்கிய ஆடுகள் அவன் போகும் இடம் எல்லாம் அவனைத் தொடர்ந்து சென்றன.

தாவீது தன் கடமைகளை ஒழுங்காகச் செய்தான். அவனுடைய மந்தையிலிருந்து ஒரு ஆடு கூடத் தொலையவில்லை. அவன் அமைதியாகவும், சந்தோஷமாகவும் இருந்தான். கடவுள் அருள் அவனுக்குத் துணையாக இருந்தது. ஆகவே அவன் சிறுவனாக இருந்த போதிலும் மற்ற இடையர்கள் அவனுக்கு மரியாதை அளித்தனர்.

அப்போது இஸ்ரேல் நாட்டைச் சவுல் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுடைய உள்ளத்தில் இறைவனைப் பற்றிய தூய சிந்தனை இருக்கவில்லை. ஆகையால் அவன் மன அமைதியின்றித் தவித்தான். கவலையும், குழப்பமும், கோபமும் அவனை மாறி மாறி வருத்தின.

அரண்மனைப் பணியாளர்கள் அரசனுக்காக மிகவும் இரக்கப்பட்டு, "அரசே! தீய சக்திகள் உங்களைக் கஷ்டப்படுத்துகின்றன. நல்ல இசையைக் கேட்டால் மனத்தில் அமைதி பிறக்கும் என்று சொல்லுகிறார்கள். இனிமையாக யாழ் வாசிக்கும் யாராவது ஒருவரை அழைத்து வர விரும்புகிறோம். அனுமதி கொடுங்கள்" என்று வேண்டினர். அரசன் சம்மதித்தான்.

வீரர்கள் நான்கு திசைகளிலும் சென்றனர். ஒரு வீரன் விரைவில் திரும்பி வந்து, "பெத்லகேமில் வசிக்கும் ஈசாயின் கடைசிப் பிள்ளை ஆடு மேய்க்கிறான். கண்ணுக்கு அழகானவன். தைரியமும், பலமும் நிறைந்தவன். செவி குளிர யாழ் வாசிக்கிறான்" என்று அறிவித்தான்.

"ஆடு மேய்க்கும் பிள்ளை தாவீத்தை உடனே என்னிடம் அனுப்பு", என்று அரசன் ஈசாயிக்கு ஒரு கட்டளை பிறப்பித்தான். ஈசாய் தாவீத்தை வரவழைத்து, அரசனுடைய உத்தரவைக் கூறினான்; உயர்ந்த வெள்ளை ரொட்டியையும், சுவையான சிவப்பு ஒயினையும், கழுதையின் மேல் ஏற்றி அரசனுக்

குக் காணிக்கையாக அனுப்பினான். தாவீது அரண்மனையை அடைந்தான்.

சுடர் விடும் கண்களும், சுறுசுறுப்பான பழக்கங்களும் கொண்ட தாவீத்தை அரசனுக்கு மிகவும் பிடித்தது. அரசன் அவனது யாழ் இசையைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தான். தன் அரண்மனையிலேயே அவனை வைத்துக் கொண்டான்.

அரசன் கவலையால் சோர்வுறும் போதும், குழப்பத்தால் தத்தளிக்கும் போதும் தாவீத்தை யாழ் இசைக்கச் சொன்னான். மெல்லிய விரல்களால் யாழை மீட்டித் தாவீது இசை மழை பொழிந்தான். அரண்மனையே அந்த இசை வெள்ளத்தில் மூழ்கியது.. அரசனுடைய கவலைகள் விலகின. புத்துணர்ச்சியும், புதிய உற்சாகமும் பிறந்தன.

முன்பு தாவீது ஆடு மேய்த்துக் கொண்டிருந்தபோது, ஒரு தீர்க்கதரிசி அவனைச் சந்தித்து, ''குழந்தாய்! எதிர்காலத்தில் நீ இந்த இஸ்ரேல் நாட்டுக்கு அரசனாக வரப்போகிறாய். இது ஆண்டவன் விருப்பம்'' என்று சொல்லியிருந்தார்; தாவீத்தை ஆசீர்வதித்து அபிஷேகமும் செய்திருந்தார். ஆனால், அந்தச் செய்தி சவுல் அரசனுக்குத் தெரியாது. அவன் நிம்மதியாகத் தாவீத்தின் இசையை ரசித்துக்கொண்டிருந்தான். அவன் தனது கவலைகள் நீங்கி உற்சாகம் பெற்றதும் தாவீது பழையபடி ஆடு மேய்க்கும் தொழிலுக்கே போக விரும்பினான். அரசனுக்கு அவனை விட மனமில்லை. ஆனாலும் தாவீது பழைய தொழிலுக்கே போக வேண்டுமெனப் பிடிவாதமாகக் கூறவே, அரசன் விடை கொடுத்து அனுப்பினான்.

பிலிஸ்தர் என்னும் இனத்தவர் இஸ்ரேலின் அண்டை நாட்டில் வசித்தனர். அவர்களில் பலர் கடல்கொள்ளைக்காரர்கள். மகா முரடர்கள். அவர்கள் இஸ்ரேலைக் கைப்பற்றுவதற்காக ஒரு பெரிய படையைத் திரட்டினர். இஸ்ரேலுக்குள் புகுந்து முகாமிட்டனர்.

எதிரிகளை முறியடிப்பதற்காக இஸ்ரேல்வீரர்கள் அணிதிரண்டனர். அவர்கள் பிலிஸ்தர்களின் முகாமுக்கு எதிரிலிருந்த குன்றின் மேல் கூடாரமடித்துத் தங்கினர். இடையில் ஒரு



பெரியபள்ளத்தாக்கு. அங்குதான் இரு தரப்பு வீரர்களும் கை கலக்க இருந்தனர்.

கோலியாத் என்ற மாவீரன் பிலிஸ்தர் படைக்குத் தளபதி. ராட்சசனைப்போன்ற உருவம். அவன் முகாமுக்கு முன்னால் வந்து கம்பீரமாக நின்றான். அவனுடைய தலைமுதல்கால் வரையில் கனமான இரும்புக் கவசங்கள் பளிச்சிட்டன. இடுப்பில் நீண்ட வாள். கைகளில் ஈட்டி, கேடயம். எதிரிலிருந்த இஸ்ரேல் வீரர்களை ஏளனமாகப் பார்த்து, "ஓ. இஸ்ரவேலர்களே! என்னோடு தன்னந்தனியாகப் போராடக் கூடிய வல்லமை படைத்தவன் யாரேனும் உங்கள் நாட்டில் உண்டா? அப்படியிருந்தால் தைரியமாக அவனை முன்னால் வரச் சொல்லுங்கள். அவன் என்னை வென்றால், நாங்கள் அனைவரும் உங்களுக்கு அடிமையாவோம். ஆனால் நான் அவனைக் கொன்றால், நீங்கள் அனைவரும் என்றென்றைக்கும் எங்களுக்கு அடிமையாவீர்கள்", என்று கோலியாத் இடி போன்ற குரலில் முழங்கினான்.



சவுல் அரசனின் படைத்தளபதிகள் அதைக் கேட்டனர். ஆனால், கோலியாத்தைஎதிர்க்கும்மனத்துணிவு அவர்களுக்கு இல்லை. அவர்கள் மௌனம் சாதித்தனர். தாவீத்தின் சகோதரர் மூவர் சவுல் அரசனின் படையில் பெரிய பதவிகளை வகித்தனர். அவர்களும் கோலியாத்தைக் கண்டு அஞ்சிப் பின் வாங்கினர். இவ்வாறு நாற்பது நாட்களாகக் காலையிலும், மாலையிலும் கோலியாத் தன் போர்க் குரலை எழுப்பிக் கொண்டே இருந்தான். இஸ்ரேல்மக்களில்ஒருவர் கூடக் கோலியாத்தின் சவாலை ஏற்க முன்வரவில்லை.

ஒரு நாள் பார்லி ரொட்டியையும், பாலடைக் கட்டியையும் எடுத்துக் கொண்டுதாவீது தன் சகோதரர்களைப் பார்க்க வந்தான். அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது, "ஓ இஸ்ரவேலர்களே! என்னோடு தன்னந்தனியாகப்போராடக்கூடியவல்லமை படைத்தவன் யாரேனும் உங்கள் நாட்டில் உண்டா....?" என எதிரிகளின் முகாமிலிருந்து வழக்கமான கர்ஜனை ஒலித்தது.

தாவீது தலை நிமிர்ந்து பார்த்தான். கவசங்கள் பளபளக்கக் கோலியாத் அட்டகாசமாக நின்று கொண்டிருந்தான். அவனையும், தன் சகோதரர்களையும் தாவீது மாறி மாறிப் பார்த்தான். எதிரிகளின் ஆணவத்தையும், தாய் நாட்டு வீரர்களின் கோழைத்தனத்தையும் கண்டு அவன் அதிசயப்பட்டான். "ஏன் இப்படிக் கோழைகளாக இருக்கிறீர்கள்?" என்று தாவீது தன் சகோதரர்களிடம் கேட்டான்.

"ஓகோ! சண்டையை வேடிக்கை பார்க்கத்தான் நீ இவ்வளவு தூரம் வந்திருக்கிறாயா? முதலில் இங்கிருந்து ஓடிப் போ!" என்று கோபத்தோடு அவனை விரட்டினர்.

"கோலியாத்தை யாரும் ஏன் எதிர்க்கவில்லை?" என்று தாவீது ஒரு வீரனிடம் கேட்டான்.

"கோலியாத்தை ஜெயிப்பவனுக்கு அரசர் தன் பெண்ணையே கல்யாணம் செய்து தருவதாகச் சொல்லியிருக்கிறார். இருந்தாலும், மலை போன்ற அந்த எதிரியை எதிர்க்கும் துணிச்சல் யாருக்கு வரும்?" என்று அந்த வீரன் பதிலளித்தான்.

''இது நம் நாட்டுக்கே அவமானம். இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டாமா?'' என்று தாவீது கேட்டான்.

ஆடு மேய்க்கும் ஒரு சிறுவன் படைத் தளபதிகளான தன் சகோதரர்களின் கோழைத்தனத்தைக் கண்டு ஆச்சரியப் பட்ட செய்தி, சவுல் அரசனின் காதுகளுக்கு எட்டியது. அரசன் சிறுவனைத் தன் சபைக்கு வரவழைத்தான்.

''கோலியாத்தைக் கொல்ல யாரும் முன் வராததால், நானே போகிறேன். அனுமதி கொடுங்கள்'', என்று தாவீது அரசனிடம் கேட்டான்.

''கோலியாத் ஒரு மாபெரும் வீரன். அனுபவம் மிக்க தளபதி. ஆனால், நீயோ சின்னஞ் சிறுவன். சிறிதும் அனுபவம் இல்லாதவன். வெகு எளிதில் உன்னை அவன் நசுக்கிவிடுவான்' என்றான் அரசன்.

'தாவீது சளைக்காமல், ''நான் ஏற்கெனவே ஒரு சிங்கத்தை ஜெயித்திருக்கிறேன். அந்த அதிகப் பிரசங்கியை நான் சிங்கத்துக்குச் சமமாக நினைக்கவில்லை'', என்று பதில் சொன்னான்.

சபையில் இருந்தவர்கள் தாவீது



சிங்கத்தைக் கொன்ற நிகழ்ச்சியை விரிவாக எடுத்துரைத்தனர்.

அதைக் கேட்ட அரசன் தாவீதிற்கு வேண்டிய கவசங்களையும், வேல், வாள் முதலிய ஆயுதங்களையும் அளித்து வாழ்த்தினான். கவசங்களை அணிந்து கொண்ட தாவீத்தால் ஓர் அடி கூட எடுத்துவைக்கமுடியவில்லை. "இந்தக் கவசங்களெல்லாம் எனக்குப் பழக்கமில்லை. நான் சிங்கத்தைச் சந்தித்தது போல இயல்பாகவே கோலியாத்தையும் சந்திக்க விரும்புகிறேன்", என்று சொல்லித் தாவீது கவசங்களைக் கழற்றினான். பழையபடி ஆடு மேய்க்கும் எளிய உடைகளை அணிந்தான். கைத்தடி, கவண், ஐந்து கூழாங்கற்கள் ஆகிய வற்றை எடுத்துக் கொண்டு கோலியாத்தை நோக்கி நடந்தான்.

ஓர் ஆடு மேய்க்கும் சிறுவன் தைரியமாக நடந்து வருவதைக் கண்டு கோலியாத் வாய்விட்டுச் சிரித்தான். "என்ன தம்பி! கைத்தடியை எடுத்து வருகிறாயே! நான் என்ன ஒரு நாயா?" என்று பரிகாசமாகக் கேட்டான் கோலியாத்.

"அருகில் வா. உன் மாமிசத்தைக் காக்கைக்கும், கழுகுக்கும் இரையாக்குவேன்", என்றான் தாவீது.

கோலியாத்தின் முகம்கோபத்தால் சிவந்தது. கவசங்கள் கலகலக்க அவன் மின்னலென முன்னேறினான். தாவீது கவணில் ஒரு கல்லை வைத்துக் குறி பார்த்து வீசினான். கல்லில் ஒரு கூரிய முனை இருந்தது. அது கோலியாத்தின் நெற்றியை ஒரு கோடரியைப் போலப் பிளந்தது. மாவீரன் கோலியாத் தலைகுப்புற மண்ணில் விழுந்தான். இரு தரப்புப் படைகளும் பேரிரைச்சல் போட்டன.

கோலியாத் நினைவிழந்து கிடந்தான். தாவீது ஓடிச் சென்று கோலியாத்தின் வாளை உருவி எடுத்தான். அந்த வாளாலேயே கோலியாத்தின் தலையை வெட்டினான். தலைவனை இழந்த பிலிஸ்தர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

சவுல் அரசனின் மகனான யோனத்தான் தாவீத்தின் வீரத்தைப் பாராட்டித் தன் பட்டாடைகளையும், ஆயுதங்களையும் அவனுக்குப் பரிசாக அளித்தான். இருவரும் நெருங்கிய நண்பர்களாயினர்.

மக்கள் தாவீத்தின் வீரத்தைப் போற்றிப்புகழ்ந்தனர். சவுல் அரசனை விட தாவீத்தையே அவர்கள் ஒரு பெரிய வீரனாக மதித்தனர். மக்கள் தன்னை மறந்துவிட்டுத் தாவீத்தைப் புகழ்வது அரசனுக்குப்பிடிக்கவில்லை. அவன்தாவீத்தைக்கண்டுபொறாமைப் பட்டான். அவனை வெறுத்தான். எப்படியாவது தாவீத்தை ஒழித்துவிடத் திட்டமிட்டான்.

ஆகவே, தாவீத்தை ஒரு சிறிய படைக்குத் தலைவனாக்கி, "பிலிஸ்தர்களை வென்று வா!" என்று கட்டளையிட்டான். "தாவீது திரும்பி வர மாட்டான், இறந்து விடுவான்", என்று அரசன் நினைத்தான்.

ஆனால் போரின் முடிவு வேறு விதமாக இருந்தது. தாவீது பிலிஸ்தர்களை வென்றான். வெற்றி வாகையோடு திரும்பினான். மக்கள் தாவீத்தை அதிகமாகப் புகழ்ந்தனர்.

எனவே, ஏற்கெனவே அறிவித்தபடி சவுல் அரசன்,தன் மகளைத் தாவீத்திற்கு மணம் செய்வித்தான்.

ஆயினும் தாவீத்தின் புகழ் அதிகரிக்க, அதிகரிக்க, அரசனுக்கு அவன் மேல் இருந்த கோபமும் அதிகரித்தது. தாவீத்தைக் கொல்ல, பல வழிகளையும் கையாண்டான். அதிர்ஷ்டவசமாகத் தாவீது தப்பித்துக் கொண்டான். அரசன் தன்னைக் கொல்வதிலே குறியாக இருக்கிறான் என்பதை அறிந்ததும், தாவூத் தன் அன்பு மனைவியையும், அருமை நண்பனை யோனத்தானையும் துறந்து மலைப் பிரதேசத்திற்குச் சென்று நிம்மதியாக வாழ்ந்தான். அவன் சவுல் அரசனின் நிலைக்கு இரக்கப்பட்டானே தவிர கோபம் அடையவில்லை. அரசனின் கோபம் ஒரு நாள் அன்பாக மாறும் என அவன் எதிர்பார்த்தான்.

இதற்கிடையில், பிலிஸ்தர்கள் மீண்டும் படையெடுத்தனர். அதில் சவுல் அரசனும், அவனுடைய பிள்ளைகளும் மாண்டனர். இஸ்ரேல் மக்கள் தாவீத்தைத் தங்கள் அரசனாக முடி சூட்டி மகிழ்ந்தனர்.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)
Editor: K. Rajendran



திருப்பூர் குமரன்

பிறந்த நாள்: 4-10-1904 மறைந்த நாள்: 11-1-1932

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

